# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20

பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 360 கார்த்திகை 5ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 21 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

## தாயகம், புலம்பெயர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவம்பர் 21

தமிழர்களின் உரிமைக்காக தமிழீழ இலட்சியத்துக்காகப் போராடி வீரச்சாவடைந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் நினைவேந்தல் வார நிகழ்வுகள், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கிலும், தமிழர்கள் வாழும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் இன்று ஆரம்பமாகின்றன.



சுமார் 8 ஆண்டுகளின் பின்னர் இந்த ஆண்டே மாவீரர் வாரம் தாயக மண்ணில் மீண்டும் புதுப்பொலிவுடன் சுடர்விட ஆரம்பித்துள்ளது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மௌனித்த பின்னர் மாவீரர் நினைவேந்தல் வாரத்தை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவுகூர முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. 7 வருடங்களின் பின்னர் கடந்த வருடம் முதல் மாவீரர் நாள் நினைவேந்தல் வடக்கு, கிழக்கில் தமிழர் தாயகத்தில் பகிரங்கமாக நினைவுகூரப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய வடக்கிலுள்ள 5 மாவட்டங்களிலும் » 25

# மகிந்தவுடன் கூட்டு இல்லை

## ஐ.தே.க. அமைச்சர்களிடம் மைத்திரிபால உறுதி

கொழும்பு, நவ. 21

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆதரவு பெற்ற சிறி லங்கா பொதுஜன பெரமுனவுடன் சிறி லங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி வைக்காது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியிடம் உறுதியளித்துள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களுக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையிலானசிறப்புச் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இதன்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த அணியுடன் இணைந்துபோட்டியிடுமா என்று ஐ.தே.க. அமைச்சர்கள் இருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மைத்திரிபால இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

மைத்திரி இவ்வாறு உறுதியளித்துள்ள போதிலும், மகிந்த அணியையும், மைத்திரி அணியையும் இணைப்பதற்கு சுசில் பிரேமஜயந்த » 04

# இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட ரூ. 3.5 கோடி தங்கம் மாட்டியது

## தமிழகத்தில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.21



இலங்கையில் இருந்து இந்தியாவுக்குக் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 3.5 கோடி ரூபா மதிப்பிலான 6.9 கிலோ தங்கம் நேற்று அதிகாலை மன்னார் வளைகுடா பகுதியில் கைப்பற்றப்பட்டது என இந்திய சுங்கத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

"இலங்கையில் இருந்து மன்னார் வளைகுடாப் பகு » 04

# வாள்களுடன் பயணித்த இருவர் நீர்வேலியில் கைது

யாழ்ப்பாணம், நவ. 21

ஓட்டோவில் 2 வாள்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் 2 பேர் நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியும் அவருடன் கூடப் பயணித்தவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். புத்தூரில் பயணித்துக்கொண்டிருந்தவர்களை மறித்துப் பொலிஸார் சோதனையிட்டபோது அவர்கள் பயணித்த ஓட்டோவிலிருந்து 2 வாள்கள் மீட்கப்பட்டன. அதனையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டனர். ஓட்டோ தடுத்து வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் நீதிவானிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் » 04

# பிணைமுறி ஏலத்துக்கு கட்டளையிட்டது நானே!

## பிணைமுறி ஆணைக்குழுவில் முற்பட்டு தலைமை அமைச்சர் ரணில் நேற்றுச் சாட்சியம்

கொழும்பு, நவ. 21

2015 முதற் காலாண்டில் அரசுக்குப் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்தது. ஏலத்தின் மூலமாக நிதியைத் திரட்டத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு ஆலோசனை வழங்கியிருந்தேன். » 25

# சிறுமியை வன்புணர்ந்த குற்றத்துக்காக குடும்பத் தலைவருக்கு 15 வருட கடூழியச் சிறை

## யாழ்ப்பாண மேல்நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 21

சிறுமியை 3 தடவைகள் வன்புணர்ந்த குடும்பத் தலைவருக்கு, ஒவ்வொரு வன்புணர்வுக்கும் தலா 15 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்ப்பாண மேல்நீதிமன்று. இழப்பீடாகச் சிறுமிக்கு 6 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது. கடூழியச் சிறைத்தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க முடியும் என்று நீதிமன்று உத்தரவிட்டதால் அவர் 15 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

வடமராட்சி கிழக்கைச் » 25

# வாள்வெட்டுக் கும்பல்களின் அட்டகாசம் அடக்க இதுவரை 81 பேர் கைது 75 பேருக்குப் பிணை

யாழ்ப்பாணம், நவ. 21

வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசத்தை அடக்கும் முயற்சியாக கடந்த சில நாள்களில் மட்டும் பொலிஸாரால் 81 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். மிகுதி 75 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னான்டோ தெரிவித்தார்.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 7 மோட் » 04

# துணிந்தே வந்தேன் ஒளிக்க ஒன்றுமில்லை

## சாட்சியமளித்த பின்னர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

"பிணைமுறி விவகாரத்தால் எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் ஆணைக்குழுவிடம் தெளிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கு மறைப்பதற்கு ஒன்றுமே இல்லை" » 04

# டிராக்டர் மூலம் செய்யும் கரைவலைக்குத் தடை

## அடுத்த வருடத்திலிருந்து முல்லையில் புதிய நடைமுறை

முல்லைத்தீவு, நவ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் அடுத்த வருடத்திலிருந்து உழவு இயந்திரத்தைப் (டிராக்டர்) பயன்படுத்தி கரைவலை இழுப்பதை முற்றாகத் தடை செய்வதென நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் அமைப்பினர் மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்தின் கட்டடத்தில் கரைவலை சம்மாட்டிமார்களை அழைத்து நேற்றுக் கூட்டம் நடத்தித் தீர்மானம் எடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உழவு இயந்திரத்தைப் பயன்படுத்திக் கரைவலை இழுப்பதால் கடற்கரை வளங் » 04

# அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி கலந்துரையாட உடன் ஏற்பாடு தேவை

## நீதி அமைச்சரிடம் சம்பந்தன் வேண்டுகோள்

கொழும்பு, நவ 21

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சட்ட மா அதிபர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுங்கள்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரளவிடம் நேற்று சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நீதி அமைச்சின் மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் » 25

# ரணிலும் கட்சியும் தப்பவே முடியாது!

## ஜே.வி.பி. ஆரூடம்

கொழும்பு, நவ. 21

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் » 25

# கைவிரித்தார் மைத்திரி

» 04

# ரணிலுக்கு முன்பாகவே மகிந்த ஆதரவுக் குரல்

## அமைச்சர்கள் எம்.பிக்கள் ஆணைக்குழுவில் குவிந்தனர்

கொழும்பு, நவ. 21

பிணைமுறி தொடர்பில் விசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையாகியிருந்தபோது, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக முழக்கங்கள் எழுப்பப்பட்டமை அனைவரினதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்க சாட்சியமளித்துவிட்டுச் செல்லும் வழியில் ஒரு குழு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக, "மகிந்த ஜெய » 04

# ஆணைக்குழுவில் நேற்று சுமந்திரனால் சர்ச்சை

கொழும்பு, நவ. 21

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தப்புல லிவேராவுக்கும், அரச தலைவர் சட்டத்தரணி சுமந்திரனுக்கும் இடையில் பிணைமுறி ஆணைக்குழுவில் நேற்று வாக்குவாதம் ஏற்பட்டது.

"கோப் குழுவின் உறுப்பினராக சட்டத்தரணி சுமந்திரன் செயற்பட்டுள்ளார். பதுமநாபன், கோப் குழுவில் சாட்சியமளிக்கும்போது சாட்சியத்தை சுமந் » 04

# கஞ்சா விற்க உடந்தை; பொலிஸ் அலுவலர் கைது

## அவர் ஏற்கனவே தண்டனை இடமாற்றம் பெற்றவர்

முல்லைத்தீவு, நவ. 21

வடக்கில் கஞ்சா பாவனை மற்றும் கடத்தல் அதிகரித்துள்ள நிலையில், கஞ்சா போதைப் பொருளை விற்பனை செய்ய உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். » 04

# டிசெம்பர் 12இல் ஓ.எல். பரீட்சை

கொழும்பு, நவ. 21

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை அடுத்த மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

டிசம்பர் 12ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும். 4 இலட்சத்து 29ஆயிரத்து 399 மாணவர் » 04



# காலபோகச் செய்கைக்காக திறக்கப்பட்டது இரணைமடு

யாழ்ப்பாணம், நவ.21

இரணைமடுக்குளத்தில் கடந்த இரண்டு வருட காலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த சீரமைப்பு நடவடிக்கைகளின் பின்னர் நீர்ப்பாசனத்துக்காக நேற்று முதன்முதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்திலும் அதனைத் தொடர்ந்து வட்டக்கச்சி ஒற்றைக்கைப்பிள்ளையார் ஆலயத்திலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர் தண்ணீர் திறக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா துருசுகளைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்தனர்.

வடக்கின் மிகப் பெரும் குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் ஏறத்தாழ 21 ஆயிரத்து 985 ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. கோடை காலத்தில் குளத்தில் தேக்கப்படுகின்ற நீரின் அளவு குறைவாக இருப்பதால், சிறுபோகத்தில் 8 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு மட்டுமே நீர்ப்பாசனம் செய்யக் கூடியதாக இருந்தது. குளத்தின் அணைக்கட்டுகளும், வாய்க்கால்களும் மிக நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாததால் வினைத்திறனுடன் நீர்ப்பாசனத்தை முன்னெடுக்க முடியாதிருந்தது.

குளத்தின் நீர்க்கொள்ளளவை 34 அடியிலிருந்து 36 அடிக்கு உயர்த்தி அதிகளவு நீர் கொள்ளளவை அதிகரிக்கும் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவை தற்போது நிலையில் உள்ளன. சிறுபோகத்தில் செய்கை பண்ணப்படும் பரப்பளவு 12 ஆயிரம் ஏக்கர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சீரமைப்புக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 2 ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்கியது. வாய்க்கால்களும், விவசாயவீதிகளும்சீரமைக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன. இதற்கு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் 3 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை வழங்கியது.

சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாலும் இந்த ஆண்டு மழைவீழ்ச்சி குறைவாக இருந்தமையாலும் குளத்தில் தற்போது 19 அடியே நீர் காணப்படுகிறது.

காலபோகத்துக்கான நீரை வழங்க வேண்டும் என்று கமக்கார அமைப்புகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், சீரமைப்புப் பணிகள் நிறைவடையவுள்ள நிலையில் முதற்தடவையாகக் குளம் திறந்து விடப்பட்டுள்ளது.

வடமாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி வே.பிறேமகுமார், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ந.சுதாகரன், இரணைமடுக் கமக்கார அமைப்புகளின் சம்மேளத்தின் செயலாளர் மு.சிவமோகன், முன்னாள் தலைவர் செ.சிவப்பிரகாசம் ஆகியோருடன் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ற101)

# வவுனியாவில் தீ விபத்து கடை முற்றாகச் சேதம்



வவுனியா, நவ.21

வவுனியா பசார் வீதியில் நேற்று நடந்த தீ விபத்தில் ஒரு கடை முற்றாகத் தீயில் சேதமடைந்தது. இரு கடைகள் பகுதியளவில் சேதமடைந்தன.

வவுனியா நகரபள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியில் 14 கடைகள் காணப்படுகின்றன. அந்த கடைத் தொகுதியிலேயே திடீரென தீப்பற்றியது.

தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர், பொலிஸார் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கடையின் ஒரு பக்கத்திலிருந்தே தீப்பற்றியதற்கான அடையாளங்கள் காணப்படுவதாலும் மின்சார ஒழுக்கால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் வெடிச் சத்தம் கேட்டது என்றும், அதன்பின்னரே கடைகள் தீப்பிடித்தன என்றும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

தீ விபத்தை அடுத்து வவுனியா பஸார் பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம் மற்றும் அய்யூப் அஸ்மின் ஆகியோர் சம்பவ இடத்துக்குச்சென்று அங்கிருந்தவர்களுடன் கலந்துரையாடினர்.

"அசம்பாவிதத்தின் உண்மைக் காரணிகள் கண்டறியப்பட்டு அவை சட்ட ரீதியாக அணுகப்பட வேண்டும்.

எவரேனும் செயற்கையாக இந்த அசம்பாவிதத்தை தோற்றிவித்திருந்தால் அவர்கள் சட்டரீதியாக தண்டிக்கப்படவேண்டும்.

இவற்றை காரணமாக வைத்து இன முரண்பாடொன்றை தோற்றுவிப்பதற்கு எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

பிரதேச வர்த்தகர்களும், மக்களும் அமைதியாக இருந்து பொலிஸ் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி உண்மைகளை கண்டறிய உதவ வேண்டும். இன நல்லிணக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டும்." என்று அவர்கள் தெரிவித்தனர்.

(ற-ரி5)

# நுரைச்சோலை மின்னுற்பத்தி மீள ஆரம்பம்

கொழும்பு, நவ.21

கடந்த 2 வாரகாலமாக செயலிழந்திருந்த நுரைச்சோலை லக்விஜய அனல் மின்நிலையத்தின் ஒரு இயந்திரம் நேற்று இரவு முதல் வழமைபோல் இயங்க ஆரம்பித்துள்ளது. 300 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின்வலைப் பின்னலுடன் ஒன்றிணைக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் நிலைபேறான அமைச்சின் ஊடகப்பேச்சாளர் லக்ஸ்மன் ஜயவர்த்தன தெரிவித்தார்.

திருத்தல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக இரண்டு இயந்திரங்களின் மூலமான மின்னுற்பத்தி நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அதில் ஒரு இயந்திரம் தற்பொழுது மீண்டும் செயற்படக்கூடியதாக உள்ளது என்று தெரிவித்தார்.

(ற)

# இந்திய மீனவர்கள் 11 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ.21

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்றுக் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுக் காலை தமிழகத்தின் நாகை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் 11 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடல் சீற்றம் மற்றும் படகு இயந்திரக் கோளாறால் திசைமாறி வந்தோம் என்று கைது செய்யப்பட்ட நாகை மீனவர்கள் 11 பேரும் தெரிவித்தனர்.

காரைநகர் கடற்படைத் தளபதி தர்ஷன் ரெத்தியா ராஜ், இலங்கை கடற்படை தளபதி ரணசிங்கவிடம் ஆலோசனை செய்த பின்னர் அவர்களின் படகை பழுது நீக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட படகில் உள்ள மீனவர்கள் அனைவரிடமும் கடிதம் எழுதி கையெழுத்து பெற்று பின்னரே விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி5,8)

# மட்டக்களப்பில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி



மட்டக்களப்பு,நவ.21

போதையற்ற நாட்டை உருவாக்கும் திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு பேரணி நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து இந்தப் பேரணியை முன்னெடுத்தனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சி.சி.ர.குமார தலைமையில் ஆரம்பமான இந்தப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் உட்பட கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

(ற-ரி5)





# கச்சாய் அ.த.க.பாடசாலையில் நாடாளுமன்ற 2ஆவது அமர்வு

தென்மராட்சி நவம் 21

கச்சாய் அ.த.க.பாடசாலையின் இரண்டாவது மாணவர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு நேற்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபரும் மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான கா.குணசிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

அமர்வுக்கு முதன்மை விருந்தினராக் போக்கட்டி அ.த.க.பாடசாலை அதிபர் தி.அபராஜிதனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமாரும் கலந்து கொண்டனர்.

ரி2,9

# திண்ம கழிவகற்றல் மூலம் டெங்கைக் கட்டுப்படுத்தலாம்

## வடக்கு முதலமைச்சர் யோசனை

யாழ்ப்பாணம், நவ. 21

திண்மக் கழிவு அகற்றல் வேலைத்திட்டம் மூலம் டெங்கு மலேரியா போன்ற விரைவாகப் பரவி வரும் நோய்த் தொற்றுக்களைத் தடுக்கலாம். இது எமது குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களை ஆரோக்கியமான குழந்தைகளாக வளர்த்தெடுப்பதற்கான சிறந்த திட்டமாகும் வட. மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள குருநகர் ஐந்தாம் மாடி குடியிருப்புப் பகுதியில் விசேட திண்மக் கழிவு அகற்றல் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பமானது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடபகுதியில் பரவிவரும் டெங்குத் தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர்களும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் முயற்சிகளை எடுத்துள்ளனர்.

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் பெருமளவில் குவிந்து கிடக்கும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கென சிறப்புத் திண்மக் கழிவு அகற்றல் செயற்திட்டம் ஒன்று இன்று தொடக்கம் (நேற்று) எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் டெங்குத் தொற்றிலிருந்து எமது குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களை ஆரோக்கியமான குழந்தைகளாக வளர்த்தெடுக்க முடியும்.

அதனை யாழ். மாநகரசபை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்கள் ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளன.

இன்று வடபகுதியில் பொதுமக்கள் குப்பைகள் மற்றும் நுளம்பு பெருகக் கூடிய பொருள்களை வீதிகளிலும் வெற்றுக்காணிகளிலும் என ஆங்காங்கே. கொட்டி விட்டுச் செல்கின்றனர். அதனால் நுளம்பு பெருகுகின்றன. எனவே பொதுமக்கள் தமது ஒத்துழைப்புக்களை முழு அளவில் வழங்குகின்ற போதே திண்மக் கழிவு அகற்றல் நிகழ்வு சிறப்பாக அமையும்.

நாம் எல்லோரும் சேர்ந்ததே இந்த யாழ்ப்பாண நகரம். எமக்குள் ஒற்றுமை வேண்டும். விட்டுக் கொடுப்பு வேண்டும். அப்போது தான் நாம் யாவரும் இந்த நகரத்தைச் சுத்தமாகவும் சுகாதார மாகவும் சீரிய சுற்றுச் சூழல் உடையதாகவும் மாற்றலாம். என்றார்.

ஆரம்ப நிகழ்வாக குருநகர் ஐந்து மாடிக் குடியிருப்பிலிருந்து கடற்கரை வீதிவரை கடலில் இருந்து அகற்றப்பட்ட கழிவுகளை அகற்றுகின்ற நிகழ்வு நடைபெற்றது.

(ற.ரி4)



# பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்



மலையகம்,நவ.21

பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான பெருந்தோட்டப் பகுதி மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பதுளை மாநகர நூலக கேட்போர் கூடத்தில்வைத்து 15 ஆயிரம் ரூபாவுக்கான புலமைப்பரிசில்கள் 21 மாணவிகளுக்கு வழங்கப் பட்டன.

நிகழ்வில் பதுளை மாநகர நூல் நிலையத்துக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கணிதம் மற்றும் விஞ்ஞான உயர் வகுப்புகளுக்கான புத்தகப் பொதிகளும் வழங்கப் பட்டன.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி துரையப்பா பிரைதீபன், பதுளை மாநகர ஆணையாளர் அனுராத ஹேரத், எப்.அய்.ஓ. எய்ச். தலைவர் ஜீ.ஏ. பிரபாத்குமார், ஊவா சக்தி தலைவர் நடேசன் சுரேஸ்,பல்கலைக் கழக நூலகர் சத்துரிகா திலானி மற்றும் மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ரி2)



# வீதியை சீரமைத்து தரக் கோரி கிளிநொச்சி மக்கள் போராட்டம்

கிளிநொச்சி,நவ.21

கிளிநொச்சி, அக்கராயன்குளம் பிரதேச மக்கள் கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டிருந்தனர்.

அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம் வீதியை மறுசீரமைத்துத் தரக் கோரியே போராட்டம் இடம்பெற்றது. அந்தப் பகுதியில் உள்ள சுமார் 800 குடும்பங்கள் இந்த வீதியைப் பயன்படுத்துவதாகவும், 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் நாளாந்தம் குறித்த வீதியை பயன்படுத்தி வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஸ்கந்தபுரம், அக்கராயன் ஆகிய இரு கிராமங்களை இணைக்கும் சுமார் 4 கிலோமீற்றர் வீதியை மறுசீரமைப்புச் செய்து தருமாறு அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரின் கவனத்துக்கு கொண்டு சென்றோம். ஆனால் இதுவரை எவ்வித பயனும் ஏற்படவில்லை. என்றும் அவர்கள் தெரிவித்தனர். கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் உள்ளிட்டவர்கள் குறித்த வீதியில் பயணிக்க முடியவில்லை, வாகனங்களும் பயணிக்க முடியவில்லை எனத் தெரிவித்த மக்கள், இவ் வீதியில் அரசியல்வாதிகள் பயணிப்பார்களா எனவும் கேள்வி எழுப்பினார்கள். "பள்ளி மாணவர்களின் சீருடைகள் காவியுடையாகுது பார், பேருந்தில் போகும் போகு வலிக்கிறது எமது வயிறு, பாதை எல்லாம் படுகுழியாய் கிடக்குது பார், மாணவர்கள் ஆசிரியர்கள் பிரயாண தாமதமாக பாடசாலை செல்கின்றனர்." போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் தாங்கியிருந்தனர்.(ற-ரி2,6,35)

# வவுனியாவில் ஒரு நாள் இலவச மருத்துவ முகாம்

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா இறம்பைக்குளம் ஈஷி பூரண சுவிஷேச சபையினரின் அனுசரணையில் வன்னி மாவட்ட சமுதாய பொலிஸ்பிரிவின் உதவியுடன் சிதம்பரபுரம் காவல் அரணில் இவ் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றுள்ளது. கண்ணாடி வழங்கல், பல் மருத்துவம், ஏனைய வியாதிகளுக்கு மருந்து வழங்கல் போன்ற சேவைகள் மருத்துவ முகாமில் இடம்பெற்றன. நிகழ்வில் ஈஷி பூரண சுவிஷேச சபையின் பிரதான ஆயர் பி. என்.இராஜசிங்கம் (இ.பி.எம்) மற்றும் பிரதான போதகர்கள், வன்னி மாவட்ட சமுதாய பொலிஸ் பிரிவு நிலையத்தின் அதிகாரிகள், சிதம்பரபுரம் காவல் அரணின் பொறுப்பதிகாரி எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாகப் பல பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் நீண்ட காலமாக தங்க வைக்கப்பட்டு தற்போது அப் பகுதியில் சிதம்பரம் எனும் கிராமத்தில், மீள் குடியேறிய மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் இலவச நடமாடும் சேவையினை மேற்கொள்ள முடிந்துள்ளதாக ஈஷி பூரண சுவிஷேச சபையின் ஆயர் தெரிவித்தார். (ரி2)



# சுகாதார மேம்பாட்டு பரிசளிப்பு விழா



வவுனியா,நவ.21

டெங்கு தொடர்பான சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான, பரிசளிப்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.லவன் தலைமையில் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையுடன் இணைந்து வவுனியா நகர சபை , வவுனியா தெற்கு பிரதேச சபை என்பவற்றின் பங்களிப்புடன் பாடசாலை மட்டத்திலும் திணைக்களங்கள் மட்டத்திலும் கிராம மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளை வலுவூட்டும் நோக்கில் போட்டிகள் நடத்தப்பட்டன.

அவற்றில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும், டெங்கு அற்ற பாடசாலை, திணைக்களங்கள் என்பவற்றுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

இராஜேந்திரகுலம் ஒமேகா லைன் ஆடைத்தொழிற்சாலை, ஓகன் அரச சார்பற்ற நிறுவனம், வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு பிரதேச சபை என்பவற்றின் அனுசரணையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில், வவுனியா பிரதிப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் எம்.மகேந்திரன், வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் வி.சிறீஸ்கந்தராஜா, வவுனியா தொற்று நோயியலாளர் மருத்துவர் யூட் பீரிஸ், வவுனியா நகரசபை செயலாளர் இ.தயாபரன், வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளர் சுகந்தி கிசோர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.மேஜெயா, மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் , கிராம சேவையாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி2)



## டிசெம்பர்...

கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். 5 ஆயிரத்து 116 நிலையங்களில் பரீட்சை இடம்பெறவுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (உ-4)

## டிராக்டர்...

கள் அழிவடைந்து செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது என்று பலதரப்பட்டவர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சரும் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

வடக்குக் கடற்கரையில் உழவு இயந்திரம் மூலமாகக் கரைவலை இழுப்பது தொடர்பில் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் கடற்றொழில் அமைச்சுக்குத் தெரியப்படுத்த வேண்டியுள்ளதால் இது தொடர்பில் தெளிவான முடிவை எடுக்குமாறு சம்மாட்டிமார்களிடம் அதிகாரிகள் கோரினர். அந்த முடிவின் அடிப்படையிலேயே அடுத்த வருடத்துக்குக் இந்த கரைவலை இழுப்பவர்களுக்கு அனுமதி கொடுப்பதா இல்லையா என்ற தீர்மானம் கொழும்பு அரசிடம் இருந்து கிடைக்கப்பெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிக விலைக்கு உழவு இயந்திரங்களை வாங்கித் தாம் தொழில் செய்கிறார்கள் எனவும், தங்கள் முதலைக்கூட எடுக்காத நிலையில் அதைத் தடை செய்யக்கூடாது என்றும் ஒரு சிலர் தெரிவித்தனர். எனினும் பெரும்பாலான சம்மாட்டிமார்கள் உழவுஇயந்திரம் பயன்படுத்தும் கரைவலைத் தொழில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் தேவையில்லை என்று தெரிவித்தனர்.

கடற்கரையில் உள்ள இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதைக் கருத்திற்கொண்டும் பெரும்பாலான மீனவர்களின் கருத்துக்களின் அடிப்படையிலும் அடுத்த வருடம் தொடக்கம் உழவு இயந்திரம் பயன்படுத்தி கரைவலை இழுப்பதை முற்றாக தடைசெய்வது என்று தீர்மானம் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இங்கு எடுக்கப்பட்ட தீர்மானமும் அறிக்கையும் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் ஊடாக மத்திய மீன்பிடி அமைச்சு, வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சு மற்றும் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், மாவட்டச் செயலர் உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்பின் தலைவர் ஜெயா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கலிஸ்ரன், கடற்றொழில் பரிசோதகர் மோகன்குமார், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள், வலைஞர்மடம் தொடக்கம் அளம்பில் வரையான கரையோர சம்மாட்டிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-4,ரி3)

## கஞ்சா...

பொலன்னறுவையிலிருந்து வந்திருந்த பொலிஸ் குழுவே குறித்த கொன்ஸ்டபிளைக் கைது செய்தது. கைதாகி இருப்பவர் முன்னர் ஏ9 நெடுஞ்சாலையில் மாங்குளத்தில் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் பணியாற்றியவர். தண்டனை இடமாற்றம் பெற்று அவர் முல்லைத்தீ வுக்கு அனுப்பப்பட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணை களின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வடக்கில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் கடத்தல்களுடன் பொலிஸார் சிலருக்குத் தொடர்புண்டு என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கடந்த வாரம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெளிப்படையாகவே கூறியிருந்தார். அவ்வாறு தொடர்புடையவர்களாக வடக்கில் உள்ள பொலிஸ் குழுக்களால் எந்தவொரு பொலிஸாரும் நேற்று வரை கைது செய்யப்படாத நிலையில் பொலன்ன றுவையிலிருந்து வந்திருந்தபொலிஸ்குழு கஞ்சாவிற்பனைக்கு உடந்தை எனக் கூறப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-4,ரி3)




## மரண அறிவித்தல்

# தம்பியப்பா சிதம்பரநாதன்

(இளைப்பாறிய திட்ட அமுலாக்கல் அதிகாரி,முன்னாள் NEIAP திட்ட உதவி அதிகாரி,வவுனியா)



தோற்றம் 25.06.1945 — மறைவு 20.11.2017

யாழ். மண்டைதீவைப்பிறப்பிடமாகவும் சுருவிலை வதிவிடமாகவும் தற்போது யாழ்.கொக்குவிலில் வசித்தவருமான தம்பியப்பா சிதம்பரநாதன் நேற்று (20.11.2017) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா வேதநாயகி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் அன்னம் தம்பதியினரின் அன்பு மருமகனும் யோதீஸ்வரியின்(சந்திரா) ஆருயிர்க்கணவரும் ஷாமினி (வைத்தியர்), நிஷாந்த்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாந்தின் (வைத்தியர்) அன்பு மாமனாரும் தில்லைநாதன்(அமரர்), சக்திவேல் (அமரர்),தமோதரம்பிள்ளை,பரம்சோதி(அமரர்),அன்னலட்சுமி(அமரர்), தெட்சணாமூர்த்தி(அமரர்), காங்கேசன்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும்மகேஸ்வரி, அன்னலட்சுமி, புஸ்பவதி, குணேஸ்வரி, தயாபரன்(அமரர்). தியாகேஸ்வரி, ஜெயந்தி, சதாசிவம், கருணநாயகி,புவனேஸ்வரி(அமரர்),கோபாலகிருஸ்ணன்(அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவிலில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை(22.11.2017) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**Dr.பிரசாத் (077 903 0003)**
**Dr.ஷாமினி (077 474 7204)**
**நிஷாந்த்(00447949074984,லண்டன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வாள்களுடன்...

30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார்.

அவர்கள் வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்புடையவர்களா என்பது பற்றிய விசாரணை தொடர்கிறது. எதற்காக வாள்களைக் கொண்டு சென்றனர் என்பது உள்ளிட்ட பல கோணங்களிலும் விசாரணை இடம்பெறுகிறது. என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாள்வெட்டுக்கள், அடாவடிகள் சில வாரங்களாக அதிகரித்திருந்தன. இதனால் பலர் பாதிக்கப்பட்டனர். அதனையடுத்து வாள்வெட்டுக் குழுக்களைக் கட்டுப்படுத்தவென பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் இரவில் அதிகளவில் காவலில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். அவ்வாறிருந்தும் உரும்பிராயில் நேற்றுமுன்தினமிரவு வாள்வெட்டுக் குழுக்கள் அடாவடியில் ஈடுபட்டிருந்தன. (உ-4)

## ரணிலுக்கு...

வேவா" எனக்பெரும் குரல்எழுப்பினர். இதனை அவதானித்த அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்தக் கும்பலைக் கண்டு கொள்ளாது விரைந்து வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டனர். அதனைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் கலைய ஆரம்பித்துவிட்டனர்.

ரணிலின் சாட்சியப் பதிவுகளைப் பார்வையிடுவதற்காக 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் ஆணைக்குழுவுக்கு வருகை தந்திருந்தனர். அத்தோடு, மாகாணசபை உறுப்பினர்களும் கட்சி ஆதரவாளர்களும் சூழந்ததால் ஆணைக் குழுவில் பலத்த நெருக்கடி காணப்பட்டது. சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு, தலைமை அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு என்று பாதுகாப்பும் தீவிரப்படுத்தப் பட்டிருந்தது.

சுமார் 65 நிமிடங்கள் வரையில் சாட்சியமளித்த ரணில் விக்கிரமசிங்க சாட்சியமளிக்க ஆரம்பிக்கும்போது உங்களது பெயர் என்ன என்று கேட்டவுடன் ஒரு புன்னகையுடன் பதிலளிக்கத் தொடங்கினார்.

உங்களது முகவரி என்ன என கேட்கப்பட்ட கேள்விக்கு ஆணைக்குழுவின் தலைவர் அது அவசியமற்றது என அந்தக் கேள்வியை நிராகரித்துவிட்டார். (உ-4)

## இலங்கையிலிருந்து...

தியூடாகத் தங்கம் கடத்திச் செல்லப்படுகின்றது எனச் சுங்கத் துறையினருக்குத் தககவல் கிடைத்தது. மத்திய உளவுத்துறையினர், கடலோரக் காவல் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். மன்னார் வளைகுடா கடல் பகுதியால் மண்டபம் வடக்கு கடற்கரைப் பகுதிக்கு வந்த படகு வழிமறிக்கப்பட்டது. அதிலிருந்த மூவர் தப்பிச் சென்றனர். ஒருவர் கைதுசெய்யப்பட்டார். படகிலிருந்து 6.9 கிலோ தங்கம் மீட்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மதிப்பு இந்திய மதிப்பில் சுமார் 1.75 கோடி" ரூபா எனஅதிகாரிகள் கூறினர்.

சம்பவத்தை அடுத்து மன்னார்வளைகுடா மற்றும் பாக்கு நீரிணைக் கரையோரம் 24 மணி நேரம் தீவிர கண்காணிப்பில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இலங்கையிலிருந்து தங்கம் கடத்தி வரப்பட்டு பறிமுதல் செய்யப் பட்டது உள்ளூர் பாதுகாப்பு வட்டாரங்கள் மற்றும் ராமநாதபுரம் கடலோரப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (உ-21)

## கைவிரித்தார்...

யாழ்ப்பாணம், நவ. 21

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளதால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாகக்கூறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு அரச தலைவர் அலுவலகத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

"அரசியல் கைதிகளின் விவகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ளதால் அவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியவில்லை" என்று அந்தக் கடிதத்தில் காரணம் கூறப்பட்டுள்ளது. அதற்காக வருந்துகிறோம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. அதில் அரச தலைவரின் மூத்த உதவிச் செயலாளர் சமந்தி ரணசிங்க கையெழுத்திட்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மீண்டும் ஒரு சந்திப்புக்கு அனுமதி கோரி பல்கலைக்கழக மாணவர்கள் அரச தலைவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அரச தலைவருடன் அவர்கள் ஏற்கனவே ஒரு சந்திப்பை நடத்தியிருந்தனர். அப்போது சில நாள்கள் அவகாசம் தருமாறு அவர் கேட்டிருந்தார். ஆனால் அந்தக் கால அவகாசத்துக்குள் அவர் எதனையும் செய்யவில்லை. இதையடுத்து மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு மற்றும் பல்கலைக்கழக முடக்கப் போராட்டங்களை நடத்தியிருந்தனர். அதனாலும் பயன் ஏதும் ஏற்படவில்லை. (உ-4)

## இதுவரை...

டார் சைக்கிள்கள் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணை இடம்பெறுகிறது. இந்த நடவடிக்கை தொடரும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாள்வெட்டுக் குழுக்களின் அடாவடி அதிகரித்துள்ள நிலையில் இந்தப் பொலிஸ் குழு அமைக்கப்பட்டது. தினமும் மாலை நேரங்களிலிருந்து நள்ளிரவுவரை இந்தச் சுற்றி வளைப்பும் தேடுதலும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-4,26)

## மகிந்தவுடன்...

மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையிலான சிறப்புச் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இதன்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த அணியுடன் இணைந்துபோட்டியிடுமா என்று ஐ.தே.க. அமைச்சர்கள் இருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மைத்திரிபால இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

மைத்திரி இவ்வாறு உறுதியளித்துள்ளபோதிலும், மகிந்த அணியையும், மைத்திரி அணியையும் இணைப்பதற்கு சுசில் பிரேமஜயந்த தலைமையிலான குழுவொன்று தீவிர் முயற்சியெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-4)

## ஆணைக்குழுவில்...

திரனே வழிநடத்தியுள்ளார். எனவே, பிணைமுறி ஆணைக்குழுவில் அவர் முன்னிலையாவது சட்டவிரோதம்" என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தப்புல லிவேரா வாதிட்டார்.

ஆணைக்குழுவில் முன்னிலையாவது தனது அடிப்படை உரிமை என்றும், அதற்கான உரிமை தனக்கு உள்ளது என்றும் பிரிவு 23ஐ ஆதாரம் காட்டி தனது மனுவை ஆணைக்குழுவுக்கு சுமந்திரன் வழங்கினார். தான் பதுமநாபன் சார்பில் முன்னிலையாகியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர்கள், இருவரினது மனுக்களையும் ஆராய்ந்து பதிலளிக்கப்படும் என்றும், இன்றைய தினம் (நேற்று) நடைபெறும் பிணைமுறி விசாரணை செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்காமல் செயற்படுமாறும் கேட்டுக் கொண்டனர். (உ-4)

## துணிந்தே...

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பில் அரச தலைவர் விசாரணை ஆணைக் குழுவில் நேற்று சாட்சி வழங்கிய பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கியமைக்காக ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். நாட்டின் பொருளாதாரம், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு உள்ளிட்ட பல விடயங்களைத் தெளிவுபடுத்தினேன். எமது கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் அமைச்சர்களும் எந்தவித பயமுமின்றி ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளித்தனர்.

எனக்குத் தெரிந்த விடயத்தை நான் கூறினேன். நல்லாட்சி அரசு ஒருபோதும் ஊழல் வாதிகளுக்குத் துணைபோகாது. நானும் எனது கட்சியின் தலைவர், செயலாளரும் அமைச்சர்களும் எந்த அச்சமுமின்றியே இன்று இந்த விசாரணை ஆணைக்குழுவுக்கு வந்தோம். ஒன்றை மட்டும் தெளிவாகக் கூறமுடியும். இந்த நல்லாட்சியை நாம் முன்னெடுத்துச் செல்வோம். எம்மிடம் குறைபாடுகள், தவறுகள் இருக்கலாம். எனினும், இந்த நல்லாட்சி தொடரும்"என்றார். (உ-4)

# சேகண்டி வீதியில் தேங்கும் வெள்ள நீரால் பெரும் சிரமம்

## அதிகாரிகள் பாராமுகம் பிரதேச மக்கள் விசனம்

வல்வெட்டித்துறை, நவ.21
வல்வெட்டி, சேகண்டிவீதியில் தேங்கும் வெள்ள நீரால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.
இது தொடர்பில் 2015இல் இருந்து பல முறை பருத்தித்துறை நகர சபைக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் அவர்கள் அது தொடர்பில் அக்கறையற்று உள்ளனர் என்றும் தெரிவித்தனர்.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
சேகண்டி வீதியில் இருந்து வல்வெட்டித்துறைக் கடலுக்குச் செல்லும் வீதி வரை வெள்ளநீர் தேங்கி நிற்கி ன்றது. வீதி அமைக்கப்படும்போது வெள்ளநீர் வழிந்தோடும் வகையில் அமைக்கப்படவில்லை. தேங்கும் வெள்ள நீரால் சுகாதாரப் பிரச்சினைகளும், நுளம்புத் தொல்லையும், தொற்று நோய்களும் ஏற்படுகின்றன.
எமது ஊரில் இருந்துதான் பல இடங்களுக்குக் குடி தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர். நகர சபை கூட இங்கிருந்துதான் தண்ணீர் எடுத்துச் செல்கின்றது. வீதிகள் வெள்ளக்காடாக இருப்பதால் குடிதண்ணீர்எடுப்பதும்பிரச்சினையாகவுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.
அதேவேளை, வல்வெட்டி வேவில் பிள்ளையார் கிழக்குப்புறமுள்ள கொங்கிறீற் வீதியின் இருபுறமும் புதர்கள் வளர்ந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளன. வீதியின் இருபுறமும் கிரவல் மண் இடப்படாதுள்ளதால் போக்குவரத்தின் போது விபத்துக்கள் ஏற்படுகின்றன.
வெள்ளம் ஒருபுறமிருக்க எமது வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை. அதனால் இரவு வேளைகளில் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளது. அண்மையில் ஓரிரு இடங்களில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. அவற்றில் பல உரியவாறு ஒளிர்வதில்லை.
தேர்தல் காலங்களில் மட்டும் வீடு வீடாக வரும் வேட்பாளர்களும் அவர்களது ஆதரவாளர்களும் பல வாக்குறுதிகளை வழங்கி வெற்றியடைகின்றார்கள். ஆனால் வாக்குறுதிகள் செயலிழக்கின்றன. இப்படியான காலப் பகுதிகளில் மக்களின் துன்ப, துயரங்களை பார்வையிட வராது தமது சுக போக வாழ்க்கையில் அடுத்த கட்டத்தைப் பற்றி யோசிக்கிறார்கள் மக்கள் நலனில் அக்கறை கொள்வதாக இல்லை.
சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி ஏற்படுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (எ.21)



## தென்மராட்சி வலய தமிழ்த்தின விழா

தென்மராட்சி, நவ. 21
தென்மராட்சி கல்வி வலயம் நடத்திய தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் பாராட்டு நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரி மகளிர் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வர் ச.லலீசன் கலந்து கொண்டார்.
நிகழ்வில் வலய, மாகாண, தேசிய நிலைத் தமிழ்த்தினப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கியும் நினைவுக்கேடயங்கள் வழங்கியும் மதிப்பளிக்கப்பட்டனர்.
நிகழ்வில் தமிழ்த்தினப் போட்டிகளில் தென்மராட்சி சார்ந்து பங்கேற்று வெற்றிகளைப் பெற்ற கலை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டதோடு தென்மராட்சியின் தமிழ்ப்பாட வளர்ச்சிக்காகப் பங்களித்தமைக்காக சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் நினைவுக் கேடயங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (எ)

## காங்கேசன்துறையில் சர்வமதப் பிரார்த்தனை



வடமராட்சி,நவ.21
அகில இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சர்வமத பிரார்த்தனை நேற்றுமுன்தினம் காங்கேசன்துறையில் நடைபெற்றது. காங்கேசன்துறையிலுள்ள உப சுங்கத் தடுப்புப் பிரிவுத் திணைக்களத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அனைத்து மதங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4,26)

## கஞ்சா வைத்திருந்த இருவர் விளக்கமறியலில்

தென்மராட்சி.நவ 21
கொடிகாமம் காளி கோவில் சாலையில் உள்ள வீடொன்றில் 36 கிலோ 650 கிராம் கஞ்சா வைத்திருந்த இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் உத்தரவிட்டார். சனிக்கிழமை கொடிகாமம் சந்தைக்குப் பின்புறமாக உள்ள தென்னந் தோட்டக் காணி யில் உள்ள சிறிய வீடொன்றில் பொலிஸார் சோதனை நடாத்தியபோது கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் கொடிகாமம் காளி கோவில் சாலை மற்றும் மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தனர்.
இருவரையும்நேற்று முன்தினம் பதில் நீதிவான் ப.குகனேஸ்வரனிடம் முற்படுத்தினர். இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ,9)

## குடாநாட்டில் தொடர்மழையால் அழிவடைந்த வயல்களில் மீண்டும் நெல்நாற்று நடுகை

யாழ்ப்பாணம் நவ 21
யாழ்ப்பாணம் குடாநாட்டில் விவசாயிகள் மழைக்காலத்தில் அழிந்து போன நெற்பயிர்களுக்கு மாற்றாக மீண்டும் நெல் நாற்றுக்களை நடுகை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.
கடும் மழை வெள்ளத்தினால் தாழ்ந்த வயல்களில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் நெற்பயிர்கள் வெள்ளம் மூடி முழுமையாக அழிந்துள்ளன. இந்த அழிவால் விவசாயிகளுக்கு பல ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
குறிப்பாகக் கடந்த ஆண்டில் பெரும்போக நெற்செய்கையின் போது போதிய மழை வீழ்ச்சி இன்மையால் நெற்பயிர்கள் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டு செய்கையாளர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.
இந்த ஆண்டு விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் மழை தொடர்ந்து பெய்ததால் வயல்களில் வெள்ளம் ஏற்பட்டு பயிரழிவு ஏற்பட்டது.
இந்த நிலையில் மாற்றாக நெல் நாற்றுக்களை நடுகை செய்வதால் நெல் நாற்றுக்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவித்தனர். (எ,17)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதி விளக்கமறியலில்

தென்மராட்சி, நவ. 21
சாவகச்சேரியில் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிய கெற்பேலி மத்தியைச் சேர்ந்த வாகனச் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் உத்தரவிட்டார்.
கொடிகாமம் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ரோந்து சென்ற வேளையில் மணல் ஏற்றி வந்த வாகனத்தைச் சோதனையிட்ட போது அவரிடம் மணல் ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரமில்லாததால் அவரைக் கைது செய்தனர்.
குறித்த நபரைக் கடந்த சனிக்கிழமை பொலிஸார் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். நபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ, 9)

## வல்வை சோலை வனம் அமைப்பினரால் பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள்



யாழ்ப்பாணம், நவ. 21
வல்வை சோலை வனம் அமைப்பினரால் மரம் நடுகையை ஊக்குவிக்கும் பொருட்டுயாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
அந்த வகையில் வல்வை சிதம்பராக்கல்லூரி, வல்வை மகளிர் கல்லூரி மற்றும் தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு மரக்கன்றுகளும் அதற்கான பாதுகாப்புக் கூடுகளும் வழங்கப்பட்டன.
நேற்றுமுன்தினம் குறித்த அமைப்பினரால் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தி யாலயத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. (எ,108)



யாழ்ப்பாணம் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா கடந்த 14ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் சுனித்ரா சூரியராஜா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். (எ)

## விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, நவ. 21
சங்கத்தானை சாலையில் சென்ற சிறியரக உழவியந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட உந்துருளியின் சாரதி விபத்துக்குள்ளானார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் சங்கத்தானை இந்துக் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றது.
சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற உந்துருளி முன்னால்சென்ற சிறியரக உழவியந்திரத்தை முந்த முற்பட்டது. எதிர்த்திசையில் வாகனம் வந்ததால் அதற்கு வழிவிட முடியாமல் லான்ட் சிறிய ரக உழவியந்திரத்துடன் மோதியது.
சம்பவத்தில் காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
வரணி குடமியனைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே காயமடைந்தவராவார். (எ,9)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 600 | 400 |
| கணவாய் | 700 | 500 | 900 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | 600 |
| சுறா | 600 | 700 | 1000 | 1000 |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 500 | 400 | 600 | 600 |
| முரல் | 300 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | — | 500 | — |
| ஓரா | 300 | 300 | 500 | 200 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | 200 |
| சூடை | 100 | 120 | 160 | 200 |
| ஓட்டி | 100 | 200 | 400 | 400 |
| திருக்கை | 250 | 200 | 400 | 400 |
| மதனம் | 150 | 150 | 250 | 250 |
| கொய் | 100 | 100 | 80 | 100 |
| பாலை | 100 | 200 | 500 | 300 |
| வாளை | 100 | 150 | 400 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 80 | 100 |
| கத்தரி | 250 | 240 | 200 | 200 | 180 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 50 | 50 |
| பயிற்றை | 220 | 220 | 300 | 240 | 180 |
| பாகல் | 350 | 350 | 400 | 300 | 320 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 100 | 100 |
| பெ.வெங்காயம் | 130 | 160 | 120 | 160 | 180 |
| சி.வெங்காயம் | 200 | 300 | 350 | 380 | 400 |
| பூசணி | 80 | 80 | 50 | 100 | 70 |
| தக்காளி | 120 | 120 | 100 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 70 | 60 |
| கீரை | 50 | 50 | 40 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 30 | 40 |
| ப.மிளகாய் | 700 | 700 | 800 | 800 | 700 |
| புடோல் | 80 | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 160 | 160 | 120 | 220 | 160 |
| வெண்டி | 160 | 220 | 160 | 140 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 140 | 200 | 200 | 240 | 240 |
| தேங்காய் | 80 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 60 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 300 | 200 | 300 | 300 |
| கரட் | 250 | 200 | 200 | 160 | 180 |
| முருங்கைக்காய் | 150 | 250 | 700 | 120 | 220 |

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,நவ.21
யாழ்ப்பாணம் வலயத்துக்குட்பட்ட நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடத்துக்கு அதிபர் வகுப்பு ii ஐச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்கலாம்.
அதிபர் வகுப்பு ii ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் வகுப்பு iii ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்களும், தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர் வகுப்பு 3 ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்களும் கவனத்தில் எடுக்கப்படும்.
விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண கல்வி வலயத்தின் பொது நிர்வாகக் கிளையில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தெரிவித்துள்ளார். (எ)

# சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம் நவ 21
காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தரம் 1 மற்றும் 2 ஆம் வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் மணிசேகரன் தலைமையில் சின்னஞ் சூட்டும் நிகழ்வு இடம்பெறும் என சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சற்குணராஜா தெரிவித்தார். (எ.9)

# மாவீரர் நிகழ்வுகளுக்கு சாவகச்சேரியில் குழு

யாழ்ப்பாணம், நவ. 21
மாவீரர் தினம் சாவகச்சேரியில் இந்தமுறை சிறப்பாக நடத்தப்படவுள்ளது. அதற்கென குழு ஒன்று நேற்று அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரியில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் சாவகச்சேரி நகரில் நேற்றுக் கலந்துகொண்டு, இந்தமுறையிலிருந்து நவம்பர் 27 தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகளை எழுச்சியுடன் கடைப்பிடிப்பது தொடர்பில் ஆராய்ந்தனர்.
நிகழ்வை நடத்துவதற்கென ஒரு குழுவும் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட குழுவில் க.அருந்தவபாலன், கே.சயந்தன், சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் வே.சிறீப்பிரகாஸ், முன்னாள் பிரதேச சபை தலைவர் சி.துரைராசா, முன்னாள் நகரசபை உறுப்பினர்கள் ஞா.கிசோர், அ.பாலமயூரன், பொது அமைப்புக்கள் சார்பில் செ.மயூரன், கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.கந்தசாமி ஆகியோர் அடங்கிய குழுவினர் தெரிவுசெய்யப்பட்டனர்.
இந்தக் குழுவினர் மாவீரர் நாள் ஏற்பாடு தொடர்பிலான பணிகளை முன்னெடுத்து நவம்பர் 27 அன்று நகர மத்தியில் இடம்பெறும் நிகழ்வையும் ஒழுங்கமைப்பர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-4,101)

# பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், நவ.18
யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கு அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2.05 மணிக்கு டானியல் பூவர் அரங்கில் நிகழவுள்ளது.
இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.சி.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. முதன்மை விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்வி அலுவலர் மாணிக்கம் ஆனந்தகுமார், சிறப்பு விருந்தினராக வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பிறேமாநிதி அம்பிகைபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4)

# மருத்துவ சேவையாளர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
சம்பளமுரண்பாடு, பதவியுயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவை, கைவிரல் அடையாள வருகை பதிவேட்டை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட தீர்மானத்தை நிறுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தாதிய, நிறைவுகாண், துணை மருத்துவ சேவையை சேர்ந்தவர்கள் இணைந்து நாளை புதன்கிழமை வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளனர்.
வடக்கு மாகாண அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தினரும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதால் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் இந்த வேலை நிறுத்தம் நாளை காலை 7 மணி தொடக்கம் நாளை மறுதினம் காலை 7 மணி வரை நடைபெறுமெனவும் நோயாளர்களினதும் பொதுமக்களினதும் நன்மை கருதி வேலை நிறுத்தத் தின் போது உயிர்க்காப்பு நடவடிக்கைகளுக்கான அவசர சிகிச்சைக்கு மாத்திரம் தாதிய உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் என மாகாண அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் க.ஜனார்த்தனன் தெரிவித்தார். (எ)

## அரச தலைவர் நடமாடும் சேவை பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம்,நவ.21
யாழ்ப்பாணத்தில் அரச தலைவரின் ஏற்பாட்டில் மாவட்ட ரீதியில் அரச தலைவர் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. இதன் முன்னோடியாக பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பகுதியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
காலங்கடந்த பிறப்பு இறப்பு பதிவுகள், தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல், காணி தொடர்பான பிரச்சினை, சமூக சேவை திணைக்களத்துடன் தொடர்புபட்ட சேவை, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் தொடர்புபட்ட சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
பொதுமக்கள் தங்கள் பிரிவுக்குரிய கிராம அலுவலர்களிடம் அல்லது பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களுக்கான சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார்.

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிசனின் அதிபர் விடுதி கட்டடத் திறப்பு விழா

வடமராட்சி, நவ. 21
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் புதிய அதிபர் விடுதிக் கட்டடத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி முதல்வர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண பண்பா ்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் க. சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (எ.422)

இது புதுசு





மாணவர்களுக்கான புத்தகப் பைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 550 ரூபா முதல் விற்பனை செய்யப்படுகின்றன.

# நாடு முழுவதும் வியாழனன்று டெங்கு சோதனை

சாவகச்சேரி, நவ. 21
நடுவண் சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியிலான தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் நாளைமறுதினம் வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் இந்த நாள்களில் கொடிகாமம் மற்றும் கைதடிப் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு பரிசோதனைகளில் ஈடுபடவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 23ஆம் திகதி கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் 24ஆம் திகதி கைதடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் பரிசோதனைகள் நடத்தப்படும்.
மழை காலம் என்பதால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களைக் கண்டறியும் பொருட்டு குடியிருப்புகள், அரச தனியார் நிறுவனங்களின் காணிகள், ஆலயங்கள், புதிய கட்டட நிர்மாண இடங்கள், அரச பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், வணிக நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்கள் காணப்படின் குடியிருப்பாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குடியிருப்புகளில் பூச்சாடிகள், மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள், கால்நடைகளுக்கு நீர் வைக்கும் பாத்திரங்கள், இளநீர்க் கோம்பைகள் உட்பட நீர் ஏந்து பொருள்கள் காணப்படின் அவற்றை உரியவாறு அப்புறப்படுத்தி பரிசோதனைக்கு ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.
கடந்த வாரம் தென்மராட்சிப் பிரதேசத்தின் வரணி மட்டுவில் ஆகிய பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவுகளில் நடத்தப்பட்ட டெங்குப் பரிசோதனைகளில் 30 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ.9)



வடக்கு மாகாண ஆளுநர் றெயினோட் குரே தனது பிறந்த தினத்தினை யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள சாந்தி நிலைய முதியோர்களுடன் கொண்டாடினார்.
இந்த நிகழ்வு கடந்த 18ஆம் திகதி இடம்பெற்றது. இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு இரவுநேர உணவினை வழங்கி அதன் பின்னராக அவர்களுக்கு இசைவிருந்தினையும் வழங்கிவைத்தார். (எ,101)

*மாகாண அபிவிருத்திக்கு*

# மொத்த ஒதுக்கீடான ரூ 3,417 மில்லியனில் 1,050 மில்லியன் மட்டுமே கிடைத்துள்ளது

## மாகாண திறைசேரி தெரிவிக்கின்றது

யாழ்ப்பாணம், நவ.21
2017ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்துக்கான மூலதன வேலைகளுக்கான மொத்த ஒதுக்கீடு 3 ஆயிரத்து 417 மில்லியன் ரூபாவாக இருக்கும் நிலையில் வடக்கு மாகாணத் திறைசேரிக்கு நேற்று வரையில் ஆயிரத்து 50 மில்லியன் மட்டுமே இதுவரை கட்டுநிதி கிடைத்துள்ளது என வடக்கு மாகாண திறைசேரி தெரிவிக்கின்றது.
இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:
வடக்கு மாகாண அபிவிருத்திகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து நேற்று வரையில் குறித்த பணத்தொகையை மாத்திரமே பொதுத்திறைசேரியானது விடுவித்துள்ளது. இதனால் வடக்கு மாகாண திறைசேரி பெரும் நிதிநெருக்கடியினை எதிர் கொள்கின்றது.
இதேநேரம் வடக்கில் நிறைவுற்ற பணிகளுக்காக உடனடியாக இன்னமும் ஆயிரத்து 40 மில்லியன் ரூபா பணம் வருமதி உள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.
இதேநேரம் ஆண்டு மொத்த ஒதுக்கீட்டின் மிகுதித் தொகையான ஆயிரத்து 227 மில்லியன் ரூபாவுக்கான பணிகளும் தற்போது மிக வேகமாக இடம்பெறுகின்றன. இருப்பினும் குறித்த ஒதுக்கீட்டுக்கான கட்டுநிதிகள் எவையும் வந்து சேரவில்லை.
இவை தொடர்பில் பொதுத் திறைசேரியின் கவனத்துக்கு அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. நிதி வரவுகளில் தாமதம் ஏற்படுவதனால் தொடரும் பணிகளும் தாமதம் அடைகின்றன. அதாவது ஒப்பந்தப் பணிகளை நிறைவு செய்தவர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை முடிவுறுத்தப்படவில்லை.
இதனால் ஏனைய பணிகளும் நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் மாகாணத் திறைசேரியினால் பொதுத் திறைசேரியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (எ,101)

> வடக்கில் நிறைவுற்ற பணிகளுக்காக உடனடியாக இன்னமும் 1040 மில்லியன் ரூபா பணம் வருமதி உள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

# மக்களுடைய மனங்களில் இருந்து மறைந்து விட்டாளா ஹரிஸ்ணவி

*தாயார் உருக்கம்*

வவுனியா, நவ.21
பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட எனது மகள் ஹரிஸ்ணவிக்கு நீதி கிடைக்க வேண்டும். அவளுடைய துயரச் சம்பவம் மக்கள் மனங்களில் இருந்து அகன்று வருகிறது என அவரது தாயார் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது; கணவனைப் பிரிந்து வாழ்ந்த எனக்கு உதவியாக எனது மகளே இருந்தாள். இன்று அவள் இல்லை என்பதை நினைத்துப் பார்க்க முடியாதுள்ளது. பாடசாலைக்குப் போகவில்லை என்று வீட்டில் இருந்தவளைச் சடலமாகவே கண்டேன். அவளைச் சிதைத்தவர்கள் வெளியில் நடமாடுகின்றனர். அவளுக்கு நீதி கிடைக்கவில்லை.
ஹரிஸ்ணவிக்காகப் போராடிவர்களுடைய மனங்களில் இருந்து அவள் மெல்ல, மெல்ல விலகுகின்றாள். குற்றவாளிகள் தப்பித்து விடக்கூடாது. இது போன்ற சம்பவம் நடை பெறக் கூடாது என்றால் ஹரிஸ்ணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் -என்றார்.
வவுனியா உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவி ஹரிஸ்ணவி கடந்த 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதியன்று அவளது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டிருந்தாள்.
அன்றையதினம் பாடசாலை செல்ல மறுத்து தனியாக இருந்த போதே அந்தச் சம்பவம் நடைபெற்றிருந்தது. சடலம் வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டது. சிறப்பு விசாரணையை மேற்கொண்ட அதிகாரி ஹரிஸ்ணவியின் உடலில் நகக் கீறல் இருப்பதாகவும், அவள் பாலியல் வன்புணர்வுக்கு உட்டுத்தப்பபட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.
சம்பவத்தின் பின்னர் வவுனியா உள்ளிட்ட வடக்கு மாகாணம் எங்கும் நீதி கோரிப் போராட்டங்கள் இடம்பெற்றன. குற்றவாளி கைது செய்யப்படவேண்டும். தண்டிக்கப்படவேண்டும் என்று பலத்த கோசங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டங்களின் பின்னர் ஹரிஸ்ணவி வீட்டுக்கு. அயல் வீட்டிலுள்ள நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.
நீதிமன்ற விசாரணைகளில் அவர் 6 மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.
பின்னர் அவர் பிணையில் விடு விக்கப்பட்டார். "ஹரிஸ்ணவியின் வீட்டாருக்கு எவ்வித தொந்தரவும் கொடுக்கக்கூடாது" என்ற கடுமையான உத்தரவுடன் அவர் பிணையில் வெளிவந்தார். தொடர்ந்தும் வழக்குகள் இடம்பெறுகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் 29ஆம் திகதி அடுத்த தவணை வழக்கு இடம்பெறவுள்ளது குறிப்பிடத் தக்கது. (எ ,21)

*ஒப்பந்த அடிப்படையில்*

# சுகாதாரம்சார் உத்தியோகத்தர்கள் நியமனம் அடுத்த ஆண்டும் தொடரும்

*மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன்*

யாழ்ப்பாணம்.நவ.21
வடக்கு மாகாணத்தில் சுகாதாரம் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆளணியில் வெற்றிடம் காணப்படுவதால் அடுத்த ஆண்டும் ஒரு வருடத்துக்கு தொடர்ச்சியாக அவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் மருத்துவமனைகளில் மருத்துவர், தாதியர், பொதுச் சுகாதார மருத்துவ தாதுக்கள் ஆகியோரின் வெற்றிடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. வெற்றிடத்துக்கான குறித்த நியமனங்களை கொழும்பு அமைச்சு பயிற்சியின் பின்னர் வழங்கி வருகின்றது.
எனினும் தாதியர் கற்கை நெறிக்குத் தமிழ் மாணவர்கள் முன்வருவது குறைவு. ஆகவே நாம் எமது மாகாணத்துக்கு தாதியர் அதிகம் வேண்டும் என்று கேட்க முடியாது. தற்போது தொடர்ச்சியாக மருத்துவம் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டும் வருகின்றார்கள்.
இவர்களில் தேவையின் நிமித்தம் ஓய்வு பெற்றவர்களையும் சேவையில் இணைத்துள்ளோம்.
அதன்படி 2018ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது ஒப்பந்த அடிப்படையில் சேவையில் உள்ளவர்கள் தவிர பத்திரிகை விளம்பரம் மூலமும் விண்ணப்பிக்குமாறு கேட்கவுள்ளோம். ஆகவே 2018ஆம்ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர்.
இதுவரை 13 தாதியர்கள், 13 ஆய்வுகூட தொழில்நுட்பவியளார்கள், ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ,ரி)

*சிறுபான்மை இனங்கள் என்ற அடிப்படையில்*

# எங்களுக்கான பிரச்சினைகளைத் தட்டிக்கேட்க ஒன்றுபட வேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்

வவுனியா, நவ. 21
தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களாகிய நாங்கள் தமிழ் பேசுகின்றவர்களாக அடக்கி ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனங்கள் என்ற அடிப்படையில் எங்களுக்கான பொதுவான பிரச்சினைகளைத் தட்டிக்கேட்கின்ற தைரியத்துடன் முன் செல்லவேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் வவுனியா மாவட்ட இலங்கைத்தமிழரசுகட்சியின் தலைவரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான மருத்துவர் ப.சத்தியலிங்கம்.
வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் பட்டாணிச்சூர். மன்னார் வீதியிலுள்ள வெங்கடேஸ்வரா மண்டபத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ. அஸ்மின் தலைமையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியினருக்கும் வவுனியா மாவட்ட முஸ்லிம்களுக்கும் இடையே சிறப்புச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.
இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே ப.சத்தியலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:
கடந்த காலத்தில் இடம்பெற்ற கசப்பான விடயங்களை மறந்து வவுனியாவில் தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களின் நல்லுறவைக் கட்டியெழுப்பவேண்டும்.
இன்றைய இந்தக் கலந்துரையாடலை மேற்கொள்ளவிடமால் பலர் தடுக்கின்றனர் என என்னிடம் தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாணசபையின் தேர்தலின்போது எனக்கு மூவின மக்களினுடைய வாக்குகளும் கிடைத்தன. எனது வெற்றிக்காக முஸ்லிம் நண்பர்கள் பலர் என்னுடன் வீடு வீடாக நடந்து திரிந்துள்ளனர். சிறுபான்மை இனத்தவர்கள் என்ற ரீதியில் எங்களுக்குப் பொதுவான பல பிரச்சினைகள் உள்ளன. பொதுவான தேவைகள் நிறைய இருக்கின்றன. நாங்கள் ஒன்றாக நின்றால் எங்களுக்கிடையே இருக்கின்ற புரிந்துணர்வு நாள்பட நாள்படச் செறிவாகும்.
தமிழரசுக்கட்சியுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம் சகோதரர்கள் பலர் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.
இன்றைய கலந்துரையாடல் ஆணித்தரமான சில கருத்துக்களை எடுக்கின்ற, தமிழ்பேசுகின்ற மக்களாக நாங்கள் பொதுவான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்குத் தயார்ப்படுத்துகின்ற கூட்டமாகவும் இது இருக்கும் என நம்புகின்றேன். என்றார். (எ,21)

கட்டாக்காலிகளின் தொல்லை,தண்ணீர் இன்மையால்

# 2, 900 ஏக்கர் வயல் நிலத்தில்; 400 ஏக்கர் நிலமே விதைப்பு

## வேலணை விவசாயிகள் கவலை

வேலணை பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள 2 ஆயிரத்து 900 ஏக்கர் வயல் நிலத்தில் காலபோகத்தில் 400 ஏக்கர் வயல்மட்டுமே விதைக்கும் நிலமைக்கு அங்குள்ள கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தீவகத்தில் தற்போது விவசாயம் அழிவடைவதற்கு முக்கிய காரணம் கட்டாக்காலி மாடுகளே! அத்துடன் நீர்ப் பிரச்சினையும் உள்ளது. எனவே இதற்கு நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு வழி ஏற்படுத்துங்கள் என கடந்த ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கோரிக்கை விடப்பட்டது.

2016-2017ஆம் ஆண்டு காலபோகத்தில் 400 ஏக்கரும் 2017-2018ஆம் ஆண்டு காலபோகத்தில் 450 ஏக்கர் வயல்மட்டுமே விதைக்கப்படுகின்றது என்றால் அதற்கு முக்கிய காரணம் அங்குள்ள கட்டாக்காலிகளே.

எனவே இதனைக்கட்டுப்படுத்திவிவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு வழி ஏற்படுத்துமாறு நாம் மாவட்டச் செயலகத்திலும் கோரிக்கை விடுத்தோம்.

வேலணைப் பகுதியில் மிகத் தரமான நிலப்பரப்புக்களும் உள்ளன. ஆனால் எம்மால் விதைக்க முடியவில்லை.

போகத்துக்கு நெல் விதைத்து வருடம் 12 மாதமும் அதையே உணவாக்கி வருமானத்தையும் தேடிய விவசாயிகள் இன்று தனது உணவுக்காக கடையில் அரிசி வாங்கும் நிலமை காணப்படுகின்றது.

இதேநேரம் எமது வாழ்வாதாரமாகவும் கால்நடைகள் உணவாக உண்ணாத பயிராகவும் காணப்பட்ட புகையிலைச் செய்கையினையும் அரசு தடுத்து விட்டது.

அவ்வாறானால் நெல்லும் விதைக்க முடியாமல் புகையிலையும் நடாது நாம் எவ்வாறு எமது வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்வது. தீவகப் பகுதியில் 3 ஆயிரம் வரையிலான மாடுகள் கட்டாக்காலிகளாக உள்ளன. இவற்றினைப் பிடிப்பதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்தால் அதற்குச் சிலர் தடையாக இருப்பதனால் பணிகள் வேகம் இன்றிக் காணப்படுகின்றன.

இதனால் குறித்த பணியை வேகப்படுத்தி முழுமையான கால்நடைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தித் தர வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இது தொடர்பில் வேலணைப் பிரதேச செயலாளர் சோதிநாதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது.

குறித்த பணி தற்போது இடம்பெறுகின்றது. கட்டாக்காலிகளைப் பிடிப்பதில் உள்ள சவால்களையும் தாண்டி பணிகள் இடம்பெறுவதோடு மாடுகளைப் பிடிப்பதில் பரீட்சியம் உள்ளவர்களை அழைத்து கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இந்த வகையில் பிரதேச சபையின் ஊடாக 110 மாடுகளும், விவசாய அமைப்புக்களின் அனுசரணையில் 53 மாடுகளும் ஏற்கனவே பிடிக்கப்பட்ட நிலையில் தற்போது மேலும் 51 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு பிடிக்கப்படும் மாடுகளை உரிமையாளர்கள் இனம்காணப்பட்டால் அவர்களிடமும், உரிமையாளர்கள் இல்லாதவிடத்தில் இறைச்சிப் பாவனையல்ல என உறுதி செய்து வாழ்வாதாரத்துக்காகச் செலவுப் பணத்துடன் வழங்கப்படுகின்றன -என்றார். (எ.101)

# பிலக்குடியிருப்பில் 41 நிரந்தர வீடுகள்

## நாளை அடிக்கல் நட ஏற்பாடு

முல்லைத்தீவு, நவ.21

பெரும் போராட்டங்களின் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்ட கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்களில் 41 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை காலை இடம்பெறவுள்ளது.

பிலக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளை இராணுவத்திடம் இருந்து போராடிப் பெற்றிருந்தனர். ஆனால் அவர்களது காணிகளில் அவர்களுக்கென்று வீடுகள் உடனே வழங்கப்படவில்லை.

தறப்பாள் கொட்டகைகளில் வாழ்வதாகத் தெரிவித்துத் தமக்கு வீடுகள் அமைத்துத் தருமாறும் கோரியிருந்தனர். இந்த விடயம் அண்மையில் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிலக்குடியிருப்பு சார்பாகக் கலந்துகொண்ட மக்கள் பிரதி நிதிகள் கருத்துக்களைப் பகிர்ந்தனர்.

விடயம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. "மீள்குடியமர்வின் பின்னர் குறித்த பிரதேச மக்களுக்கென இராணுவத்தினரால் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன. வீடுகள் அரச செலவில் அமைக்கப்பட்டன.

அதனால் குறித்த பிரதேச மக்களுக்கு மீண்டும் புதிதாக வீடுகளை வழங்க முடியாத நிலை உள்ளது" என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். குறுக்கிட்ட பிலக்குடியிருப்பு மக்கள்பிரதிநிதிகள், "அமைத்துத் தரப்பட்ட வீடுகளுக்கு சரியான முறையில் அத்திபாரம் இடப்படவில்லை, உரியவாறு கட்டப்படவில்லை, அதனை இராணுவமே அமைத்துத் தந்தது" என்று தெரிவித்தனர். 'அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் சுவர்ப் பகுதிகளில் ஒரு பக்கத்தில் சுரண்டினால் மறுபக்கம் விரல் சென்றுவிடும். அவ்வாறான தரங்குறைந்த வீடுகளே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அதனால் அவர்கள் வாழ்வதற்கு ஏற்றதாக அவர்களது காணிகளில் உடனடியாக வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்' என்று மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெளிவுபடுத்தியிருந்தார்.


இந்த விடயம் தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினருடன் இணைத்தலைவர் சிவமோகன் கலந்துரையாடினார். அவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க அதிகார சபையினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். அதனையடுத்து பிலக்குடியிருப்பு மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பது என கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தீர்மானம் எடுக்கப்பட்டு சில நாள்கள் கழிந்த நிலையில் நேற்று முன்தினம் பிலக்குடியிருப்பு மக்களுக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிவமோகனும் கலந்து கொண்டிருந்தார்.

அந்தக் கலந்துரையாடலில் பிலக்குடியிருப்பைச் சேர்ந்த 41 குடும்பங்களுக்கு வீடுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. கலந்துரையாடலில் வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டப் பணிப்பாளர் கமகே, பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

(எ.21,ரி3)

# மீண்டும் புத்தெழுச்சி பெறுகின்றது கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம்



கிளிநொச்சி, நவ 21

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் போரால் சிதைத்தழிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2009 முதல் 2016ஆம் ஆண்டு வரை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்தது.

2016ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தையடுத்து இராணுவம் அங்கிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகளைக் கடைப்பிடிப்பதற்காக கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லப் பணிக்குழுவின் ஒழுங்கமைப்பின் கீழ் மாவீரர்களது உறவுகள் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களால் அங்கு தற்போது சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலம் 40 இலட்சம் ரூபாவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் சுற்று மதில் அமைக்கப்பட்டு வருகின்றது. மற்றும் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரது ஏற்பாட்டில் 15 இலட்சம் ரூபா செலவில் இல்லத்தின் பின்சுற்று வட்ட வீதி திருத்தியமைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற பணிகளை நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டு சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடனும் கலந்துரையாடினார்.

குறித்த இல்லத்தின் மதில்கள் மற்றும் கல்லறைகள் அனைத்தையும் கடந்த காலப் போரின்போது இராணுவத்தினர் அழித்துத் துவம்சம் செய்திருந்தனர். (எ-426)

# பரிசோதகர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி

*களுத்துறையில் இடம்பெற்றது*

யாழ்ப்பாணம், நவ. 21


பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பொதுச் சுகாதாரச் சட்ட நடவடிக்கைகளை வலுவூட்டுவதற்கான ஆறு நாள்கள் வதிவிடப் பயிற்சி வகுப்புகள் கடந்த 13ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் 19ஆம் திகதி வரை களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவகத்தில் இடம்பெற்றன.

உணவுச்சட்டம், புகையிலை மற்றும் மதுசாரக் கட்டுப்பாட்டுச் சட்டம், தொல்லைகள் தவிர்ப்புச் சட்டம், குற்றவியல் தண்டனைச் சட்டம், தொழிற் சுகாதாரமும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் போன்ற விடயங்களை உள்ளடக்கிய பயிற்சி வகுப்புக்கள் தொழில்சார் வல்லுநர்களால் நடத்தப்பட்டன.

பயிற்சி வகுப்புகளில் மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பங்குபற்றியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(எ.9)

# கையடையாள இயந்திரத்துக்கு எதிராகத் துண்டுப்பிரசுரங்கள்



பாடசாலைகளில் கையடையாள இயந்திரத்துக்கு எதிராக யாழ்ப்பாணப் பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் நேற்று விநியோகிக்கப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு முதல் வன்னிப் பாடசாலைகள் சில தவிர வடக்கு மாகாணத்தின் பல பகுதியிலுள்ள பாடசாலைகளில் கையடையாள இயந்திரம் நடைமுறைக்கு வருகின்றது. இதனை நிறுத்தச் சொல்லியே துண்டுப் பிரசுரங்கள் விநி யோகிக்கப்பட்டன.

இந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டதாவது:

'மீள முடியாத பாதையில் வடக்கு மாகாணம், எங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் எங்கள் கைகளில்,ஆசிரியர்களே ஒன்றுபடுங்கள், வடக்கு மாகாணம் கல்வியில் 9வது இடத்தில் இருப்பதற்கு யார் காரணம் மீண்டும் மீண்டும் பின்தங்கி வைப்பதற்கு கையடையாள இயந்திரம். கையடையாள இயந்திரத்தினால் ஆசிரியர்களுக்கு தேவையற்ற லீவு, மன உளைச்சல் ஏற்படுகின்றது.

கையடையாள இயந்திரத்திற்கு வேலை செய்தால் போதும் என அதிகாரிகள் நினைக்கின்றனர்.

எனவே அடுத்த ஆண்டில் தமிழ், ஆங்கில, சமூக விஞ்ஞான அழகியல் போட்டிகள் போன்ற மேலதிக செயற்பாடுகளை நிறுத்துவோம்' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வெளி மாவட்டத்துக்கு பணிபுரியும் அரச உத்தியோகஸ்தர் பேருந்துகளிலும், வலிகாமம், மானிப்பாய் பகுதி, நெல்லியடி மத்திய கல்லூரி வீதி மற்றும் தென்மராட்சிப் பகுதியிலும்வழங்கப்பட்டுள்ளதுஎனதெரிய வந்துள்ளது. (எ.422)

## தொழிற்சங்கங்கள் நாளை போராட்டம்

கொழும்பு. நவ.21
தமது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவில்லை என்று தெரிவித்து சுகாதார சேவை உட்பட 18 தொழிற்சங்கங்களின் ஊழியர்கள் நாளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.
இந்தப் போராட்டம் நாளை காலை 7 மணிமுதல் நாளைமறுதினம் 23ஆம் திகதி காலை 7 மணி வரை முன்னெடுக்கப்படும் என்று கூட்டுத் தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். (ற)

# பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படாது

## கனியவள அமைச்சு அறிவிப்பு

கொழும்பு. நவ.21
பெற்றோல் தொடர்பில் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்வோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கனியவள அமைச்சு எச்சரித்துள்ளது.
பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ளும் தரப்பினரைக் கைது செய்வதற்காகக் குற்றப்புலனாய்வுப்பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
நாட்டில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படவில்லை. மக்கள் அது தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.
பெற்றோலுக்குத் தட்டுப்பாடு என்ற வதந்திகளை நம்ப வேண்டாம் என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.
போதியளவு பெற்றோல் கையிருப்பில் உள்ளது. எரிபொருளுடன் கப்பல் ஒன்று கொழும்பு வருகின்றது. நாட்டில் மீண்டும் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.
பெற்றோலுக்குத் தட்டுப்பாடு என்று பரவிய வதந்தியை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை முதல் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வாகனங்கள் வரிசையில் நின்றன. அதையடுத்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
எரிபொருள் வழங்கல் தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள், அல்லது முறைப்பாடுகள் இருக்குமாயின் 0115 455 130 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என்று கனியவள அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ற)



## யானைத் தாக்குதலில் வீடு முற்றாக நாசம்

திருகோணமலை.நவ.21
திருகோணமலை மொறவெவ பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலால் நேற்றுமுன்தினம் வீடொன்று முற்றாகச் சேதமடைந்தது என்று மொறவெவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
யானைகளின் அட்டகாசம் அந்தப் பகுதியில் தொடர்கின்றது என்று விசனம் தெரிவித்த பிரதேச மக்கள் காட்டு யானைகளின் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு மின் வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ற-ரி4.45)

## அரசமைப்புத் தொடர்பில் தெளிவூட்டல் கருத்தரங்கு

திருகோணமலை, நவ.21
அரசமைப்பு இடைக்கால அறிக்கை தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 24ஆம் திகதி மாலை 3 மணிக்குத் திருகோணமலை நகர சபை மண்டபத்திலும், 25ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்முனை நீதிமன்ற வீதியில் உள்ள நால்வர் கோட்டம் மண்டபத்திலும், அன்று மாலை 2.30 மணிக்கு மட்டக்களப்பு, தாண்டவன் வெளி பெர்டினன்ஸ் மண்டபத்திலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.
கருத்தரங்குகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு தெளிவூட்டல்களை வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.
கட்சி பேதங்களும் இன்றி அனைத்து அரசியற் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் உயர் கல்வி மாணவர்கள் எனப் பலதரப்பினரும் அதில் கலந்து கொள்ள முடியும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கிருஸ்ண பிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார். (ற-46)

## இனவாதமாக செயற்படும் நபர்கள் மீது நடவடிக்கை

### தலைமை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு. நவ.21
இனவாத அடிப்படையில் செயற்படுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது
இனவாதத்தைத் தூண்டும் கடும்போக்குவாதிகளைத் தண்டிக்கக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடும்போக்குவாத அமைப்புக்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு நடத்தப்படவுள்ளது.
சில இனவாதிகள் சமூக வலைத் தளங்களில் போலிப் பரப்புரைகளை மேற்கொள்கின்றனர். நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், இனங்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துதல் என்பனவே அரசின் முக்கிய நோக்கமாகும். - என்றார். (ற)

## வதந்தி பரப்பினால் கடும் நடவடிக்கை

கொழும்பு, நவ.21
காலி, கிந்தோட்டையில் நடந்த முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் தொடர்பாகப் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
சமூக வலைத்தளங்கள் ஊடாகத் தொடர்ந்தும் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், மக்கள் மத்தியில் அசாதாரண நிலைமையைத் தோற்றுவிப்பதே அவர்களின் நோக்கம். அவ்வாறானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## எதிர்வரும் வாரங்களுக்குள் தேங்காய் விலை குறையும்

கொழும்பு, நவ.21
தேங்காயின் விலை எதிர்வரும் வாரங்களுக்குள் குறைவடையும் எனத் தெங்குச் செய்கை சபையின் தலைவர் கபிலயகந்தலாவ தெரிவித்தார்.
மக்களின் தேங்காய் தேவையை நிறைவு செய்ய நடமாடும் சேவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி முதல் டிசெம்பர் 30 ஆம் திகதிவரை தேங்காய் அறுவடை செய்யப்படவுள்ளது. 28கோடிதேங்காய் அறுவடை எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## குற்றச்செயல்கள் குறைந்துவிட்டன

### அமைச்சர் சாகல தெரிவிப்பு



கொழும்பு. நவ.21
நாட்டில் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன என்று சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன. 2014 ஆம் ஆண்டில் 50 ஆயிரத்து 962 பெரும் குற்றச்செயல்கள் பதிவாகியிருந்தன. 2016ம் ஆண்டில் அவை 36 ஆயிரத்து 937 ஆகக் குறைவடைந்துள்ளது. இது 37 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.
2017ஆம் ஆண்டில் முதல் 10 மாத காலத்தில் இடம்பெற்ற பெரும் குற்றச்செயல்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 350 ஆகக் குறைவடைந்துள்ளது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளது என்று கூறுகின்றனர்.
ஆனால் அது தவறு. குற்றச்செயல்கள் தொடர்பில் ஊடகங்களில் செய்திகளை வெளியிடுவதே அதிகரித்துள்ளது.
2014ஆம் ஆண்டில் பெரும் குற்றச்செயல்கள் தொடர்பான வழக்குகளை 50 வீதம் தீர்க்க முடிந்துள்ளது. 2017ஆம் ஆண்டில் அதை 72 சதவீதமாக அதிகரிக்க முடிந்தது. இது பொலிஸ் தரப்பில் பெறப்பட்ட பெரும் முன்னேற்றமாகும். - என்றார். (ற)

## சிறுமி மீது வன்புணர்வு சகோதரனுக்கு மறியல்

தாத்தா மற்றும் பாட்டியின் அரவணைப்பில் வாழ்ந்த சிறுமி ஒருவர் அவரது சகோதரனால் வன்புணர்வுக்கு உட்டுப்படுத்தப்பட்டுள்ளார் என்று மினுவாங்கொடப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மினுவாங்கொடப் பிரதேசத்தில் நடந்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.
சந்தேகநபரைக் கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை சமூக நோய் மற்றும் உளநல மருத்துவர்களிடம் சிகிச்சைக்குட்படுத்துமாறு உத்தர விட்ட நீதிமன்று எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
சிறுமி தாயை விட்டுப் பிரிந்து தாத்தா மற்றும் பாட்டியின் அரவணைப்பில் தந்தையின் வருமானத்தில் வாழ்கின்றார். சிறுமியால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சிறுமியின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சகோதரன் வனப்பகுதியில் வாழ்கின்றார் என்றும், இரவு நேரங்களில் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 21 வயதுடையவர் என்றும், மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## அரிய வகை பறவைகளைத் திருடிய கும்பல் சிக்கியது!

கொழும்பு. நவ.21
அரியவகைப்பறவைகளைத் திருடும் கும்பலைச் சேர்ந்த ஆறு பேர் தங்காலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த புதன் கிழமை மீரிகமப்பிரதேசத்தில் பெலிஸாரால் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. அதில் போதைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த இடத்தில் மெகோ இனத்தைச் சேர்ந்த இரண்டு பறவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.
இவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவை திருடப்பட்டபறவைகள்என்பதுகண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குருணாகல், ராகம, பாணந்துறை மற்றும் அளவதுகொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர்.
அதேவேளை கடந்த திங்கட்கிழமை ஹம்பாந்தோட்டைத் தனியார் பறவைகள் சரணாலயம் ஒன்றிலும் பண்டாரகம , பாணந்துறை ஹோமாகம ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பறவைகள் திருட்டுடன் இவர்கள் தொடர்புபட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து விலையுயர்ந்த 23 பறவைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. ஹாலி குவின் மெகோ இனத்தைச் சேர்ந்த 4 பறவைகள் மெனிஸ் மெகோ இனத்தைச் சேர்ந்த 6 பறவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அவற்றின் பெறுமதி சுமார் 50 லட்சம் ரூபா என்று கூறப்படுகின்றது.
ஹம்பாந்தோட்டையில் வாடகைக்கு அமர்த்திய வாகனத்தைப் பயன்டுத்தி இந்தச் சட்டவிரோத நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும், சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன-என்றும்பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# பெயரை வெளியிட முன்னர் விசாரித்திருக்க வேண்டும்

## அமைச்சர் சுஜிவ காட்டம்



கொழும்பு, நவ.21

பெர்பச்சுவல் நிறுவத்தின் பிரதானி அர்ஜுன் அலோசியஸுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்தமை தொடர்பிலான தகவலை வெளியிடுவதற்கு முன்னர் அரச தலைவர் ஆணைக்குழு எம்மை அழைத்து விசாரித்திருக்க வேண்டும்.

இவ்வாறு சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுஜிவ சேனசிங்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் நீதி, சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

அரசியலில் எம்மை நாசமாக்கவே ஊடகங்களின் ஊடாகப் பல்வேறு வகையான கட்டுகதைகளைப் பரப்பி வருகின்றனர். எமக்கு எவருடனும் "டீல்" போட வேண்டிய தேவையில்லை.

மத்திய வங்கி பிணைமுறி விடயம் தொடர்பில் எமக்குப் போதியளவு அறிவு கிடையாது. இது தொடர்பிலான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் பலரைத் தொடர்பு கொண்டிருக்கலாம். அதைப் பிழை என்று கூற முடியாது. கோப் குழுவால் எவரையும் சந்தேக நபராகவும் குற்றவாளியாகவும் தீர்ப்பளிக்க முடியாது.

அண்மையில் பெர்ப்பச்சுவல் டிசரிஸ் நிறுவன பிரதானி அர்ஜுன அலோசியஸுக்கு அழைப்பு எடுத்தவர்கள் என்று எனது பெயர் உட்பட ஐந்து பேரின் பெயர் வெளியிடப்பட்டது. இவ்வாறான பெயர் விவரங்களை வெளியிடுவதற்கு முன்னர் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு எம்மை அழைத்து என்ன பேசினீர்கள்?. எதைப் பற்றிப் பேசினீர்கள்? என்பது தொடர்பில் வினவியிருக்க வேண்டும்.

தற்போது நாம் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டு வருகின்றோம். எமக்கு மூன்று வருடங்கள் கிடைத்தால் நாம் பூரண மாற்றத்தை ஏற்படுத்திக் காண்பிப்போம். இலங்கை என்பது சிறிய நாடாகும். எமக்குச் சாதகமான பொருளாதார வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மில்லெனிய பிரதேசத்தில் புதிய கைத்தொழில் வலயத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். எமது நாட்டை வேலுப்பிள்ளை பிரபகாரன் வளர்க்க விடவில்லை. எமது கட்சியின் தலைவர்கள் 9 பேரைக் கொலை செய்தார். தற்போது காமினி திஸாநாயக்க மற்றும் லலித் அத்துலத்முதலி போன்றோர் இருந்திருந்தால் தற்போது இலங்கை மலேசியாவாக இருந்திருக்கும்- என்றார். (ற-31)

# அலோசியஸ்நிறுவனத்துக்காகவா கொண்டுவரப்பட்டதுவரிச்சலுகை?

## நளிந்த ஜயதிஸ்ஸ எம்.பி. கேள்வி

கொழும்பு, நவ.21

கூட்டரசின் நடப்பாண்டுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்கு முதலீடுகளுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டது. ஆனால் தற்போதைக்கு அர்ஜுன் அலோசியஸின் எத்தனோல் மதுபான நிறுவனம் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்துக்காக கத்தான் வரி சலுகை வழங்கப்பட்டதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நீதி, சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

நாட்டின் பொருளாதாரம் வளச்சியடைய வேண்டும் எனில் பொருளாதாரத்தைத் திறக்க வேண்டும். மூடிய பொருளாதாரம் எங்கும் இல்லை. மக்கள் விடுதலை முன்னணியும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளது. ஆனால் ஏனைய நாடுகளின் மாதிரிகள் இலங்கைக்குத் தேவையில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி பொருளாதாரக் கொள்கைக்கும் இடையே பெரும் வித்தியாசம் இல்லை. கட்சித் தாவல்களின் ஊடாக அதே கொள்கை மாறுகின்றது. எமக்கு முதலீடுகள் தொடர்பில் நிரந்தரமான கொள்கையொன்று கிடையாது.

வெளிநாட்டு முதலீடுகளால் எமக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவில்லை. வெளிநாட்டு முதலீடுகளில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை என்று முதலீட்டு சபையே கூறியுள்ளது.

நாட்டின் அரசியல் நெகிழ்ச்சி தன்மை காரணமாகவே இந்தப் பிரச்சினை எழுந்தது. அரசுக்கு அரசு கொள்கை மாறுகின்றது. எப்படி முதலீட்டாளர்களால் நம்பிக்கை கொள்ள முடியும்?. நிலையான கொள்கையொன்று இருந்தாலேயே முதலீடுகள் வரும்.

முதலீட்டாளர்களுக்குத் தமக்கான நீர், மின் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பத்து மாதம் வரை காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. இப்படி இருக்கும் போது எப்படி முதலீட்டாளர்கள் வருவார்கள். தேர்தலில் தோல்வி அடைந்தவர்களும் தமது வர்த்தக நண்பர்களையுமே தூதுவர்களாக நியமிக்கின்றனர்.

தூதரகங்களில் முதலீடுகளை கொண்டு வருவதற்கான போதுமான அளவுக்கு அதிகாரிகள் கிடையாது.

இலங்கை வரலாற்றில் நான்பது வருடங்கள் வெளிநாட்டு முதலீடுகள் வராமைக்கான காரணத்தைக் கண்டறிந்து இது தொடர்பில் கலந்தாய்வு செய்து பூரண அறிக்கையொன்றை நாடாளுமன்றத்திற்கு முன்வைக்க வேண்டும். - என்றார். (ற31)

# நீதியமைச்சர் நிரூபிக்கட்டும்

## விஜித ஹேரத் சவால்



கொழும்பு, நவ.21

புதிதாக அமைக்கப்படவுள்ள ஊழலுக்கு எதிரான சிறப்பு நீதிமன்றத்தில் டிரயல் அட்பார் முறைமையின்மூலம் மத்திய வங்கி தொடர்பான விசாரணையை முதலில் எடுத்து காண்பிக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலைமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சபையில் நீதியமைச்சருக்கு நேரடியாக சவால் விட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று 2018 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் நீதி, சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

அரச தலைவர் ஆணைக்குழு விசாரணை தொடர்கின்றது. இன்றும் (நேற்று) தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆணைக் குழுவில் சாட்சியமளிக்க சென்றுள்ளார். தலைமை அமைச்சர் சாட்சியமளித்த பின்னர் அரச தலைவர் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் நிறைவு பெற்று விடும் என எதிர்பார்க்கின்றோம்.

அதன் நடவடிக்கைகள் நிறைவு பெற்றாலும் ஆணைக்குழு தனது அறிக்கையை கொண்டு நேரடியாக குற்றவாளியை, தண்டிக்க முடியாது. ஆணைக்குழு தனது அறிக்கையை அரச தலைவரிடம் கையளிக்கும். அரச தலைவர் சார்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படும். அதன்பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்.

அரச தலைவர் ஆணைக்குழு அறிக்கைக்கு வழக்கு தொடர்ந்து அது தொடர்பிலான தீர்ப்பு வருவதற்கு மூன்று ஆண்டுகள் செல்லும். இந்த அரசின் ஆட்சிக்காலமும் நிறைவு பெற்று விடும். மத்திய வங்கி மோசடி குற்றவாளிகள் தப்பித்து விடுவர்.

நீதியமைச்சால் அமைக்கப்படவுள்ள சிறப்பு நீதிமன்றத்தின் டிரயல் அட்பார் விசாரணை முறைமையின் மூலம் மத்திய வங்கி மோசடி தொடர்பான விசாரணையை முன்னெடுக்க முடியும். அவ்வாறு விசாரணைக்கு எடுத்து நீதியமைச்சர் தன்னுடைய நேர்மையை நிரூபித்து காண்பிக்கட்டும்.- என்றார். (ற-31)


### வீட்டுக் கிருத்திய நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

இன்று (21.11.2017) செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த

**அமரர் தம்பியப்பா சக்திவேல்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
அன்னாரின் **சகோதரன் தம்பியப்பா சிதம்பரநாதன்**
அவர்களின் மறைவினால் பிற்போடப்பட்டுள்ளது.
இத்தகவலை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல.58/25, கருவேப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 787 1343

### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
03 . 10 . 1932

உதிர்வு
25 . 11 . 2014

**கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்**

திதி : 21.11.2017

நேற்று வரை எம்மோடு இருந்தீர்கள் ஐயா
எங்களில் ஒருவராய் அன்போடு வாழ்ந்தீர்கள் ஐயா
காலமெல்லாம் எமைக் காத்திருப்பீர்கள் என்றிருக்க ஐயா
இடை நடுவில் எங்களை தவிக்க விட்டு கண்ணீரைத் தந்து
விட்டு விண்ணோடு போனீர்கள் ஐயா
உங்களை இழந்து ஆண்டுகள் மூன்று ஆனது ஐயா
ஒவ்வொரு நாளும் காலை எழுந்ததும் மாலை வரையும்
உங்கள் ஆசை முகத்தின் நினைவுகளுடன் எங்கள்
பொழுதைக் கழிக்கின்றோம் ஐயா

உங்கள் ஆத்மா சாந்தியடைய
காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

குடும்பத்தினர்.
ஆலடி, காரைநகர்.

### பெயர்மாற்றம்

**ஹபிப் ஆரிப்பா** என இதுவரை காலமும் அழைக்கப்பட்ட நான் இன்றிலிருந்து **நடராசா பத்மினி** என எனது அனைத்து ஆவணங்களிலும் மாற்றியமைக்கின்றேன்.

- நடராசா பத்மினி -

### வேலையாள்கள் தேவை

காசாளர்
(பணம்வசூலிப்பாளர்)
பொதி ஏற்றி இறக்குபவர்.

021 224 2570/ 077 350 8952

### விற்பனை பிரதிநிதி தேவை

Litro Gas நிறுவனத்தின் யாழ் விநியோகஸ்தரான S.V.Murugesu நிறுவனத்தில் முகவர் , விற்பனைப் பிரதிநிதியாக (D.S.R) கடமையாற்றுவதற்கு ஆள்கள் தேவை. சந்தைப்படுத்தல் துறையில் (Marketing Field) குறைந்தது இரண்டு வருட அனுவபமுள்ளவர்கள் மாத்திரம் தங்களது சுயவிவரக் கோவையை கீழ் கண்ட முகவரிக்கு 25.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக் கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். நேர்முகத் தேர்வு பற்றிய விவரம் தொலைபேசியில் அறிவிக்கப்படும்.

விளம்பர இல.5546, C/O உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### மரண அறிவித்தல்

**சுப்பன் நடேசு**



தோற்றம் 06.01.1940 மறைவு 20.11.2017

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பன் நடேசு 20.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பன் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் புவனச்சந்திரன், குலேந்திரன் (இத்தாலி), சுமதி, சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும்

### பொன்.இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு



சென்னை, நவ.21
இலங்கை, இந்தியக் கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மிகப் பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது என்று இந்திய மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி திட்டம் வகுத்துள்ளார். கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## பெற்றோல் வதந்தி திட்டமிட்ட செயல்

### அர்ஜூன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, நவ.21
பெட்ரோல் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று முன்னெடுக்கப்படும் பரப்புரை திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடு என்று பெட்ரோலிய வள அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று அரச தலைவரிடம் கோரியுள்ளேன். அந்தக் கோரிக்கையை அரச தலைவர் ஏற்றுக் கொண்டார் என்று அவர் தெரிவித்தார்.
அதேவேளை, நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று முன்னெடுக்கப்பட்ட பொய்ப் பரப்புரை தொடர்பில் பெட்ரோலிய வள அபிவிருத்தி அமைச்சு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளது.
இது தொடர்பில் விரைவில் விசாரணைகளை முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற)

## பெண் கொலையில் தேடப்பட்டவர் கைது

கொழும்பு, நவ.21
பெண்ணொருவரைத் திராவகம் ஊற்றிக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஒன்றரை வருடங்களாகத் தேடப்பட்ட ஒருவர் அவிசாவளை, சீதாவாக்கப் பிரிவு விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
கெட்டஹெத்த, நாபாவல பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் குருணாகற் பிரதேசத்தில் விலங்குப் பண்ணை ஒன்றில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவர் கொஸ்கம, பஹல கொஸ்கம, நாஹகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமான இரண்டு பிள்ளைகளின் தாயான 43 வயதான பெண்ணொருவருடன் மறைமுகத் தொடர்பை வைத்திருந்தார்.
கொஸ்கம நகரில் அழகு நிலையம் ஒன்றை நடத்தி வந்த இந்தப் பெண், அந்த இளைஞனைக் கைவிட்டு வேறு ஒரு நபருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார் என்று கூறப்படுகின்றது.
கோபமடைந்த இளைஞன் 2016ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி அழகு நிலையத்துக்குச் சென்று பெண்ணின் தலையில் திராவகத்தை வீசியுள்ளார். அதனால் அந்தப் பெண் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

# அரசமைப்பு மூலம் நாட்டை அழிப்பதை ஏற்க முடியாது

### கோத்தபாய ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, நவ.21
உயிர்களைத் தியாகம் செய்து பாதுகாத்த நாட்டைப் புதிய அரசமைப்பு மூலமோ, அரசமைப்புத் திருத்தம் மூலமோ அழிக்க இடமளிக்க முடியாது
இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
புதிய அரசமைப்பு தொடர்பாக மக்களுக்கு தெளிவுப்படுத்தும் வகையில் கேகாலை நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
பல்வேறு அரசியல்க் கட்சிகள், தலைவர்கள் மற்றும் ஆட்சி செய்த அரச தலைவர்கள், முப்படையினரைப் பயன்படுத்திப் பயங்கரவாதத்தைத் தோற்கடித்தனர்.
அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த பெருந்தொகையான இளைஞர்கள் உயிர்களைத் தியாகம் செய்தனர். அர்ப்பணிப்புகளைச் செய்து வெற்றி கொண்ட ஒற்றையாட்சி நாட்டை அழிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது.
பிரிவினைவாத அரசியல்வாதிகளுக்குத் தேவையான அதிகாரத்தைப் பகிர்வதன் மூலம் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியாது - என்றார். (ற)

# முஸ்லிம் மக்களுக்கான தனியலகு உடன்பாடிருந்தால் வெளிப்படுத்துக

### அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



கொழும்பு, நவ.21
வடக்கு - கிழக்கு இணைப்பு மற்றும் முஸ்லிம்களுக்குத்தனியலகு வழங்குவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் இரகசிய உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தால் அதனை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்.
அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது
தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் ஏற்படுத்த வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம். எமது சமூகத்தின் உரிமைக்காக நாம் குரல் எழுப்பும் போது அதனைப் பிரிவினைவாதக்கண்ணோட்டத்தில் சிலர் பார்க்கின்றனர்.
நான் அண்மையில் அரசமைப்புப் பேரவையில் வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றியே பேசியிருந்தேன். எனக்கு அந்த அனுபவம் இருப்பதாலும் கிழக்கு மக்களின் உணர்வுகளைத் தெரிந்தமையாலுமே நான் அவ்வாறு பேசியிருந்தேன்.
ஆனால் எனது உரையைச் சில ஊடகங்களும், அரசியல்வாதிகளும் திரிவுபடுத்தி மக்களைக் குழப்ப முற்பட்டுள்ளனர்.
யாழ். மாவட்ட த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெளியிட்டிருந்த அறிக்கையில், "வடக்கு-கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதும் அதில் முஸ்லிம்களுக்கு தனியலகு வழங்கப்பட வேண்டும் எனவும் முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளன." என்று குறிப்பிட்டிருந்தார்.
அவர் குறிப்பிட்டது உண்மையெனில் முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் அவ்வாறு உடன்பாடு காணப்பட்டுள்ளதா? அந்த உடன்பாடு என்ன?, முஸ்லிம் அலகு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடன்பட்டுள்ளதா?, அந்த அலகில் உள்ளடங்குகின்ற பிரதேசங்கள் என்ன?, அலகின் அதிகாரங்கள் என்ன? போன்ற விடயங்களை இரு கட்சித் தலைமைகளும் உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் நாங்கள் வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் நிதானமாகவும், அவதானமாகவும் பேசுவோம்.
நான் வடக்கு-கிழக்கு இணைவதற்கே எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன். ஆனால் கிழக்கில் முஸ்லிம் மாவட்டம் அல்லது முஸ்லிம் தனியலகு உருவாகுவதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இதனை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளமை எனக்கோ, முஸ்லிம் சமூகத்துக்கோ தெரியாது. இரு தரப்புக்கும் இரகசிய உடன்பாடுகள் இருக்குமாயின் அதனை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தி அனைவரையும் தெளிவுபடுத்தவும் வேண்டும்.
அதேவேளை, வடக்கு- கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்கியுள்ளார்களாயின் அவர்கள் யார்?, எந்தக் கட்சி?, எந்த அமைப்பு?, எந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் அதற்கு ஆதரவு வழங்கியுள்ளார் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.
இவ்வாறான இரகசிய உடன்பாடுகள் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. நான் முஸ்லிம் மக்களின் உணர்வுகளை வைத்தே இது தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசியிருந்தேன்.
எனது நாடாளுமன்ற உரையில் ஏதேனும் தவறுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உணர்ந்திருப்பாராயின் அதற்கு நாடாளுமன்றத்திலேயே மறுப்பளித்து பதில் வழங்கியிருக்க வேண்டியது அவரது பொறுப்பாகும். மாறாக ஊடக அறிக்கை வெளியிடுவதால் எதனையும் சாதிக்க முடியாது.
எனது நல்ல நண்பர் என்ற ரீதியில் அதற்கான கௌரவத்தை வழங்கி அவரது ஊடக அறிக்கைக்கு நான் பதில் அளித்துள்ளேன். - என்றார். (ற46)

## மரத்தின் மீது ஏறி நின்று அ'புரத்தில் போராட்டம்



அனுராதபுரம், நவ.21
அனுராதபுரம், புனித நகரம் பகுதியில் மரத்தின் மீது ஏறி ஒருவர் நேற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.
புனித நகரம் என இனங்காணப்பட்டுள்ள பகுதியில், இவரது வீடு அமைந்துள்ளது என்று தெரிவித்துத் தொல்பொருள் பாதுகாப்பு அதிகாரிகள் அதை அகற்றுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.
இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இவர் இந்த உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
அவரின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தரப்படும் எனத் தொல்பொருள் ஆணையாளர் தெரிவித்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த நபர் அவரின் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டார் எனத் தெரிவிக்கபட்டது. (ற-ரி5)

மணிவிழா வாழ்த்துக்கள்
இன்று (21.11.2017) செவ்வாய்க்கிழமை மணிவிழாக்காணும்
எமது வித்தியாலய உப அதிபர்
திருமதி தனலட்சுமிதேவி சிவகுரு
(B.A.Hons,Dip.in Edu.SLTS-1)
அவர்களின் சேவையை வாழ்த்துகின்றோம்.
சேவை விவரம்
(33 வருட.சேவை)
12.03.1984 - 13.08.1989
அனுராதபுரம் / நாச்சடுவ முஸ்லீம் மகாவித்தியாலயம்
14.08.1989 - 20.11.2017
யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்


ஓய்வுக் காலத்திலும் தம் இறைபணியும் கல்விப் பணியும் தொடரவும் நிறைவாழ்வு வாழவும் வாழ்த்தும்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வன்முறையைத் தூண்டியவரே சமாதானக் குழுவின் தலைவர்!

## சாடுகிறார் தென்னக்கோன்

கொழும்பு, நவ.21

கிந்தோட்டையில் சமாதானத்தை ஏற்படுத்தும் குழுவுக்கு, வன்முறைக்குத் தூண்டுதலாகச் செயற்பட்டார் என்று சந்தேகிக்கப்படும் தேரர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை எந்த வகையில் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் கபே மற்றும் இலங்கை மனித உரிமைகள் கேந்திர நிலையம் ஆகியவற்றின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதன் பின்னணியில் அரசியல் இலக்குகளும், அடிப்படைவாத இலக்குகளும் இருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பிரதேச சபைக்குப் போட்டியிட எதிர்பார்த்துள்ள கியாஸ் மற்றும் அமில நுவன் ஆகியோருக்கு இடையிலான அரசியல் போட்டியும், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனுப் பட்டியலில் இடம்பிடிக்கும் போட்டியும் கூட இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளன என்று நம்பப்படுகின்றது.

இவற்றைவிட அங்குள்ள விகாரையில் கூடிய மக்களை இனவாதக் கருத்துக்களால் வன்முறைக்குத் தூண்டினார் என்று சந்தேகிக்கப்படும் அம்பலாங்கொட சுதேநாந்த தேரர், தங்காலை அனுரத்த தேரர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று அறிய முடிகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்தத் தேரர் சமாதானத்தை ஏற்படுத்தும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் -என்றுள்ளது. (ற-31)

# கட்டுப்பாட்டுள் வந்தது கிந்தோட்டை நிலமை

## ஊரடங்கு உத்தரவு தளர்வு

கொழும்பு, நவ.21

காலி, கிந்தோட்டையில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவு நேரத்தில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கிந்தோட்டை கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், அங்கு பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

வன்முறைகளின் பின்னணியில் அரசியல், அடிப்படைவாத இலாபங்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகின்றது. தென் மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் டப்ளியூ. எப். யூ. பெர்னான்டோவின் நேரடிக் கட்டுப்பாட்டில் சிறப்பு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வன்முறைகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 19 பேர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வன்முறைகளில் தொடர்புடைய, ஒத்தாசை செய்த அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கிந்தோட்டை மேற்கு, கிந்தோட்டை கிழக்கு, குருந்துவந்த, மஹ ஹப்புகல, வெலிபிட்டி மோதர, உக்வத்த, பியதிகம ஆகிய 7 கிராம சேவகர் பிரிவுகளிலும் பிரதான மற்றும் குறுக்கு வீதிகளில் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வன்முறைகளை மேலும் வளர விடாது தடுப்பதற்காக இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

வன்முறைகளால் ஏற்பட்ட சேத விவரங்கள் மற்றும் வாக்குமூலங்களைப் பதிவு செய்யப் பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வன்முறைகளில் தொடர்புடையவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படு வார்கள். காணொலி ஆதாரங்கள், புலனாய்வுப் பிரிவு அறிக்கைகள், வாக்குமூலங்கள் என்பன ஆராயப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

### பின்னணி

கடந்த 13ஆம் திகதி கிந்தோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மஹஹப்புகலவில் விபத்தொன்று நடந்தது. சிங்கள இளைஞர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் முஸ்லிம் பெண் ஒருவரையும், பிள்ளையும் மோதியது. அதில் மூவரும் காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் சிகிச்சை பெற்று மருத்துவமனையில் இருந்து வெளியேறிய நிலையில் பொலிஸார் அவரைக் கைது செய்தனர். பின்னர் விபத்துக்குள்ளான பெண்ணும், பிள்ளையும் பொலிஸ் நிலையம் சென்று பிரச்சினையை சுமுகமாக முடித்துக் கொண்டனர். காயமடைந்த பெண்ணுக்கும், பிள்ளைக்கும் 25 ஆயிரம் ரூபா இழப்பீடும் வழங்கப்பட்டது.

கடந்த 16ஆம் திகதி முஸ்லிம் இளைஞர்கள் இருவர் மோட்டார்சைக்கிளில் சென்றபோது கிந்தோட்டை, விதானகமவில் சிங்கள இளைஞர்கள் சிலரால் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. 13ஆம் திகதி நடந்த விபத்தை மையப்படுத்தியே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்படுகின்றபோதும், அந்த விபத்துடன் தொடர்புடைய எவரும் தாக்குதலில் சம்பந்தப்படவில்லை என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

16ஆம் திகதி மாலை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் சில நபர்களுடன் இணைந்து சிங்கள சமூகத்தினருக்குச் சொந்தமான இரு வீடுகள் மீது தாக்குதல் நடத்தியிருந்தார். அதில் ஒருவர் காயமடைந்தார். நிலமை மோசமடைவதை அறிந்த பொலிஸார் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரைக் கைது செய்தனர். பிரதேசத்தின் பாதுகாப்பையும் பலப்படுத்தினர்.

முஸ்லிம் இளைஞர்களைத் தாக்கிய இருவரை 17ஆம் திகதி காலை பொலிஸார் கைது செய்தனர். அவர்களையும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினரையும் காலி நீதிவானிடம் முற்படுத்தினர். அவர்களை நேற்று 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

17ஆம் திகதி காலை கிந்தோட்டை சுமுக நிலையாகக் காணப்பட்டபோதும், இரவு 7 மணிக்குப் பின்னர் வன்முறைச் சம்பவங்கள் நடக்க ஆரம்பித்தன. கிந்தோட்டை, தூபாராம விகாரையில் சிங்களவர்கள் கொண்ட குழுவொன்று ஒன்றுகூடியது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அன்று இரவு கிந்தோட்டை முழுவதும் வன்முறைகள் அரங்கேறின. வன்முறைகள் காரணமாக இரு பள்ளிவாசல்கள், 66க்கு மேற்பட்ட வீடுகள், சுமார் 14 வாகனங்கள், 23க்கும் மேற்பட்ட கடைகள் நாசமாக்கப்பட்டன. அதையடுத்து அங்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 19 பேரை 17ஆம் திகதி இரவு பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் 16 சிங்களவர்களும், 3 முஸ்லிம்களும் உள்ளடங்குகின்றனர். வன்முறைகளில் சம்பந்தப்பட்ட ஏனையோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (ற-31)

# அரசியல் இலாபத்துக்கே பிரச்சினை உருவாக்கம்

## சாடுகின்றது சமஉரிமை இயக்கம்

கொழும்பு, நவ.21

சில அரசியல்வாதிகள் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மக்களைக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர். அதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து வாழ வேண்டும்.

இவ்வாறு சம உரிமை இயக்கம் தெரிவித்தது.

காலி மாவட்டத்தில் அண்மைய நாள்களில் நடந்த சம்பவங்கள் தொடர்பாகவே அந்த இயக்கம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

காலியின் மஹபுகல பிரதேசத்தில் நடந்த வாகன விபத்தொன்றே பிரச்சினைக்கு மூலகாரணமாக அமைந்துள்ளது. விபத்தால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு சாரார் சிங்களவராகவும், மறு சாரார் முஸ்லிமாகவும் இருந்தமையால் இந்தப் பிரச்சினை இனவாதப் பிரச்சினையாக மாறியுள்ளது.

தனிப்பட்ட இருவரிடையே ஏற்பட்ட பிரச்சினையை, நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலை மையப்படுத்திப் பிரதேச அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுத்து இனவாதப் பிரச்சினையாக்கியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்குப் பிரதான காரணம் அரசியலை ஆதரிப்பவர்களேயன்றி கிராமத்தில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்கள் அல்ல என்பதைப் பொலிஸார் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கையில் 10 நிமிடங்களுக்கு ஒரு வாகன விபத்து நடைபெறுகின்றது. இவ்வாறாயின் 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை வாகன விபத்தில் உயிரிழக்கும் நிலமை காணப்படும். இப்படியான நிலமையில் தமது நோக்கத்தை நிறைவேற்றவும், மக்களின் கவனத்தைத் திசை திருப்பவும் அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினையை உருவாக்கியுள்ளனர் என்று அந்த இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-31)

# முன்வைக்கப்பட்டுள்ள 'பட்ஜட்' நீண்டகாலத் திட்டம்கொண்டது

## கலாநிதி பிரியங்க துனசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.21

கடனில் இருந்து நாடு மீள வேண்டும் என்றால் வரி அதிகரிக்கப்படவேண்டும். இந்த வரவு - செலவுத் திட்டம் நீண்டகாலத் திட்டமாக முன்வைக்கப்பட்டுள்ளதைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி பிரியங்க துனசிங்க தெரிவித்தார். 2018ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலமைகள் சாதகமான வகையில் இல்லை. பொருளாதாரத்தை பலப்படுத்தவேண்டும் எனில் சில விடயங்களில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும். அரசு மாறினாலும் மாற்றம் பெறாத நீண்டகாலப் பொருளாதாரக் கொள்கை ஒன்று நாட்டுக்கு அவசியம். கடந்த காலங்களில் இவ்வாறான ஒரு உறுதித் தன்மையை நாம் கவனிக்கவில்லை.

பொருளாதார வளர்ச்சியின் மூலம் சமூக அபிவிருத்தியைப் பெற்று அதன் மூலம் மக்கள் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். நாட்டின் உள்நாட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஏற்றுமதிகளைப் பலப்படுத்தி உள்நாட்டு வருமானத்தைப் பலப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். இறக்குமதி மூலமாக உள்நாட்டின் வளங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் முக்கியமாகும்.

2025ஆம் ஆண்டளவில் நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்த வேண்டும் என்றால் மிகவும் கடினமான ஒரு பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்க வேண்டும். நீண்டகாலப் பொருளாதார நோக்கம் கொண்ட திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு- செலவு திட்டமானது நீண்டகாலத் திட்டம் கொண்டது எனக் கருத முடிகின்றது.

2020ஆம் ஆண்டுகளில் வரிக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தும் பிரகடனங்களை அரசு கையாள வேண்டும் என்ற நிலைப்பாடும் உள்ளது. வரி அறவிட முடியுமான துறைகளைச் சேர்ந்த நபர்களிடம் அதிக வரிகளை அறவிடுவது, நேரடி வரியை அதிகரிக்கவும், மறைமுக வரியைக் குறைக்கவும் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பன கையாளப்பட வேண்டும்-என்றார். (ற-31)

# இரு தரப்புகளுடனும் உரையாடி இணக்கப்பாடு

## அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, நவ.20



கிந்தோட்டையில் ஏற்பட்ட அசாதாரண நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவம் மீண்டும் நடக்காத வகையில் இரு தரப்பினருடனும் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலி மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் காலி மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். அதில் பௌத்த தேரர்கள், முஸ்லிம் மதத் தலைவர்கள் உட்பட பிரதேசவாசிகள் கலந்து கொண்டனர். நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரு தரப்பினரும் இணக்கத்துக்கு வந்தனர்.

சிறிய சம்பவத்தை வெளிப்பிரதேசத்தில் வந்த சிலரே பெரிய கலவரமாக்கியுள்ளனர். ஆரம்பத்தில் நடந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கும் வன்முறைக்கும் தொடர்பில்லை. வெளியில் இருந்து வரும் சிலரே இந்தப் பிரச்சினையைத் தூண்டி வருகின்றனர். இனவாதக் கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் பரப்புரை செய்யப்படுவதும் கலவரம் நீடிப்பதற்குக் காரணமாகும் -என்றார். சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டார்.

கலவரம் காரணமாக அங்குள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் அச்சத்துடன் இருக்கின்றனர். மக்கள் அச்சமின்றி வாழும் சூழலை ஏற்படுத்துவது அரசு என்ற வகையில் எமது கடமை. நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பிரதேசத்தின் பாதுகாப்புக்காகப் பொலிஸ், இராணுவம், சிறப்பு அதிரடிப் படை மற்றும் கடற்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் நிலமை சுமுகமான நிலைக்கு வரும் எனக் கருதி கடமையிலிருந்த சிறப்பு அதிரடிப் படையினரின் எண்ணிக்கையைக் குறைத்தோம். நேற்று முன்தினம் நிலமை மீண்டும் மோசமாகியது. நிலமை பூரணமாகக் கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை பாதுகாப்பில் எந்தக் குறைவையும் ஏற்படுத்தமாட்டோம். மக்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்று அவர் குறிப்பிட்டார். காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்ததாவது:

சகல இன மக்களும் ஒற்றுமையாக தங்கள் பிரதேசங்களில் வாழ்வதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக்கொள்ள ஒத்துழைக்க வேண்டும். பாதுகாப்புப் பிரிவினரும் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். அவர்களுக்கு அரசு என்ற வகையில் நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார். (ற-31)

# சு.க. உள்வீட்டு பிரச்சினையால் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி

## சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு. நவ.21

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் காணப்படும் பிரச்சினையால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா. கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தேர்தலை ஒத்திவைக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள 6 பேரில் 5 பேர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. இந்த நடவடிக்கை மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் அரசியல் தேவை தெளிவாகியுள்ளது.

எல்லை நிர்ணய பணிகள் முடிவடைந்து நீண்டகாலம் எதனையும் செய்யாது. இறுதி நேரத்தில் தேர்தலை ஒத்திவைப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

நீதிமன்றத்துக்கு சென்ற சகல அரசியல் கட்சிகளும் தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என கோரியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மாத்திரம் அவ்வாறு கோராதமை அவர்கள் தேர்தலை விரும்பவில்லை என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் பிரிந்து தனித் தனியாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் போது கட்சி பிளவுபடும். இதன் மூலம் ஏற்படும் தோல்வியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் தாங்கிக்கொள்ள முடியாது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி விரும்பவில்லை. தேர்தலை நடத்த மக்கள் விடுதலை முன்னணி எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்- என்றார். (ற)



மத்திய மாகாணக் ஹற்றன் கல்வி வலயம் செனன் தமிழ் மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்றன. மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் 40 லட்சம் ரூபா நிதி ஒதிக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட கட்டடத்தை நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் திறந்தார். (ற)

# மக்கள் அச்சமின்றி வாழும் நிலமை ஏற்பட வேண்டும்

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு. நவ.21



புதிய அரசமைப்பின் ஊடாக சகல மக்களும் அச்சமின்றி உரிமையுடன் வாழும் நிலை உருவாக வேண்டும் அனைத்து மக்களும் சுயநிர்ணய உரிமையினை நிலை நாட்டி உரிமையைப் பகிர்ந்து வாழும் நிலையேற்பட வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தபட்ட நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது அமைப்புகளுக்கு உபகரனாங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார் நிலையில் உள்ளது. எமது கட்சி ஊழல் மோசடிகள் இலஞ்சம் போன்றவற்றுக்கு அப்பாற்பட்டுமக்களுக்குஇயன்ற வகையில் அர்ப்பணிப்புடன் உதவிகளைச் செய்கின்றது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலைக் குழப்பிக்கொண்டு யாராவது அரசியலில் தனிக் குடித்தனம் சென்றால் அவர்களுக்குரிய தகுந்த பாடத்தை மக்கள் புகட்டுவார்கள். அண்மையில் வெளிவந்த இடைக்கால அறிக்கை ஒரு முடிவான அறிக்கையாக வர வேண்டும்.

எமது மக்கள் போர்ச் சூழ்நிலையில் வாழ்ந்து சலிப்படைந்துவிட்டார்கள். நாங்கள் ஒரு சரியான ஜனநாயக திசையில் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் உள்ளோம். தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசத்தில் தங்களது விடயங்களை தாங்களே கையாளக் கூடியதாகவும் தமது அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் புதிய அரசமைப்பு இருக்க வேண்டும். என்றார். பிரதேச செயலாளர் நல்லையா வில்வரெட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்தகிழ்வில் 8 அமைப்புகளுக்கு 4 இலட்சத்து 60 ஆயிரம் பெறுமதியான உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ற-ரி5)

# கிழக்கு மாகாண ஆளுநர் அதிகாரிகளை பந்தாடவில்லை

## நகர சபைச் செயலர் தெரிவிப்பு

ஏறாவூர், நவ.21

இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அதிகாரிகள் கிழக்கு மாகாண ஆளுநரால் பந்தாடப்படுகின்றார்கள் என்பதில் எந்த உண்மைத் தன்மையுமில்லை.

இவ்வாறு ஏறாவூர் நகர சபையின் செயலர் பிர்னாஸ் இஸ்மாயில் தெரிவித்தார். ஏறாவூர் நகர சபையின் காரியாலய உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று ஏறாவூர் நகர சபையின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவைகள் அதிகாரிகளைக் கொண்டு கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தை மிகச் சரியான முறையில் ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே இந்த இடம் மாற்றங்கள் யாவும் இடம்பெற்றுள்ளது.

இந்த இடமாற்றங்களில் இனப்பாகுபாடுகள் அற்ற ஒரு இடமாற்றங்களாகவே எங்களது இடமாற்றங்கள் நடைபெற்றுள்ளது. இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அதிகாரிகள் கிழக்கு



மாகாண ஆளுநரால் ஒருபோதும் பந்தாடப்படவில்லை. அவர்களுக்கு சரியான பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு எங்கும் அநீதி இடம்பெறக்கூடாது என்ற சிந்தனையில் கிழக்கு மாகாண ஆளுநர் இருக்கின்றார். இதனை நாம் அனைவரும் கருத்தில் கொண்டு செயற்பட்டால் எமது காரியாலயத்தில் ஒருபோதும் பிரச்சினைகள் இடம்பெற வாய்ப்பே இல்லை. அரச கடமையை மிக அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற வேண்டும். எமக்கு ஒப்படைக்கும் வேலைகளை சரியாகவும் உரிய நேரத்துக்குள் செய்துமுடிக்க வேண்டும். இவ்வாறு நாம் அனைவரும் கடைப்பிடிப்போமானால் எமது வாழ்க்கையில் பல வெற்றிப் படிகளை அடைந்துகொள்ளலாம். என்றார். (ற-ரி5)



உடுப்பிட்டி தொகுதிக்கு உட்பட்ட ஆலயங்கள் மூன்றின் சீரமைப்புக்காக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. கரவெட்டி பிரதேச செயலர் சிறிமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து பரிபாலனசபை தலைவர்களிடம் காசோலையை வழங்கினார். அருள்மிகு வாலம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆயலம், கரணவாய் தெற்கு அருள்மிகு முருகையா ஆலயம், கரணவாய் தெற்கு வெற்றிக்காட்டு பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கே நிதி வழங்கப்பட்டது.(ற)

# தொடருந்து கார் விபத்து மூவர் பரிதாபமாகச் சாவு

கொழும்பு, நவ.21



தொடருந்துடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் வெயாங்கொட, பட்டிகொடவில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

கொழும்பிலிருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற தொடருந்தும், காரும் மோதியே விபத்து நடந்துள்ளது. காரில் பயணித்த நால்வரில் மூவர் உயிரிழந்தனர். ஒருவர் பெரும் காயங்களுக்குள்ளான நிலையில் வத்துபிட்டிவல இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# மருத்துவ பீட மாணவர்களின் கற்றல் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு,நவ.21

சைட்டம் மருத்துவக் கல்லூரியை மூடுமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் நேற்றுத் தொடக்கம் தமது கற்றல் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

அரச மருத்துவ பீடங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் விரிவுரைகளில் கலந்துகொள்வதற்கு தீர்மானித்ததாகவும் கடந்த ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் சைட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்படி கடந்த 11மாதங்களின் பின்னர் நேற்று விரிவுரைகளுக்கு சமுகமளிப்பதாகவும் மருத்துவ பீடங்களின் மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் ரயன் ஜயலத் தெரிவித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4)

# சைட்டம் தொடர்பாக மைத்திரிக்குக் கடிதம்

கொழும்பு,நவ.21

சைட்டம் தனியார் மருத்துவக்கல்லூரியை தடை செய்வது தொடர்பான வர்த்தமானியை வெளியிட வேண்டும் என்று கடிதம் மூலம் அரசதலைவருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளது.

சைட்டம் நிறுவனத்தை தடைசெய்வது மட்டுமின்றி, குறித்த நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவர்களுள் மருத்துவப் பீடத்துக்குத் தெரிவு செய்யக்கூடிய மாணவர்களுக்கு மருத்துவக் கற்கை நெறிக்காக வாய்ப்பை வழங்க வேண்டும். அதற்கென வயம்ப பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ பீடத்தை பயன்படுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

சைட்டம் நிறுவனத்தை தடைசெய்யுமாறு ஹர்ஸ த சில்வா குழுவால் அறிக்கை வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனைத் குழப்புவதற்கு பலர் முயற்சிக்கின்றனர். என்றார். (ற-ரி4)

# கையூட்டு வழங்க முயன்றவர் கைது

கொழும்பு. நவ.21

பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு கையூட்டு வழங்க முயற்சித்த ஒருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

மாத்தறை - மாலிம்பட பொலிஸ் நிலையத்துக்கு சென்ற ஒருவர், தம்மால் மேற்கொள்ளப்படும் கஞ்சா வர்த்தகம் தொடர்பில் தம்மை கைதுசெய்ய வேண்டாம் என்று பொாலிஸ் அதிகாரி ஒருவரிடம் கூறி 15 ஆயிரம் ரூபா பணத்தை கையூட்டாக வழங்க முயற்சித்துள்ளார்.

அதையடுத்துக் அங்கு கைதுசெய்யப்பட்ட அவரைப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



# அமெரிக்காவுடன் பேச வாய்ப்புக்கள் இல்

வொஷிங்டன், நவ. 21
"அணு ஆயுத விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்த வாய்ப்பில்லை" என்று வடகொரியா தெரிவித்துள்ளது. ஐ.நா. சபைக்கான வடகொரியத் தூதர் ஹன் டே சாங் இவ்வாறு தெரிவித்தார்.
பன்னாட்டு சட்டதிட்டங்களையும், விதிமுறைகளையும் மீறி தொடர்ந்து ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது வடகொரியா. கடந்த மாதத்தின் மத்திய பகுதியில் அந்த நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையையும், அணுகுண்டை விடவும் சக்தி வாய்ந்த ஐதரசன் சோதனையையும் நடத்தியது. இந்தச் சோதனைகள் ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா ஆகியவற்றுக்கு எதிரானவை என்று வடகொரிய
மாக எச்சரித்ததை அடுத்து, அமெ
ஜப்பானும், தென்கொரியாவும்
அவ்வப்போது கூட்டுப் போர்ப் ப
நடத்தி வருகின்றன. அதிலும் அமெ
தென்கொரியாவும் கூட்டுப்போர்
ளில் தற்போது அதீத அக்கறை கா
றன. இத்தகைய பின்னணியி

## பதவி விலக முகாபே மறுப்பு



ஹராரே, நவ. 21
சிம்பாப்வேயின் ஆளும் கட்சியான ஷானு பி.எப். கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்ட பின்னரும், அந்த நாட்டின் அதிபர் பதவியில் இருந்து விலகுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார் ரொபேர்ட் முகாபே.
சிம்பாப்வே தேசிய தொலைக் காட்சியில் நேற்றுமுன்தினம் உரையாற்றினார் முகாபே. அதன்போதே அவர் பதவியில் இருந்து விலகுவதற்கு மறுப்புத் தெரிவித்தார். அடுத்த மாதம் ஷானு பி.எப். கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கட்சித் தலைவர் என்ற முறையிலும், சிம்பாப்வே அதிபர் என்ற முறையிலும் நான் கலந்துகொள்வேன். அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்று முகாபே மேலும் தெரிவித்தார். (ம)




## பசுபிக் பகுதியில் நிலநடுக்கம்


பசுபிக் கடலின் தெற்குப் பகுதியில் நேற்றுக் காலை 7 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள நியூ கலிடோனியா தீவில் டடைன் பகுதியில் நேற்றுக் காலை சுமார் 7.0 ரிச்டர் அளவுகோலில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் சில நிமிடங்கள் நீடித்தது. டடைன் பகுதிக்கு 300 கிலோமீற்றர் தொலைவில் சுமார் 82 கிமீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.
சக்திவாய்ந்த நிலநடுக்கம் என்பதால் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டது. (ம)

கட்சித் தலைமையில் இருந்தும்

# ரொபேர்ட் முகாபே வெளியேற்றப்பட்டார்

ஹராரே, நவ. 21
சிம்பாப்வே அதிபர் முகாபே, ஆளும் கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். புதிய தலைவராக முன்னாள் துணை அதிபரை நியமித்தும் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் முகாபே (வயது 93) 1980ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பதவி வகித்து வருகிறார். அதிகாரத்தைத் தன்வசப்படுத்த முயற்சிப்பதாகக் கூறி அந்த நாட்டுத் துணை அதிபர் எமர்சன் நாங்காவாவை முகாபே அண்மையில் பதவி நீக்கம் செய்தார். இராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் சிவெங்கா, நீக்கப்பட்ட துணை அதிபர் எமர்சனுக்கு ஆதரவாக நின்றார். இதனால், அந்நாட்டு அரசியலில் குழப்பநிலை ஏற்பட்டது. இதனையடுத்து, கடந்த முதலாம் திகதி தலைநகர் ஹராரேவை இராணுவ பீரங்கிகள் சுற்றி வளைத்தன. அதிகளவிலான இராணுவச் சிப்பாய்கள் ஆயுதங்களுடன் தலைநகரைச் சுற்றிக் குவிக்கப்பட்டனர். ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது. சிம்பாப்வேயின் ஆளும் கட்சியான ஷானு பி.எப் கட்சியின் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார் முகாபே. முகாபேயால் நீக்கப்பட்ட எமர்சன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். இதையடுத்து முகாபே அதிபர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட வேண்டிய சட்டபூர்வ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)





“ கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கப் பட்டார் முகாபே. முகாபேயால் நீக்கப்பட்ட எமர்சன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

## ஆர்ஜென்ரீனா நீர்மூழ்கிக் கப்பல் மாயம்

பியூனஸ் ஏர்ஸ், நவ. 21
ஆர்ஜென்ரீனா நாட்டுக்கு சொந்தமான நீர் மூழ்கிக் கப்பலொன்று கடந்த மூன்று தினங்களாக மாயமாகியுள்ளதை அடுத்து அதைத் தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. கப்பலில் இருந்த 44 பேரின் நிலமை தொடர்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.
'சான்ஜு யர்னஸ்' என்ற நீர் மூழ்கிக் கப்பலே அவ்வாறு காணாமல் போயுள்ளது. கப்பலைத் தேடும் பணியில் சிறிய ரக நீர் மூழ்கிக் கப்பல்களும், உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ம)

*மாயமான கப்பல்*





## அபு கமல் நகரம் மீட்கப்பட்டது

டமஸ்கஸ், நவ. 21
ஈராக் சிரிய நாடுகளின் எல்லைப்புற நகரான அபு கமல் நகரம் கைப்பற்றப்பட்டது. ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் மீட்கப்பட்டுள்ள நிலையில் சிரியாவின் நகர்களும் எல்லைப்புற நகர்களும் தற்போது கட்டம் கட்டமாக மீட்கப்பட்டு வருகின்றன. ஈராக், சிரிய எல்லை நகரான மயாடீன், ரவா நகரங்கள் மீட்கப்பட்டிந்த நிலையில் அபு கமல் நகரமும் தற்போது மீட்கப்பட்டுள்ளது. (ம)

## வியாழனில் கடும்புயல்

வொஷிங்டன், நவ. 21
வியாழன் கிரகத்தில் கடும் புயல் வீசியுள்ளது என்று நாசா அனுப்பிய ஜூனோ எனப்படும் விண்கலம் கண்டறிந்துள்ளது.
வியாழன் கிரகத்தில் ஆய்வு செய்ய அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் ஜூனோ என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த கமரா வியாழன் கிரகத்தில் ஏற்படும் பருவநிலை மாற்றம் மற்றும் தட்ப வெப்ப நிலைப்பாடுகளை ஒளிப்படம் எடுத்துப் பூமிக்கு அனுப்பி வருகிறது. சமீபத்தில் ஜூனோ விண்கலம் எடுத்து அனுப்பிய ஒளிப்படத்தில் வியாழன் கிரகத்தில் கடும் புயல் வீசியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. (ம)



# இல்லை என வடகொரியா திட்டவட்டம்

கொரியா பகிரங்க
, அமெரிக்காவும்,
ாவும் இணைந்து
ாப் பயிற்சிகளை
ம் அமெரிக்காவும்,
ப்போர்ப் பயிற்சிக
றை காட்டிவருகின்
ணியில் பதற்றம்

மேலும் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்காவுடன் சமாதானப் பேச்சில்லை என்று வடகொரியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

“எங்கள் நாட்டை அச்சுறுத்தும் வகையில் அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து கொரிய தீபகற்பத்தில் போர் ஒத்திகைகளை நடத்தி வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் அமெரிக்காவுடன் எவ்வாறு பேச்சு நடத்த முடியும். அதற்கு வாய்ப்பில்லை. எங்கள் நாட்டின் பாதுகாப்பை அதிகரிக்க ஏவுகணைச் சோதனைகளை தொடர்ந்து நடத்துவோம். போர் ஒத்திகைகளை அமெரிக்கா நிறுத்தினால் எங்களது முடிவை மறுபரிசீலனை செய்வோம்” என்று ஐ.நா. சபைக்கான வடகொரியத் தூதர் ஹன் டே சாங் மேலும் தெரிவித்தார். (ம)




37 ஆண்டுகளாக சிம்பாப்வேயை ஆட்சி செய்துவந்த அந்த நாட்டு அதிபர் முகாபேயின் சகாப்தம் இராணுவத்தால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், இராணுவத்துக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது. இராணுவத்தினரும் பொதுமக்களும் இணைந்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒளிப்படங்கள் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டுள்ளது. (ம)



## வீட்டில் ஏற்பட்ட தீயால் 19 பேர் பரிதாபச் சாவு

*சீனாவில் துயரம்*

சீனாவின் டாக்சிங் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந்தனர்.

டாக்சிங் மாவட்டம் ஜிங்ஜியான் கிராமத்திலேயே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் எட்டுப்பேர் படுகாயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் அடிப்படையில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


# மரண அறிவித்தல்

## பொன்னர் சின்னையா (கொண்டா ராசு)

**(பிரபல புகையிலை வர்த்தகர், யோகாஸ் கிறீம் ஹவுஸ்,மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையம், P.S. ஸ்தாபன உரிமையாளர், பழவத்தை காளி அம்பாள் தேவஸ்தான அறங்காவலர்)**



பழவத்தை, வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சின்னையா நேற்று (20.11.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - செல்லாச்சி தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பரம்சோதி - கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், முருகானந்தன் (கனடா), கலாவதி (டென்மார்க்), நீலாவதி (இலங்கை), அருளானந்தன் (சுவிஸ்), நித்தியானந்தன் (டென்மார்க்), கமலாவதி (கனடா), விமலாவதி (பிரான்ஸ்), யோகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தம்பையா, நாகம்மா, பரம்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுமாரி (கனடா), சற்குணராஜா (டென்மார்க்), பிரபாகரன் (இலங்கை), சுகந்தினி (சுவிஸ்), சுதர்சினி (டென்மார்க்), சிவகுமார் (கனடா), பத்மாகரன் (பிரான்ஸ்), சைலஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷாந்தன், நிரோஷன், நிவேனி, சுகந்தன், சபீனா, சர்மிளா, பார்த்திபன், நீலாகிருஷ்ணன், நிரூபா, விஷ்ணு, அபிஷன், அமிர்ஷன், சிவதர்ஷன், அனோஜா, வினோஜா, யதுர்ஷா, நந்துஷா, கம்ஷா, கஜானன், திவ்யா, கஜீபன், நர்த்தனா, சஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழவத்தை, வியாபாரிமூலை,
பருத்தித்துறை.**

**தகவல்
குடும்பத்தினர்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# புதிய தேசியக் கொடி பற்றி கலந்துரையாட நல்ல வாய்ப்பு

வடமாகாணக் கல்வி அமைச்சர் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்ற மறுத்தார் என்ற விடயம் இப்போது பூதாகாரமாக்கப்பட்டு வருகின்றது. தமிழர்களின் இனவாதம் என்று இதனை வர்ணித்திருக்கிறது ஜே.வி.பி. அதேபோன்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது ஒரு மிகப் பெரிய விடயம் என்பதாகத் தூக்கிப்பிடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

"வடக்கிலும் இனவாத மனோநிலை உருவாகியுள்ளது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்ற மறுத்திருக்கின்றார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும். தேசியக் கொடி தொடர்பில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிலைப்பாடு இருக்கலாம். இருந்தாலும் தற்போதுள்ள தேசியக் கொடி தான் அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது" என்று தெரிவித்திருக்கிறார் ஜே.வி.பியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க.

"வட மாகாணக் கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுக்கும் நிலையிலும், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்களைக் கொதிப்படையச் செய்யும் வகையில் தொடர்ந்து கருத்துக்களைத் தெரிவித்து வரும் நிலையிலும் எப்படி நாம் அரச தலைவரினதும் ஆளுநரினதும் அதிகாரங்களைக் குறைப்பது? எனவே நிறைவேற்று அரச தலைவர் முறைமை தொடர்ந்து இருக்கவேண்டும். அதுவே நாட்டுக்கு நல்லது" என்று தெரிவித்திருக்கிறார் அமைச்சர் மகிந்த சமரசிங்க.

வடமாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்ற மறுத்தது தவறுதான் என்று தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். தனது அதிருப்தியை வேறு வழியில் அமைச்சர் வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். தேசியக் கொடியை ஏற்ற மறுப்பது போலித் தேசியம் என்று விமர்சித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

உண்மையில் இப்படியெல்லாம் கொதித்தெழுந்து பிரச்சினைப்படத்தக்க ஒரு விடயமா இது? இலங்கையின் தேசியக் கொடி பன்மைத்துவதைப் பறைசாற்றுவதாக இல்லை என்பதும் சிங்களத்தின் வழித்தோன்றல்கள் சிங்களவர்கள் என்கிற நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதும் எல்லோராலும் விமர்சிக்கப்பட்டு வருவதே! அதிலும் இனப் பிரச்சினை ஆயுத மோதலாகப் பரிணமித்ததன் பின்னர் தேசியக் கொடி பற்றிய இந்த விமர்சனம் இன்னும் பலம்பெற்றது. சிங்கக் கொடிக்குப் பதிலீடான புலிக்கொடியும் கூட தமிழர்களின் தேசியக் கொடியாக இருந்த காலமும் உண்டு.

இவ்வாறு தனக்கு உடன்பாடில்லாத ஒரு தேசியக் கொடியை ஏற்ற மறுப்பதென்பது எப்படி அந்தக் கொடியை அவமரியாதை செய்வதாகும்? வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் அந்தக் கொடியை யாருமே ஏற்றக்கூடாது என்று மறிக்கவில்லை, கொடியைக் கிழிக்கவோ கசக்கவோ இல்லை, அதற்கெதிராகக் குரல் எழுப்பவில்லை என்னும்போது இலங்கையின் தேசியக் கொடி எப்படி அவமரியாதைக்கு உள்ளாக்கப்பட்டது? இன்னும் சொல்லப்போனால், தேசியக் கொடி வேறு ஒருவரால் ஏற்றப்படும்போது அதற்குரிய மரியாதையை வழங்கியபடியே அங்கு நின்றிருந்தார் மாகாணக் கல்வி அமைச்சர். அப்படியிருக்கும்போது அவர் தேசியக் கொடியை அவமரியாதை செய்தார் என்பது எப்படிச் சரியானதாகும்?

கொடியை ஏற்றுவதும் விடுவதும் தனிமனித சுதந்திரத்துடன் தொடர்புடைய விடயமில்லையா? தேசியக் கொடியை ஏற்றக் கூடியவர்கள் அல்லது ஏற்றக்கூடாதவர்கள் என்று அரசமைப்பு திட்டவட்டமான வரையறை எதனையும் தராதபோது, மாகாண அமைச்சர் ஒருவர் தேசியக் கொடியை ஏற்றித்தான் ஆகவேண்டும் என்பது என்ன கட்டாயம்?

தனக்கு உடன்பாடில்லாத ஒரு கொடியை, தான் ஏற்றாமல் மற்றொருவர் அதனை ஏற்ற இடமளித்து ஒதுங்கி நிற்பது தேசியக் கொடிக்கு அவமதிப்பு, அரசமைப்புக்கு அவமதிப்பு என்றால், தற்போதிருக்கும் அரசமைப்பு இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பொருத்தமற்றது என்றுகூறிப் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க எடுக்கப்படும் முயற்சி மட்டும் அரசமைப்பு அவமதிப்பாக அமையாதா?

தெற்கிலே தொடர்ந்து கிளர்ந்து எரியும் இனவாதத் தீக்குநிகராக வடக்கிலும் இனவாதம் கொழுந்துவிட்டெரிகிறது என்று காட்டுவதற்கு இதுபோன்ற சிறு சிறு தனிமனிதக் கொள்கைகளைப் பயன்படுத்துவதைவிட்டு, உண்மையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஏற்ற மறுக்கும் விதத்தில் அமைந்துள்ள தேசியக் கொடியின் வடிவத்தை அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வடிவத்துக்கு மாற்றுவது குறித்து ஆராய்வதே காலப் பொருத்தமானது. புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போது அனைத்து மக்களையும் பிரதிபலிக்கும் வகையிலான புதிய தேசியக் கொடி ஒன்றையும் உருவாக்குவது குறித்து ஆராயப்படவேண்டும்.

# முன்னுதாரணமாக செயற்பட வேண்டும் முதலமைச்சர்

இந்துமதி

அடுத்தகட்டத்தலைமையை உருவாக்குவதற்குத் தமிழர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் இணைத்தலைவர் பதவியை வகிக்கும் தமிழ் மக்கள் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் வைத்தே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இன்றைய தலைவர்கள் தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சரான மறைந்த காமராசர் பாணியில் அரசியலில் பின்னால் ஒதுங்கி நின்று தமிழரின் அரசியல் இயந்திரத்தை இயக்கவேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.
படிக்காத மேதையென அடையாளப்படுத்தப்பட்ட காமராசர், தமது நேர்மையாலும், கடுமையான உழைப்பினாலும் படிப்படியாக அரசியலில் உயர்ந்து தமிழ் நாட்டின் முதலமைச்சர் பதவியைச் சிறப்பாக வகித்தவர். தமிழ்நாட்டின் சின்னஞ்சிறு கிராமங்கள் தோறும் பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் கல்விக் கண்களைத் திறந்தவர். இவர் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை வகித்தபோது தமது பெயரிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தினார். இதன் மூலமாக வயது முதிந்த மூத்த அரசியல்வாதிகள் தாம் வகித்த பதவிகளைத் துறந்து கட்சிப் பணிகளை ஆற்றினார்கள். தற்போது வடக்கு முதலமைச்சரும் காமராசரது அந்தப் பாணியை மனதில்வைத்தே மேற்கண்டவாறு கூறியுள்ளார் எனக் கொள்ளலாம்.

### வடக்கு முதலமைச்சரும் காமராசர் பாணியில் செயற்படல் அவசியம்

வடக்கு முதலமைச்சரும் வயது முதிர்ந்த ஒருவர்தான். ஆகவே காமராசரின் பாணியில் அவர் தமது பதவியைத் துறந்துவிட்டு, கூட்டமைப்பின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு உழைக்க வேண்டும். அவர் அவ்வாறு நடந்து கொண்டால் மற்றவர்களும் அவரைப் பின்பற்றி நடப்பார்கள். அவருக்கு மதிப்பும் மரியாதையும் வழங்குவர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் இரா. சம்பந்தன் தமிழர்களின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார். உயர்ந்த கல்வி அறிவும், சிறந்த அரசியல் அனுபவமும் கொண்ட அவர் தமது அரசியல் கடமைகளைச் செவ்வனே ஆற்றி வருகின்றார். தந்தைசெல்வா உயிருடன் இருந்தபோதே அமிர்தலிங்கம் போன்ற அடுத்த கட்டத் தலைவர்கள் உருவாகிவிட்டனர். இதனால் செல்வாவின் மறைவுக்குப் பின்னர் அவரது வெற்றிடத்தை நிரப்புவதில் சிரமம் ஏற்படவில்லை. தற்போதைய நிலையில் சம்பந்தனுக்குப் பிறகு தலைமைப்பொறுப்பை ஏற்கின்ற தகுதி மாவை சேனாதிராசாவுக்கு மட்டுமே உள்ளது. தனது இளவயதில் இருந்தே தமிழ் அரசுக்கட்சியுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்த அவர், தியாக வரலாற்றுக்




கும் சொந்தக்காரர். ஆனால் அரசியல் ரீதியான காழ்ப்புணர்வு காரணமாக இன்று மாவையை எதிர்ப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

### மக்களது அபிமானம்பெற்ற தலைமைத்துவம் நீண்டு நிலைக்கத்தக்கது

மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைமைத்துவமே நிலைத்து நிற்கக்கூடியது. மக்கள்தான் தலைவர்களை உருவாக்க வேண்டும். அதை விடுத்து நானே தலைவன் எனக் கூறிக் கொண்டு புறப்படுபவர்களை மக்கள் நிராகரிக்கவே செய்வார்கள். அரசியலுக்குப் புதியவர்கள் கருத்துக்களை வெளியிடும்போது அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். வடக்குத் தமிழர்கள் தமது அரசியல் தலைமை சுட்டிக்காட்டிய ஒரே காரணத்துக்காகவே விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் அமர்த்தினர். அந்த மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் வகையில் முதலமைச்சர் நடந்து கொள்ளக்கூடாது.
தற்போது கூட்டமைப்புக்கு எதிரான எதிரணியை அமைத்துக் கொண்டவர்கள் இனிமேல்தான் அதற்கொரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எதிரணியில் பல தரப்பட்டவர்கள் அங்கம் வகிப்பதால் தலைவரைத் தெரிவு செய்வதில் குழப்பங்களும் இடம்பெறக்கூடும். இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு விக்னேஸ்வரன் பக்கமும் அவர்களின் பார்வை திரும்பக் கூடும். இதற்கு இணங்கினால் மன்னிக்க முடியாத தொரு துரோகியாகவே முதலமைச்சர் கணிக்கப்படுவார்.

### தமது அடிப்படைக் கொள்கை நிலைப்பாட்டிலிருந்து தமிழ் மக்கள் பேரவை பிறழக்கூடாது

இதே வேளை புதிய கூட்டணிக்கு தமிழ் மக்கள் பேரவை ஆதரவு வழங்கியதால் அதற்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. பேரவையின் அடிப்படைக் கொள்கையான அரசியலில் ஈடுபடாமை என்ற நிலைப்பாட்டை உதாசீனம் செய்தமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பேரவையின் தேர்தல் நடவடிக்கைக்கு அதன் இணைத்தலைவர்கள் இருவரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உண்மையைச் சொல்லப்போனால், இது கூட்டமைப்புக்கு எதிரான காரியமல்ல என்பதை சம்மந்தப்பட்டவர்கள் இப்போதாவது புரிந்துகொண்டிருப்பார்கள். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலும் வழக்கம் போன்று கூட்டமைப்புக்கே வெற்றி கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் முன்னர் போலன்றி தகுதியானவர்களை வேட்பாளர்களாக நியமிப்பது அதன் தலையாய கடமையாகும். அத்துடன் எதிரணியின் தவறான பரப்புரைக்ளை முறியடிக்கும் வகையில் வியூகங்களும் வகுத்துச் செயற்படுத்தப்படல் வேண்டும்.
ஒரு மனிதனின் உடலில் தலைதான் முதன்மையான உறுப்பாகும். இதைப் போன்றுதான் எந்தவொரு அமைப்புக்கும் தலைமைத்துவம் என்பது முதன்மையானது. ஆனால் கூட்டமைப்புக்கு எதிரான எதிரணிக்குத் தலைமைத்துவம் இல்லாமை அதன் செயற்பாடுகளுக்குப் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் எதுவும் கிடையாது.





# தமிழ் - முஸ்லிம் உறவைப் பலப்படுத்த முஸ்லிம் தலைவர்கள் முன்வரவேண்டும்

சேரலாதன்

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் முஸ்லிம் மக்கள் நடந்து கொள்ளக் கூடாதென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறியுள்ள நிலையில், வடக்கு-கிழக்கு இணைப்பு யோசனைக்கு முஸ்லிம்கள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

வடக்கும், கிழக்கும் இணைக்கப்படுமானால் நாட்டில் இரத்த ஆறு ஓடுமென ராஜாங்க அமைச்சரான ஹிஸ்புல்லா எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், அமைச்சர் றிசாத் பதியுதீனும் அதைப் போன்றதொரு கருத்தை வெளியிட்டுள்ளார். இவர்களில் முன்னவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்; மற்றையவர் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவர்.

**வடக்கில் தமிழர்களும் கிழக்கில் முஸ்லிம்களும் பெரும்பான்மையினர்**

வடக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். முஸ்லிம் மக்கள் சிறிய எண்ணிக்கையினராக உள்ளனர். இதே வேளை கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம் மக்களே பெரும்பான்மையினராக உள்ளனர். தமிழர்கள் இவர்களுக்கு அடுத்த நிலையிலேயே காணப்படுகின்றனர். சிங்களவர்கள் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளனர். வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட்டிருந்தபோது தமிழர்கள் பெரும்பான்மையினர் என்ற அந்தஸ்தைக் கொண்டிருந்தனர். தமிழர் ஒருவரே முதலமைச்சர் பதவியை வகிக்க முடிந்தது. பின்னர் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் இணைந்ததொரு ஆட்சி மாகாண சபையில் இடம்பெற்று வந்தது. முஸ்லிம் ஒருவரே முதலமைச்சர் பதவியை வகித்து வந்தார். கடந்த செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைந்ததால், தற்பொழுது ஆளுநரின் நிர்வாகம் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தமை ஈழத் தமிழர்களுக்கு இந்தியா புரிந்த மிகப்பெரிய துரோகமாகும். இரண்டு நாட்டுத் தலைவர்களுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலமாக வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் அபகரிக்கப்படும் கிழக்கு மாகாணம்**

கிழக்கு மாகாணம் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமாக பெரும்பான்மையினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றது. நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்தே இது ஆரம்பிக்கப்பட்டு விட்டுள்ளது. இதனால் பாதிக்கப்படுவது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள்தான். கடந்த காலங்களில் தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையேயான உறவைச் சீர் குலைப்பதற்குச் சில தீய சக்திகள் முனைப்புடன் செயற்பட்டு வெற்றியும் பெற்றன. இந்த இரண்டு இனங்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டதற்கும் இதுவே முதன்மைக் காரணமாகும். வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் இதன்பின்னணியிலேயே வெளியேற்றப்பட்டனர். இந்த நாட்டிலுள்ள பேரினவாதத் தரப்பினர்கள் இந்த இரண்டு இனங்களும் ஒன்று சேராது தடுப்பதில் மிகவும் கவனமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

மறைந்த முஸ்லிம் மக்களது. தலைவர் அஷ்ரப்பினால் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணவென அமைக்கப்பட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று பல துண்டுகளாக உடைந்து காணப்படுகின்றது. பெரும்பான்மையினக் கட்சிகள் கிழக்கில் மீண்டும் காலூன்றுவதற்கு இது வாய்ப்பாக அமைந்துள்ளது.

என்னதான் தனித்துவம் என்று கூறிக் கொண்டாலும், முஸ்லிம் கட்சிகள் தெற்கில் உள்ள பெரும்பான்மையினக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதையே காணமுடிகின்றது. இதன் மூலமாக முஸ்லிம் சமூகத்தவர்கள் உயர் பதவிகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். கிழக்கு மாகாணசபையைப் பொறுத்தவரையில் ஒரு தமிழரோ அல்லது முஸ்லிம் ஒருவரோ முதலமைச்சர் பதவியில் அமருவதற்கான வாய்ப்புக்களே காணப்படுகின்றன. இந்த விடயத்தில் கூட்டமைப்பு விட்டுக் கொடுத்து நடந்துள்ளது. இதனால் முஸ்லிம் ஒருவர் அந்தப் பதவியை வகிக்க முடிந்தது. வடக்கும் கிழக்கும் இணைந்து விட்டால் இந்த வாய்ப்புத் தமக்குக் கிடைக்காது போய்விடுமென்ற அச்சம் முஸ்லிம்கள் மத்தியில் உண்டு.

**தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட்டால் அது பலமிக்க தரப்பாக ஆகும்**

தமிழர்களும், முஸ்லிம்களும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். மதத்தால் மட்டும் வேறுபட்டவர்கள். சிறுபான்மையினத்தவர் என்ற வரையறைக்குள் இவ்விரு இனத்தவர்களும் அடங்குகின்றனர். அத்தோடு இவ்விரு இனத்தவர்களும் பாதிப்புக்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். இந்த இரண்டு இன மக்களும் ஒரே பாதையில் பயணித்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வில் முன்னேற்றம் ஏற்படும். தந்தை செல்வா முஸ்லிம் மக்களை ஒருபோதும் கைவிட்டது கிடையாது. தற்போது தமிழ் அரசுக்கட்சித் தலைவரான மாவை சேனாதிராசாவும் முஸ்லிம் மக்களுடான உறவு தொடர்பாகச் சிலாகித்துக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

அதேவேளை முஸ்லிம் தலைவர்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காண முடியவில்லை. முஸ்லிம் மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் செறிந்து வாழ்கின்றனர். பெரும்பான்மையின மக்களுடனும் இணைந்து வாழ வேண்டிய சூழ்நிலையில் அவர்கள் உள்ளனர். இதனால் அவர்களை அனுசரித்துப்போகவேண்டிய தேவையும் அவர்களுக்கு உள்ளது. கிழக்கு மாகாணத்தின் சில இடங்களிலும் கூட இவ்வாறானதொரு நிலை காணப்படுகின்றது.

ஆனால் வடக்கும் கிழக்கும் இணைந்துவிட்டால் தமிழர்கள் மட்டுமல்லாது முஸ்லிம் மக்களும் பாதுகாப்புடன் வாழமுடியும்.

இந்த இரண்டு இனத்தவர்களும் இணைந்து விட்டால் பெரும்பான்மையினத்தவரின் அச்சுறுத்தல்களுக்கு ஈடுகொடுத்துச் செயற்பட முடியும். முதலில் தமிழ் மக்கள் தொடர்பாக முஸ்லிம் மக்களிடம் காணப்படுகின்ற தப்பபிப்பிராயங்கள் அகற்றப்பட வேண்டும். இதை முஸ்லிம் தலைவர்களே முன்னின்று செயற்படுத்த வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### வாசகர்களுக்கு தொல்லை தராது அமைதி பேணவும்

எந்தவித இடையூறோ இடைஞ்சலோ இல்லாமல் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் வாசித்துப் பயன்பெறத்தக்க இடமாக விளங்குவது பிரதேச சபைகளால் மற்றும் சனசமூக நிலையங்களால் நிர்வகிக்கப்படும் நூலகங்களாகும். நாம் இதற்கு முன்னர் அறியாத செய்திகள், வியப்பூட்டும் கதைகள், வாசகர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்துப் பயன்நல்கும் இடங்கள்தான் இப்படிப்பட்ட அறிவாலயங்கள். இப்படிப்பட்ட அறிவு வளர்க்குமிடங்களை மனிதருக்கு மன அமைதிதரும் இடங்களாகக் கருதலாம்.

இப்படியான சூழலில் மேற்குறிப்பிட்ட பொதுநூலகங்களில் ஒரு கையிலே பத்திரிகையை வைத்துக் கொண்டு மறுகையால் அலைபேசி உரையாடலையும் மேற்கொள்வோரைப் பார்க்கும் போது ஆத்திரம் பத்திக்கொண்டு வராமல் போகுமா? தமக்கு அருகில் இருந்து பத்திரிகையையோ, சஞ்சிகையையோ வாசிக்கும் வாசகர்களைத் தாம் தமது அலைபேசி உரையாடல் மூலம் சிரமத்துக்கு உள்ளாகுகிறோம் என்பதை மறந்து அலைபேசியைப் பயன்படுத்தும் ஒரு சில மேதாவிகளை எவர் தான் கட்டுப்படுத்துவது? பொறுப்பில் உள்ள நூலக நிர்வாகத்தினர், மேலே குறிப்பிட்ட இடங்களில் அலைபேசி உரையாடலை மேற்கொள்வதைக் கண்டிப்பாகத் தடை செய்து வாசகநேயர்களுக்கு இத்தகைய நூலகங்களில் பத்திரிகைகள் மற்றும் நூல்களை எவ்வித இடையூறுமின்றி வாசித்துப் பயனடையத்தக்க வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமானதொன்றாகும்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்ற முதுமொழியை மெய்ப்பிக்க, நாம் அனைவரும் வாசிக்கும் தரப்பினர்களுக்கு உதவ வேண்டும் என்பதே பலரது விருப்பாகும்.

அன்பு,
வரணி.


# கைத்தொழில் துறையின் உற்பத்தியில் வளர்ச்சி

## *நூற்றுக்கு 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது*

இலங்கைக் கைத்தொழில் துறையின் உற்பத்தியில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள கருத்தை குடிசன மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் இவ்வாண்டின் மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் கைத்தொழில் துறையின் உற்பத்தியானது நூற்றுக்கு 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக ஆடை உற்பத்தி, உணவு உற்பத்தி மற்றும் பல்வேறுபட்ட இரசாயனப் பொருள்களின் உற்பத்தி போன்ற துறைகளின் அடிப்படையிலேயே இந்த கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)







# நிதி அறிவூட்டல் கருத்தரங்கு

கொமர்ஷல் வங்கி அச்சுவேலிக்கிளையும் மத்திய வங்கியின் வடபிராந்திய அலுவலகமும் இணைந்து கடந்த 7 ஆம் திகதியன்று நடத்திய விவசாய மற்றும் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கான நிதி அறிவூட்டல் கருத்தரங்கு அச்சுவேலிக்கிளை முகாமையாளர் திரு. சஞ்சீவ் தலைமையில் இடம்பெற்றது.

அச்சுவேலிக் கிளை நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சிவஞானம் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் மத்தியவங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சிவ தீபன், "நிதி முகாமைத்துவம்" தொடர்பில் நிகழ்வில் கலந்து கொண்டோ ருக்கு விளக்கமளித்தார். தொடர்ந்து ஓய்வு பெற்ற உதவி விவசாய பணிப்பாளர் சிவனேசன், "தற்காலத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்" எனும் தொனிப்பொருளில் விளக்கவுரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் 162 பேர் பங்குபற்றியிருந்தனர். (ஓ)

# ஏற்றுமதிச் செயலாற்றுகை மூலமான வருமானப் பெறுகை 4.3 வீதமாக அமைவு

நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதி, கடந்த ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதி; மற்றும் தனித்து கடந்த ஆண்டின் மே மாத காலப் பகுதி, நடப்பாண்டின் மே மாத காலப்பகுதி வரையான ஏற்றுமதிச் செலாற்றுகை மூலமான வருமான உள்வருகைகள் பின்வருமாறு அமைந்துள்ளதான தகவலை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு மையம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை வெளியார்ந்த ஆய்வு அறிக்கையிடலாக மத்திய வங்கி தந்துள்ளது.




தேயிலை, மசாலா, பெற்றோலியம் பொருள்கள் மற்றும் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியால் அதிக வருவாய் கிடைத்துள்ளது. நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஏற்றுமதி மூலமான வருவாய் ஆண்டு அடிப்படையில் 4.3 வீதமாக அமைந்துள்ளது. வருமான ஈட்டமானது 4 ஆயிரத்து 410 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. எனினும் புடவை மற்றும் ஆடைகள், இரத்தினக் கற்கள், வைரம் மற்றும் நகைகள் அதேபோன்று உணவு, பானங்கள் மற்றும் புகையிலை ஆகியவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய் கணிசமாகக் குறைந்துள்ளது. (ஓ)

# 'கொழும்பு சிற்றி சென்ரர்' கூட்டுத் திட்டம் நடைமுறைக்கு

## *அபான்ஸ் மற்றும் சில்வர் நீடிள் கொஸ்பிட்டாலிட்டி நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கம்*

அபான்ஸ் வியாபாரக் குழுமம் மற்றும் சில்வர் நீடிள் கொஸ்பிட்டாலிட்டி நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் 'கொழும்பு சிற்றி சென்ரர்' கூட்டுத் திட்டம் உருவாகிவருகிறது.

இந்தத் திட்டம் கொழும்பு நகரத்துக்கு அழகைச் சேர்ப்பதோடு, அழகிய பேய்ரே ஏரிக்கு அருகே, வணிகரீதியில் முக்கியமானதொரு இடத்தில் துரித கதியில் மிகப் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது அண்ணளவாக நில மட்டத்தில் இருந்து 110 மீற்றர் (360 அடிகள்) உயரத்தைக் கொண்டமைந்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாத காலப்பகுதியில் இந்தத் திட்டத்தின் மூலம் 30 மாடிகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதுடன், கட்டத்தின் முழு உயரத்தில் 2:3 பகுதி நிறைவு செய்யப்பட்டுள்ளது.


2018 ஆம் ஆண்டு காலப்பகுதியின் இறுதியில் இந்தத் திட்டதின் சலக பணிகளையும் முழுமையாக நிறைவு செய்யவுள்ளதோடு, இதிலுள்ள 192 அதிசொகுசு வீடுகள் பன்னாட்டு தரங்களுக்கு அமைவாக உருவாக்கப்படவுள்ளன. பன்னாட்டு தரத்திலான விற்பனை நாமங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்யக்கூடிய கடைத்தொகுதிகள் மற்றும் வியாபாரிகளின் துறைசார் சந்திப்புக்கள், ஒன்று கூடல்கள் உள்ளிட்ட தொழில்சார் நிகழ்வுகளுக்கு சகல சலுகைகளையும் வழங்கிவரும் 'நெக்ஸ்ற்' ஹொட்டல் உள்ளிட்ட நவீன வாழ்க்கைக்கு தேவையான அனைத்து

> " இந்தத் திட்டத்தில் உள்ள சிறப்புத் தன்மையின் காரணமாக சிங்கப்பூர் 'சி. எம்.ஓ ஏசியா' மூலம் 2017 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சியடைந்து வரும் கூட்டுத் திட்டம்' என்ற பன்னாட்டு விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

அம்சங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

2018ஆம் ஆண்டு புது வருட காலத்தில் 'கொழும்பு சிற்றி சென்ரர்' கடைத்தொகுதிகள் மற்றும் 6 திரைகளைக் கொண்ட திரையரங்கம், 720 இருக்கைகளைக் கொண்ட உணவகம் மற்றும் 70 விற்பனை நாமங்களைக் கொண்ட கடைத்தொகுதிகள் இங்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. இங்கு 'அபான்ஸ் ஆர்மெயின் எக்சேஞ்', 'அப்பிள்', 'மங்கோ' மற்றும் 'ஓடிள்' உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் பன்னாட்டளவிலான விற்பனை நாமங்களைக் கொண்ட கடைத்தொகுதிகளும் அமையவுள்ளன.

இது குறித்து கருத்துரைத்துள்ள கொழும்பு சிற்றி சென்ரர் கூட்டுத் திட்டத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி ஆனந்த் சுந்தரம்,



"கொழும்பு சிற்றி சென்ரர் திட்டத்தின் ஒரு பகுதி எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புதுவருடகாலத்தில் ஆரம்பித்து வைப்பதற்கான பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. கொழும்பு சிற்றி சென்ரர் கூட்டுத் திட்டத்தில் உருவாகிவரும் பன்னாட்டு தரத்துக்கமைவான கடைத்தொகுதிகள் அனைத்தும் நீண்ட நாள்களாக கொழும்பு நகரத்தின் தேவையாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் இப்போது அனை வரின் கனவும் நனவாகும் தருணம் உதயமாகியுள்ளது." - என்றார்.

மேலும் இந்தத்திட்டமானது இலங்கையின் வணிக கேந்திர நிலையமாக போற்றப்படும் கொழும்பு நகரின் இதயப் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. இங்கு முதன்மைப் பாடசாலைகள், மருத்துவமனைகள், கடைத் தொகுதிகள், வரலாற்றுப் பெருமைமிக்க ஸ்தலங்கள் அமைந்துள்ளன. இதிலுள்ள வீடுகளின் விலை நிர்ணயம் கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது. நீண்ட கால மற்றும் குறுகிய கால முதலீட்டாளர்களை அதிகம் ஈர்த்துள்ளது. (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

20/11/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | | இன்று | நேற்று |
|---|---|---|---|---|
| ASPI | ↓ | -9.68 | 6,473.87 | 6,483.55 |
| S&P SL20 | ↓ | -13.42 | 3,784.58 | 3,798.00 |
| வியாபாரப்புரள்வு | | | 707,751,170 | 717,565,440 |
| உள்நாடு:- கொள்வனவு | | | 352,808,032 | 648,297,220 |
| விற்பனை | | | 392,981,824 | 555,698,430 |
| வெளிநாடு:- கொள்வனவு | | | 354,943,136 | 69,268,232 |
| விற்பனை | | | 314,769,344 | 161,866,992 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 153.9 | 1,347,742 | 206,442,492 |
| ஆசிரி சேயிக்கல்ஸ் கொஸ்பிற்றல் | AMSL.N | 11.1 | 15,012,305 | 165,136,273 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 37.2 | 2,597,590 | 96,102,292 |
| சம்பத் வங்கி | SAMP.N | 345.1 | 152,981 | 54,186,327 |
| அலுமெக்ஸ் | ALUM.N | 19 | 1,032,340 | 19,614,160 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 140 | 131,502 | 18,410,360 |
| அக்சஸ் எஞ்யினியறிங் | AEL.N | 24 | 600,972 | 14,509,234 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 68.7 | 138,795 | 9,645,975 |
| றிச்சட் பிறிஸ் | RICH.N | 13.7 | 680,535 | 9,317,735 |
| மல்வத்தை பிளான்ரேசன் | MAL.N | 11.5 | 671,153 | 7,631,268 |

அறிவித்தல்கள் -

**Seminar on Budget 2018 - 25th Nov @ 9.00am**

**பங்குலாபம்**

சிலோன் டுபாக்கோ (CTC) -Rs. 17.50

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 238 |
| விலை உழைப்பு | ↓ | 10.64 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.34 |
| பங்குலாப விளைவு | ↓ | 3.06 |

# கிளிசரீடியா பயிர்ச்செய்கை

ல.கீர்த்திகா

பொதுப்பெயர் - சீமைக்கிளுவை
தாவரவியல் பெயர் - Gliricidia maculate
குடும்பம் - Fabaceae



**பயன்பாடு**

- அதிகமாக நிழல்களுக்காகவும் பசுந்தாட் பசளையாகவும் வளர்க்கப்படுகிறது
- நெற்செய்கையில் கிளிசரீடியா இலைகளை பசுந்தாட் பசளையாக பாவித்து ஏக்கருக்கு 200 புசல் விளைச்சல் பெறக் கூடியதாக உள்ளது
- பசுந்தாட் பசளையில் உள்ள போசணை உள்ளடக்கம்; 2.9%N, 0.5% $P_2O_5$,2.8% K2O
- ஊடுபயிராக 1 மீற்றர், 1.5 மீற்றர் இடைவெளியில் நட்டு வளர்த்து இதற்கிடையில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம். இதனால் பயிருக்குச் சிறந்த நுண் காலநிலையயை ஏற்படுத்தி விளைச்சலை அதிகமாக பெறக்கூடியதாகவுள்ளது
- சராசரியாக 20 வீதம் குறை நிரப்புப் புரதத்தைக் கொண்டு காணப்படுவதால் கால் நடைத் தீவனமாக விளங்குகிறது.
- கிளிசரீடியா காலத்துக்குக் காலம் கத்தரித்து பராமரிப்பதால் இலையைப் பசளையாகவும் தடியை விறகிற்காகவும் பயன்படுத்தலாம்.
- வேர்கள் பயிருக்குத் தீங்கு விளைவிப்பது இல்லை. மற்றும் கொக்கோ வனிலா போன்ற தாவரங்களுக்கு ஆதாரமளிக்கும் மரமாக விளங்குகிறது.
- தண்டு பகுதி உயிர்கரி தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது.
- உக்கல் தன்மைக்கும் கறையான் பாதிப்பிற்கும் எதிர்ப்புத் தன்மை உடையவையாகையால் சிறந்த சேதனைப் பசளையாகவும் பக்க விளைவு அற்ற தாவரப்பீடை நாசினியாகவும் பாவிக்கப்படுகின்றது.
- தோட்டத்தில் கிளிசரீடியாவானது வரிசையாக வளர்க்கும்போது பீடைகளுக்கு வெறுப்பூட்டியாக பீடையின் வளர்ச்சியைத் தடுப்பவையாகவும் தொழிற்படுகிறது

**மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்**

**சூழல்க் காரணிகள்**

- பரவலான மழைவீழ்ச்சி விரும்பத்தக்கது.
- நன்கு நீர் வடியும் மண்; சிறந்தது.
- வெப்பநிலை 15 - 30°C வரை

**இனப்பெருக்கமுறை**

இலிங்க முறை மற்றும் இலிங்கமில் முறை மூலம் இனப்பெருக்கம் செய்ய முடியும்;

- இலிங்கமில் முறை தண்டுத்துண்டம் மூலமாக இலகுவான முறையில் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. 6 அடி நீளமான தண்டுத் துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யலாம். இதன் மூலம் குறுகிய காலத்தில் பயன் பெறமுடியும்.
- இலிங்க முறை விதைகளை நேரடியாக நடுகை செய்தல், பொலீத்தீன் பைகளில் இட்டு நாற்றுக்களை உருவர்கல் மற்றும் நாற்றுமேடையில் நாற்றுக்களை உருவாக்கல் மூலம் இனப்பெருக்கம் செய்யலாம்.

**நடுகை முறை**

- சிறுபோக பெரும்போக மழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது;.
- நடுகை இடைவெளி (வீதி முறைப் பயிர்ச் செய்கை) 0.5 மீற்றர் X 0.5 மீற்றர்
- ஊடுபயிராக செய்கைபண்ணப்படுவதாயின் 1 மீற்றர், 1.5 மீற்றர் இடைவெளி

**பயிராக்கவியல்**

- நன்கு தயார்படுத்தப்பட்ட நாற்றுமேடையில் விதைகளை இட்டு; 30 - 60 நாள்களின் பின் நாற்றுக்களை வயலில் மாற்றி நடுகை செய்யலாம்.
- அவரையத் தாவரமாகையால் விசேட பசளையிடல் தேவையில்லை.
- 1.5 - 2 வருடங்களின் பின்பு கத்தரித்து நடுகைக்கான தண்டுத் துண்டங்கள் பெற பயன் பெறலாம்.




---

# தொடுதிரை அலைபேசிகளும் வீணடிக்கப்படும் வளங்களும்

அன்ரனி பீற்றர்

தொடர்பு ஊடகங்களிலே மிகவும் சக்தி வாய்ந்தவைகளாக தொடுஅலைபேசிகள் இடம்பிடித்துள்ளன. மனிதர்களின் இன்றியமையா தேவையாக இந்த அலைபேசிகள் மனிதனை ஆளுகை செய்கின்றன. ஒவ்வொரு கண்டுபிடிப்புகளும் பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்டவைகளே. அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் இந்தத் தொடு அலைபேசிகள் வளங்களாக உள்ளன. அதே நேரம் அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் மண்டல நாடுகளான நாடுகளில் இந்தத் தொடு அலைபேசிகள் வளச் சிதறல்களை ஏற்படுத்துகின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

**பல நன்மைகள்**

குறுகிய நேரத்தில் குறைந்த செலவில் செய்திகளைப் பரிமாறவும் முடிவுகளை அறிந்து கொள்ளவும் உடன் நடவடிக்கை எடுக்கவும், விரைந்து செயற்படவும், அழிவுகளைத் தடுக்கவும், உயிரைக் காப்பாற்றவும், வாழ்த்துக்கள் கூறவும், வண்ணப் படங்களுடன் மகிழ்வான, இன்ப துன்ப நிகழ்வுகளை மீட்டுப் பார்க்கவும் கற்கவும், அறியவும், இணையத் தளத்தின் ஊடாக பல்வகை அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வசதி, வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

**தீமைகள்**

தீமைகள் என்று கூறுவதிலும் பார்க்க அறியாமை, மனித சக்தி வளம் வீணடிக்கப்படு கின்றமை, வீண்செலவினம், சோம்பல், கோபம், மதிக்காமை, நோய்கள், வீணான பொழுது போக்கு, நேரவிரையம், சொந்தங்களுடன் உறவில்லாமை, குடும்பங்களில் பிழவு, பிரிவினைகள் விளங்கிக் கொள்ளாமை, உறவுமுறிவுகள், பழிவாங்கல்கள், பழிதீர்த்தல்கள், கல்வி இழப்புக்கள், ஊர்வம்புகள், தற்கொலைகள், உள்ளிட்ட பல பாதகங்களை ஏற்படுத்த காரணியாக இருக்கின்றது.

**இளையோரின் சக்திவளம்**

பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படும் போது இழப்புக்கள் ஈடு செய்ய முடியாதவைகளாகத் தொடர்கின்றன. போரின் நின்று நீங்கிய மக்கள் தமது பிள்ளைகளின் ஏற்றம் மிகு வாழ்வை எதிர்பார்கின்றார்கள். ஆனால் தொடுதிரை அலைபேசிகள் இளையவர்களை தனது கட்டுப்பாட்டுக்குள் ஈர்த்த வண்ணமே இருக்கின்றன. இளையோரே எம் நாட்டின் வளங்கள். எம் நாட்டின் மூலதனம், எம் நாட்டின் எதிர்கால வல்லுநர்கள், தலைவர்கள், நிர்வாகிகள். இவர்களை உருவாக்கிடவே ஒவ்வொரு பெற்றோரும் எமது சமூகத்தின் பிரதிநிதி களும் கனவு காண்கின்றனர். ஆனால் விளக்கிலே விழத்துடிக்கும் விட்டில்கள் போல் விடலைகள் விஷப் பரீட்சையில் மூழ்கியுள்ளார்கள். பல குடம் பாலில் ஒரு துளி விஷம் விழுவது போல பாதிப்பு எம்மைத் துரத்துகின்றது. துடுப்பிழந்த படகு போல ஒவ்வொரு இல்லமும் தத்தளிக்கின்றது.



**கனவிலும் நனவிலும்**

ஒவ்வொரு வீட்டிலும் இளையவர்களையும் பெரியவர்களையும்கூட தொடுதிரை அலைபேசிகள் ஆக்கிரமித்துள்ளன. உடலில் ஒரு உறுப்புப் போல, தம்முடனே பிரியாமல் வைத்திருக்கும் ஒரு சாதனமாக இந்த அலைபேசிகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. படிப்பை முடித்து, வேலை இல்லாமல் இருக்கும் இளையவர்களை (ஆண், பெண் இருபாலாரும்) காலை தொடங்கி நித்திரைக்குச் செல்லும் வரை உழைப்புக்குச் செல்பவர்களைப் போல ஒய்யாரமாக உடுத்தி மோட்டார் சைக்கிள்களையும் கொண்டு காலையில் போய் நண்பருடன் அலைபேசியுடன் அமர்ந்தால் மதியம் வந்து மீண்டும் சென்று இரவு திரும்புகின்ற நிலையே அதிக மாணவர்களிடம் காணப்படுகின்றது. நேரவளம், சக்தி வளம், தொழில் வளம், பண வளம், ஆரோக்கியவளம், உடல் வளம் எல்லாமே சந்திகளிலும், தெருக்கோடிகளிலும், உணவு, மதுபான விடுதிகளிலும், வீணடிக்கப்படுவது, விலைமதியாச் சொத்தை வீதியில் தொலைத்த நிலையிலே எம்பெற்றோரின் கனத்த உள்ளங்கள் அழுவது கேட்கின்றது.

**அலுவலகங்கள்**

எந்த அலுவலகத்தை எடுத்துக்கொண்டாலும் எங்கோ ஒருமூலையில் நாலுபேர் சேர்ந்து அலைபேசிக்குள் மூழ்கி இருப்பதையும் சில அலுவலகங்களில் பெரும்பாலானோரே இவ்வாறு நடந்து கொள்வதையும் இதனாலே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் செல்பவர்கள் பல மணிநேரம் அவ் அலுவலகங்களுக்கு வெளியே அல்லது உள்ளே இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைகளும் எம்கண்களில் படவே செய்கின்றன. அவர்களில் பிழையென்று சொல்லுவதை விட அந்தக் கருவியின் ஆளுமைத்திறன் என்றே கூறவேண்டும். எல்லோரையும் ஈர்த்துவிடும் தன்மை இந்தத் தொடுதிரை அலைபேசிக்கு உண்டு.

எனவே இவற்றில் இருந்து எமது இளையோர்கள் விடுபட்டு பயனுள்ள வகையில் மாற்றம் பெற்று தன்மையும் தம் குடும்பத்தையும் சமூகத்தையும் மண்ணையும் நேசிக்கின்றவர்களாகத் தம் திறமைகள், ஆற்றல்களை இனம்கண்டு, குறிக்கோளும், எதிர்நோக்கும் உள்ளவர்களாக வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு செயல்திறன் உள்ளவர்களாகத்திகழவேண்டும்.

> “குறுகிய நேரத்தில் குறைந்த செலவில்' செய்திகளைப் பரிமாறவும் முடிவுகளை அறிந்து கொள்ளவும் உடன் நடவடிக்கை எடுக்கவும், விரைந்து செயற்படவும், அழிவுகளைத் தடுக்கவும், உயிரைக் காப்பாற்றவும், வாழ்த்துக்கள் கூறவும், வண்ணப் படங்களுடன் மகிழ்வான, இன்ப துன்ப நிகழ்வுகளை மீட்டுப் பார்க்கவும் கற்றவும், அறியவும், இணையத் தளத்தின் ஊடாக பல்வகை அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வசதி, வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

# கார்த்திகை மாத ராசிபலன்

## நவம்பர் 17 முதல் டிசெம்பர் 15 வரை



### கடகம்:

கடக ராசி அன்பர்களே!

சுக்கிரன் சாதகமாக இருப்பதால், திடீர் அதிர்ஷ்ட யோகம் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். நண்பர்களும் அனுகூலமாக இருப்பார்கள். அவர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். தெய்வ பக்தி அதிகரிக்கும். எடுத்த செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினர்களிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி, சுமுகமான சூழ்நிலை உண்டாகும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். மாதப் பிற்பகுதியில் குடும்பப் பெரியவர்களால் நன்மைகள் நடக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். ஆண்களுக்கு பெண்களாலும் பெண்களுக்கு ஆண்களாலும் நன்மைகள் ஏற்படும். சிலருக்கு புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். ஆனால், குரு 4இல் இருப்பதால், உடல்நலனில் கவனம் தேவைப்படுகிறது. தாயாருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். அவருடைய உடல் ஆரோக்கியமும் சிறிய அளவில் பாதிக்கப்பட்டு, உடனே சரியாகிவிடும். தாய்வழி உறவினர்களிடம் அனுசரனையாக நடந்துகொள்ளவும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** அலுவலகத்தில் அதிக பணிச்சுமை ஏற்படுவதால், மனதில் சோர்வும், உடல் அசதியும் உண்டாகும். உயர் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போவது எதிர்காலத்துக்கு நல்லது. சிலருக்கு திடீர் இடமாற்றம், பணிமாற்றம் ஏற்படக்கூடும். எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைப்பதில் தடை தாமதங்கள் ஏற்படக்கூடும்.

தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலையே காணப்படுகிறது. உழைப்புக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். பங்குதாரர்களுடன் இணக்கமான சூழ்நிலை காணப்படுகிறது. ஆனாலும், மறைமுகப் பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டி இருக்கும். மாதப் பிற்பகுதியில் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் எச்சரிக்கை அவசியம்.

**கலைத்துறையினருக்கு:** சாமர்த்தியமாகப் பேசி வாய்ப்புகளைப் பெறுவார்கள். கலைஞர்களுக்கு சக கலைஞர்களாலும் நன்மைகள் ஏற்படச் சாத்தியம் உள்ளது.

**மாணவர்களுக்கு:** பாடங்களில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. தேவையற்ற சகவாசத்தைத் தவிர்க்கவேண்டியது அவசியம்.

**குடும்பப் பெண்களுக்கு:** உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் கூடும். கணவரின் அன்பும் அவர் வழி உறவினர்களால் நன்மைகளும் ஏற்படும். சிலருக்கு வெளியூர் புண்ணிய தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.



# வரலாற்றில் இன்றைய தினம்

## 21.11.2017

2009 - சீனாவில் சுரங்க வெடி விபத்தில் 108 பேர் உயிரிழந்தனர்

1962 - சீன இந்தியப் போரின்போது, சீன மக்கள் விடுதலை இராணுவத்தால் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தம் செய்யப்பட்டது.

1999 - மடு ஆலயத்தில் தாக்குதல். 38 பேர் சாவு. இந்தத் தாக்குதலுக்கு சந்திரிக்கா பொறுப்பேற்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் வலியுறுத்தல்.

2006 - சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட தமிழ் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்துமாறு பன்னாட்டுச் சமூகத்திடம் கோரவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை தெரிவிப்பு.

2006 - ஏ9 பாதையைத் திறந்துவிடுவதே மக்களின் அவலத்துக்குத் தீர்வு என்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வலியுறுத்தல்.

2012 - இஸ்ரேலின் தலைநகரத்தில் பஸ் ஒன்றின் மீது தாக்குதல். 28 பேர் காயமடைந்தனர். இதையடுத்து யூதர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் பதற்றம் ஆரம்பமானது.

2016 - கூட்டமைப்பின் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பித்த ஈ.பி.டி.பியினருக்கு பன்னாட்டுப் பிடியாணை.

2016 - பொருத்துவீட்டு விவகாரத்தில் கூட்டமைப்பு எதிர்ப்பதால் கவலையில்லை என்று அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு.

2016 - போருக்குப் பின்னரான அபிவிருத்தி மூலோபாயம் கொள்கைக் கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வலியுறுத்தல்.

## நாளை

## 22.11.2017

புதன்கிழமை

## கார்த்திகை 06

திதி: சதுர்த்தி பி.இ. 01.03 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.இ. 05.48 வரை
சுபநேரம்: 04.40–06.10 வரை
ராகுகாலம்: 12.10–01.40 வரை

சதுர்த்தி விரதம்

# பத்தி எழுத்து

## சிறுபான்மையின மக்களைப் பாதுகாக்குமா இலங்கை அரசு?

தென்மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. காலியில் ஜிந்தோட்டை மற்றும் அதனுடன் அண்டிய பகுதிகளில் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்குச் சொந்தமான 50 இற்கும் மேற்பட்ட வீடுகள், 15 கடைகள், 20 வாகனங்கள் ஆகியன சேதமாக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை புதிய விடயமல்ல. காலத்துக்குக் காலம் இவை இடம்பெறத்தான் செய்கின்றன. முஸ்லிம் மக்கள் வடக்கு- கிழக்கில் மட்டுமல்லாது நாட்டின் பல பாகங்களிலும் வசித்து வருகின்றனர். தென்மாகாணத்திலுள்ள காலி மாவட்டத்தில் அவர்கள் செறிந்து வாழ்கின்றனர். பெரும்பான்மையின மக்களுடன் அவர்கள் ஐக்கியத்துடன் வாழ்வதைக் காண முடிகின்றது. ஆனால் இதனைப் பொறுக்க முடியாத சில தீய சக்திகள் அவ்வப்போது பிரச்சினைகளைக் கிளப்பி விடுவதுமுண்டு.

பொதுபலசேனா என்ற மதவாத அமைப்பு சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அமைப்பின் பொதுச் செயலாளரான ஞானசாரதேரர் எவருக்குமே அடங்காத குணமுடையவர். ஏற்கனவே இவர் மீது ஏராளமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இந்த நிலையில் காலியில் இடம்பெற்ற சம்பவங்களுடன் பொதுபலசேனாவின் தொடர்பும் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. அரசு இத்தகைய அமைப்புக்களைத் தொடர்ந்தும் இயக்குவதற்கு அனுமதிப்பது சரியாகத் தென்படவில்லை.

ஒரு சிறு சம்பவத்தைக் காரணமாக வைத்து காலியில் வன்செயல்கள் வெடித்ததாகச் சொல்லப்படுகிறது. சிறிய சம்பவத்தையும் ஊதிப் பெரிதாக்குவதற்கு ஆள்கள் இருக்கும் வரையில் வன்முறைச் சம்பவங்கள் தொடரவே செய்யும். தமிழர்களையும் முஸ்லிம்களையும் இலக்காகக் கொண்டு வன்முறைகளைத் தூண்டி விடுவதால் நாட்டுக்குத்தான் பெரும் கேடு ஏற்படும் என்பதை வன்முறையுடன் தொடர்புடையவர்கள் மறந்துவிடக் கூடாது. இளைஞர்களுக்கிடையில் ஐக்கியம் நிலவாதுவிட்டால் நாட்டில் அமைதியை எதிர்பார்க்க முடியாது. அமைதி இழக்கப்பட்டால் பொருளாதாரமும் சீர்குலைய ஆரம்பிக்கும். நடந்து முடிந்தவற்றை எண்ணிப் பார்த்தாவது நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

வன்முறைகளில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. பிரச்சினைக்கான உண்மையான காரணங்கள் கண்டறியப்பட்டு அதற்கான பரிகாரங்களையும் அரசு செய்ய வேண்டும். இல்லையென்றால் காலியில் இடம்பெற்ற சம்பவங்கள் வேறு பகுதிகளிலும் தொடரத்தான் செய்யும்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மிதமான வருமானம் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**இடபம்:** அன்றாடப் பணிகளில் நேர்த்தியுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த செயல் எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தினரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் கவனம் தேவை.

**கன்னி:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் மனதில் நம்பிக்கை மேலோங்கும். வருமானம் உயரும்.

**துலாம்:** முக்கிய செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில் வியாபாரம் செழிக்க நண்பரின் ஆலோசனை உதவும். இலாபம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இலக்கு எளிதாக நிறைவேறும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பேச்சில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பயணம் பயனறிந்து மேற்கொள்ளவும்.

**மகரம்:** எதிரிகளால் இருந்த சிக்கல் தீரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு இருக்கும். குடும்ப தேவை திருப்திகரமாக நிறைவேறும்.

**கும்பம்:** உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். சேமிக்கும் விதத்தில் தாராள வருமானம் வரும். காணாமல் தேடிய பொருள் கிடைக்கும்.

**மீனம்:** புதியவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவை. பணவரவு சுமாராக இருக்கும். சிக்கனம் காப்பது நல்லது.

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 8 | | | 5 | |
| | | 9 | | 5 | 4 | 3 | 1 | |
| | | | | | 7 | | | 6 |
| 7 | | | 6 | | 1 | | 9 | |
| | | | | 2 | | | | |
| | 5 | | 9 | | 8 | | | 2 |
| 2 | | | 5 | | | | | |
| | 4 | 6 | 8 | 1 | | 7 | | |
| | 3 | | | 6 | | 1 | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 9 | 5 | 8 | 1 | 4 | 6 | 7 |
| 8 | 5 | 6 | 2 | 4 | 7 | 1 | 3 | 9 |
| 4 | 1 | 7 | 3 | 6 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 1 | 4 |
| 1 | 9 | 8 | 4 | 2 | 3 | 5 | 7 | 6 |
| 3 | 6 | 4 | 1 | 7 | 5 | 2 | 9 | 8 |
| 7 | 2 | 5 | 9 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 4 | 3 | 7 | 5 | 2 | 9 | 8 | 1 |
| 9 | 8 | 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை.1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

## வடிவேலுவுக்கு சிக்கல்கள்

'இம்சை அரசன் 24ஆம் புலிகேசி' படத்தின் நாயகனான வடிவேலுக்கும், அந்தப் படத்தின் இயக்குனர் சிம்புதேவனுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் உச்சம் தொட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு இம்சை அரசன் 23ஆம் புலிகேசி படத்தில் வடிவேலு கதாநாயகனாக அறிமுகமானார். இந்தப் படம் வெற்றிகரமாக ஓடியது.

தொடர்ந்து இந்திரலோகத்தில் நா. அழகப்பன், தெனாலிராமன், எலி போன்ற படங்களிலும் கதாநாயகனாக வடிவேலு நடித்தார்.

தற்போது இம்சை அரசன் 23ஆம் புலிகேசி படத்தின் இரண்டாம் பாகம், இம்சை அரசன் 24ஆம் புலிகேசி என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு வருகிறது. படத்தின் தயாரிப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வந்த நிலையில் வடிவேலுவுக்கும் சிம்புதேவனுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. படத்திலிருந்து வடிவேலு விலகி விட்டார் என்றும் இதையடுத்து நடிகர் சங்கம் இந்த விவகாரத்தில் தலையிட்டுள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

சினிமா





பணமின்றி மனிதனால் வாழ்ந்து விட முடிகிறது.... மனிதர்களோடுதான் வாழ முடியவில்லை....!!

**பொலிஸ்:** ஏன் உன்னோட காரை இரண்டு சில்லில ஓடிட்டு வந்தாய். குடிச்சிருக்கியா?

**வண்டிக்காரன்:** அய்யோ குடிக்கல சேர்!

**பொலிஸ்:** அப்ப ஏன்தான் இண்டு சில்லில கார் ஓடிட்டு வந்தாய்?

**வண்டிக்காரன்:** அதுவந்து சேர் எங்கிட்ட 'ரூ வீலர்' லைசன்ஸ்தான் இருக்கு. அதான் இரண்டு சில்லில ஓடிட்டு வந்தேன்.
சட்டத்தை மதிக்கிறவன் சேர்.

**வளர்ச்சியால் கிழிந்தது**



**வறுமையால் கிழிந்தது**



17 வருசம் கழிச்சு இப்பதான் உலக அழகிப்பட்டம் திரும்ப இந்தியாவுக்கு கிடைச்சிருக்கே, ஏன்னே?



அழகு சாதனப் பொருள்கள் விற்பனை குறைஞ்சிருக்கும் அதான்டா...!

கணவன் மனைவி இருவரும் ஓவியக் கண்காட்சி ஒன்றுக்குச் சென்றிருந்தார்கள். இலைகளால் ஆன ஆடை அணிந்த ஒரு பெண்ணின் படத்திற்கு 'வசந்த காலம்' என்று தலைப்புக் கொடுத்திருந்தனர். அந்தப் படத்தின் அருகே வெகுநேரம் நின்று கொண்டிருந்த கணவரைப் பார்த்து எரிச்சலோடு மனைவி சொன்னார்

"நீங்க எவ்வளவு நின்றாலும் இலையுதிர் காலம் வராது. வாங்க போகலாம்"

புகை என்னை ஆளத்தொடங்கியதுமே
உணர்ந்துகொண்டேன்..
இனி இருமல் என் 'தேசியகீதமென்று...



# படிப்பறிவும் பட்டறிவும்



ஒரு நாட்டை சிறந்த அறிவாளியான ஒரு மன்னர் ஆண்டு வந்தார். இவரது அரச சபையிலும் அறிஞர்களும் பண்டிதர்களுமான ஏராளமானோர் இருந்தனர். அரசனுக்கு அடிக்கடி பல சந்தேகங்கள் எழும். அந்தச் சந்தேகங்களை எல்லாம் அவர் தனது அவை அறிஞர்களிடம் கேட்டுத் தெளிவு படுத்திக்கொள்வார். ஒரு நாள் அவர் அறிஞர்களைப் பார்த்து "கோடை காலம் மழைக்காலம் இலையுதிர் காலம் வசந்த காலம் என்பவற்றில் எந்தக் காலம் மக்களுக்கு நல்ல காலம்" என்று கேட்டார். அப்போது ஒரு அறிஞர் அரசே மக்களுக்குக் கோடை காலமே சிறந்தது" என்றார். எப்படி? என்று அரசர் கேட்க" செங்கற் சூளை போடுவேன் மண்பாண்டங்கள் தயாரிப்போர் வைக்கோல் போர் விற்போர் இந்தக்காலத்தில் தான் எவ்விதக் கஷ்டமும் இன்றி வாழ்வர். என்னதான் வெயில் சுட்டெரித்தாலும் இந்தக் கோடைக்கு மகத்துவமே . ஒருநாள் மழை பெய்த உடனேயே மக்கள் மழைக் காலத்தை இகழ்ந்தும் கோடையைப் புகழ்ந்தும் பேசுவர்" என்றார். அடுத்த மற்றொரு அறிஞர் "அரசே நாட்டின் ஜீவநாடி விவசாயமே. விவசாயத்துக்கான நீர் கோடையில் கிடைப்பதில்லை. நீர் நிலைகள் எல்லாம் வற்றிவிடும். மழை பெய்து நீர் கிடைக்கா விடில் உலகில் எந்த இயக்கமும் இருக்காது. ஆதலால் மழைக்காலமே நல்ல காலமாகும்" ஏன்றார். அடுத்த ஒரு அறிஞர் எழுந்து "காலங்களில் நல்ல காலம் வசந்த காலம். வசந்தம் என்ற ஒரு சொல்லே செல்வத்தையும் மகிழ்ச்சியையும் மக்களுக்கு வாரி வழங்கக் கூடியது என்பதை நன்றாக உணர்த்தும் போது. இதற்கு அதிகமான விளக்கம் கொடுக்கத் தேவையில்லை என்பது என் கருத்து" என்றார். இதே போன்று இலையுதிர் காலத்துக்கும் விளக்கம் கொடுத்தார் இன்னொரு அறிஞர்.

இவர்களின் எந்தப்பதிலும் மன்னரைத் திருப்திப்படுத்தவில்லை.

"பாருங்கள் அறிஞர்களே! உங்களின் கருத்துப்படி ஒருவருக்கு நன்மை பயக்கும் காலம் இன்னொருவருக்கு தீமை பயக்கக் கூடியதாய் இருக்கிறது. அதனால் எந்தக் காலம் மக்களுக்கு நல்ல காலம் என்று கூறுவது மிகக் கடினமானதாக உள்ளது.

ஆனால் இதற்கு ஒரு தெளிவான பதில் இருக்க வேண்டுமென்று என் உள்ளுணர்வு கூறுகிறது. அதை நான் மட்டுமல்ல நீங்களும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த சந்தேகத்தை நாடு முழுக்க அறிவிக்கச் செய்து சரியான பதிலைக் கூறுவோருக்குப் பரிசளிப்போம்" என்றார் மன்னர்.


அறிஞர்களுக்கும் அந்த முடிவு சரியாகவே பட்டது. நான்கு காலங்களில் எக்காலம் மக்களுக்கு நல்ல காலம் என்ற கேள்விக்குச் சரியான விளக்கம் கொடுப்போருக்கு ஆயிரம் பொற்காசுகளும் பரிசுகளும் வழங்கப்படும் என்ற இந்தச் செய்தி நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் போய் எதிரொலித்தது. செய்தியை அறிவிப்புச் செய்த மறுநாள் ஒரு இளைஞன் மன்னரைச் சந்திக்க வந்தான். அவன் அழுக்காக இருந்தான். தலைமுடி சிக்கலாய் இருந்தது. பல இடங்களில் ஒட்டுப்போட்ட உடை அணிந்திருந்தான். ஒட்டிய தாடை, குழி விழுந்த கண்கள், எலும்புகள், துருத்தி நிற்கும் மார்பு அவன் மிகவும் வறுமையில் வாடியவனாக இருந்தான். இவரை அரசன் கேள்விக்கு விளக்கம் கொடுக்க உள்ளானென பரிகரித்து எல்லோரும் கொல்" என்று சிரித்தனர்.

அரசனோ "இளைஞனே நீ உன் விளக்கத்தைக் கூறலாம்" என்றான்.

அரசே! மூன்று வேளையும் வயிறு நிறையும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயர்ந்தவனுக்கு எல்லாக் காலங்களுமே நல்ல காலங்கள் தான். அதே சமயம் வறுமையால் வாடும் வாழ்க்கைத் தரம் உள்ளவனுக்கு அதே நல்ல காலங்கள் எல்லாம் கெட்ட காலங்களே!" என்றான். இந்தப் பதிலைக் கேட்ட அரசன் "சபாஷ் சரியான பதில்" என்று கூறி உற்சாக மிகுதியால் கைத்தட்டினார்.

அறிஞர்களும் வியந்து போய் அவனது விளக்கம் சரியானது என்று ஒப்புக் கொள்ள அவனுக்கு ஆயிரம் பொன் பரிசாக கிடைத்தது.

# குறுக்கெழுத்துப் புதிர்




**இடமிருந்து வலம்**

1. இவற்றுக்கு இறகுகள் உள்ளது.
4. வீட்டுக்குள் வெளிச்சத்தையும் காற்றையும் தருவது
5. வாரத்தில் பாடசாலை ஆரம்பிக்கும் முதல்நாள்
6. சோற்றுடன் சேர்த்து உண்பது
7. கைது செய்யப்பட்டவர்
8. பூக்களில் இது தேன் குடிக்கும்

**மேலிருந்து கீழ்**

1. பத்திரிகை
2. வையகம்
3. பல்
6. கண்

# தாத்தா பேரன் உரையாடல்



தாத்தா : பேரா. தாத்தா இப்போது ஓய்வாய் இருக்கிறேன். உனக்குப் பாடங்களில் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேள்.

பேரன் : இதோ கேட்கிறேன் தாத்தா. தாத்தா இலங்கை எந்த ஆண்டில் சுதந்திரம் அடைந்தது.

தாத்தா : இலங்கை ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது.

பேரன் : இலங்கையின் தேசிய மலர் எதென்று பெரியுமா?

தாத்தா : நீ கூறு பார்க்கலாம்.

பேரன் : மல்லிகை

தாத்தா: தவறு, நீலோற்பவம். சரி இலங்கையின் உயரமான மலை எது தெரியுமா?

பேரன் : தெரியுமே! பேதுருதாலகால மலை.

தாத்தா : கெட்டிக்காரன்

பேரன் : இலங்கையில் உள்ள இயற்கை வனம் எது சொல்லுங்கள் பார்ப்போம்

தாத்தா : சிங்கராஜவனம்.

பேரன் : இன்னொரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்லுங்கள் பார்ப்போம்.

தாத்தா : சரி கேள்

பேரன் : இலங்கையின் தேசியப் பறவை எது?

தாத்தா: காட்டுக்கோழி

பேரன் : தாத்தா என்றால் தாத்தா தான். இன்னும் சந்தேகங்கள் இருக்கின்றன. நாளை கேட்டுக்கொள்கிறேன். நன்றி தாத்தா.





வர்ணம் தீட்டுவோம்

# மின்மினிகள் தேசம்






மின்மினிகள் தங்கள் இணையைக் கவர்வதற்காகத் தான் மின்னுகின்றன. ஆண் மின்மினிக்கும், பெண் மின்மினிக்கும் இந்த வெளிச்சம் உண்டு. பெண் மின்மினியின் வெளிச்சம் ஆண் மின்மினியின் வெளிச்சத்தை விடக் குறைந்த நேரம் ஒளிரக்கூடியதாக இருக்கும். மின்மினியின் வயிற்றுப் பகுதியின் பின்புறத்திலிருந்து தான் வெளிச்சம் வருகிறது. அதன் உடலிலுள்ள "லூஸிபெரோஸ், லூஸிபெரின்" என்னும் இரசாயனப் பொருள்களின் செயற்பாட்டால்தான் வெளிச்சம் உண்டாகிறது. இந்தச் செயற்பாட்டுக்கு நிறைய ஒட்சிசன் தேவைப்படும். இது வெளிச்சம் மட்டும்தான். சற்றும் வெப்பமாக இருக்காது மின்மினிகளில் பல இனங்கள் இருக்கின்றன. ஒளிர்வதற்கும் அணைவதற்கும் இடையிலான இடைவெளகளி ஒவ்வொரு இனத்துக்கும் வேறுபடும். ஒரு மின்மினி தன் இனத்தைச் சேர்ந்ததா இல்லையா என்று இன்னொரு மின்மினி இந்த ஒளிர்ந்தணையும் இடைவெளியை வைத்துத்தான் கண்டு பிடிக்கிறது.

# மரண அறிவித்தல்

## தியாகராசா செல்வதிசைநாயகம்



பிறப்பு 13.01.1933 — இறப்பு 20.11.2017

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, சிறுப்பிட்டி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா செல்வதிசைநாயகம் (20.11.2017) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான தியாகராசா - நாகம்மா தம்பதியரின் அன்புமகனும் தவநாயகம் (முன்னாள் தலைமைப்பீட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சித்திணைக்களம், வடமாகாணம்). சிவநாயகம் (உபஅதிபர், யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), லோகநாயகி (திருகோணமலை), தேவ நாயகம் (சுவிஸ்), விஜயநாயகி(ஆசிரியர், யா/சிறுப்பிட்டிஅ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவயோகம், திருஞானம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் சண்முகசிவானந்தன் (முன்னாள் மேலதிக நீர்ப்பாசனப்பணிப்பாளர்நாயகமும் இன்நாள் இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் ஆலோசகர்), ஞானசகுந்தலா, நிகேதினி, ஜீவகௌரி (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழ்நிலவன் (சிறுப்பிட்டி), விசாலி, இளநதி, குற்றாலன், மாதுளன், கஜானன் (பொறியியல்பீட மாணவன், மொறட்டுவ), சோபிதன், சேயோன், தேநிலா (சுவிஸ்), இளநிலா (சுவிஸ்), நறுமுகை ஆகியோரின் அன்புப்பேரனும் சிவசுப்பிரமணியம், மனோரஞ்சிதம் காலஞ்சென்றசிவஞானம் ஆகியோரின்தாய்மாமனும் ஆனந்தி (கனடா), பிரதாபன் (லண்டன்), கிருபானந்தி (ஆசிரியர், யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2017) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் சிறுப்பிட்டி மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணிக்கு சிறுப்பிட்டி குடும்ப மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## மீள் கேள்வி அறிவித்தல் - 2018

கீழ்க்காணப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கானமீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2017.11.21– 2017.11.27பி.ப 03.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 2017.11.28 ந.ப 12.00 மணிவரை
கேள்விதிறக்கும் திகதி : 2017.11.28 பி.ப 12.30 மணி

2018 ஆம் ஆண்டுசந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கானகுத்தகைஅட்டவணை.

| இல | சந்தைகள் (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்தகேள்வித் தொகை (V.A.T., N.B.T. நீங்கலாக) | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (V.A.T., N.B.T. நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | சங்கானை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கானைமரக்கறிச் சந்தை (வாகனப் பாதுகாப்புநிலையம் தவிர்த்து ) | --- | 6,921,705.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானைநவீனமீன்சந்தை | --- | 1,545,600.00 | 5,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானைகோழி இறைச்சிக்கடை இல - 01 | 1,500.00 | 211,050.00 | 3,000.00 | 500.00 |
| 04 | சங்கானைகோழி இறைச்சிக்கடை இல - 02 | 1,500.00 | 211,050.00 | 3,000.00 | 500.00 |
| | சுழிபுரம் உபஅலுவலகம் | | | | |
| 01 | சத்தியக்காடுசந்தை | --- | 1,060,500.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | தொல்புரம் மத்தியசந்தை | --- | 31,500.00 | 500.00 | 250.00 |
| 03 | பல்லசுட்டிசந்தை | --- | 31,500.00 | 1,000.00 | 250.00 |
| | வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01 | வட்டுக்கோட்டைபொதுச்சந்தை | --- | 18,500.00 | 1,000.00 | 500.00 |

கேள்வியில் / கேள்விகளில் சித்திபெறுவோர் கேள்வித் தொகையின் $^{1}/_{4}$ பகுதியை 2017.11.30 ஆம் திகதிக்குமுன்னர் செலுத்திசபையடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டும். அத்துடன் மேலதிகவிபரங்களை 30.10.2017 ஆம் திகதியதினக்குரல் மற்றும் உதயன் பத்திரிகைகளில் பார்வையிடலாம்.

தலைமைஅலுவலகம்,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.
21.11.2017

செயலாளர்,
வலிகாமம் மேற்குபிரதேச சபை.










## சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

யா/ மானிப்பாய் மகளிர்கல்லூரியின் சிற்றுண்டிச் சாலையை ஒரு வருடத்திற்கு நடத்துவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்கள் 21.11.2017 ஆம் திகதியிலிருந்து வழங்கப்படும். பூரணப்படுத்திய படிவங்களை 2017.12.04 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

- சிற்றுண்டிச்சாலையில் பெண்கள் மட்டும் கடமையில் ஈடுபட முடியும்.
- கேள்விப் பத்திரங்கள் 2017.12.04 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குத் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களைப் பாடசாலை நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர், பாடசாலை அபிவிருத்திக்குழு
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 - 06 - 1945



இறப்பு 19 - 11 - 2017

## திருமதி. மகேஸ்வரி பாலகிருஷ்ணன்

மலேசியாவை பிறப்பிடமாகவும், அச்சுவேலி, தெஹிவளை ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் 19.11.2017 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பேராசிரியர் பாலகிருஷ்ணன் (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம், கலைப்பீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம், முன்னாள் முதல்வர் வவுனியா வளாகம்) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி பகவதி தம்பதியினரின் புதல்வியும், இந்திரன் (Manager, Raniyo (Pvt)Ltd), பிரதாபன் (Manager, SriLankan Airlines - Qatar), மற்றும் வசந்தன் (Manager, Ernst & Young) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி, பிருந்தினி, கோபியா, ஆகியோரின் அன்பு மாமியாரும், அக்ஷ்யா, ஆதித்யா, ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலஞ்சென்ற மகேந்திரன் (ஜனாதிபதி சட்டத்தரணி)இன் பாசமிகு தங்கையும், காலஞ்சென்ற அமிர்த்ராணியின் அன்பு மைத்துனியும், பிரசன்னா (UK), பிரமிளா (Australia) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் செவ்வாய்க்கிழமை (21.11.2017) காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. பூதவுடல் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு (Faculty of Dental Sciences, University of Peradeniya) மருத்துவ ஆராய்ச்சிக்கு கையளிக்கப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

**தகவல் - பிள்ளைகள்**
**44 - 2/2 Vanderwert place, Dehiwala**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டி – 2017




**செல்வி திருவரங்கன் கஜனி**

தேசிய ரீதியில் நடைபெற்ற ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்று சர்வதேச மட்டத்தில் நடைபெறும் போட்டிக்குத் தெரிவாகிச் சென்றுள்ளார். அவரைப் பாராட்டுவதுடன் மென்மேலும் பல உயர்வுகளைப் பெற்றுக் கொள்ள வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

## மரண அறிவித்தல்கள்

### கிருஸ்ணபிள்ள நடராசா



அராலி தெற்கு, கலட்டித் தோட்டம் வேப்பியணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை நடராசா (20.11.2017) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை -அம்பிகைப்பிள்ளை தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-பார்வதிப்பிள்ளை தம்பதியரின்அன்புமருமகனும் பூமலரின் அன்புக்கணவரும் ரவி.சுரேஷ்.ரஜீஷ்ஆகியோரின் அன்புத்தந்தையும் மிருணாளினி, ஜெயவதனி, லக்ஸ்மி, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதித்தன், பிரித்வி, கேஷா, சுஜன், சருகா, சஜிதா, தேஹாசினி, துஷேத்ரா ஆகியோரின் அன்புப்பேரனும்செல்வராஜா,பாக்கியவதிகாலஞ்சென்றவர்களான துரையப்பா, மாணிக்கராசா, சித்திரவேலாயுதம், பரமேஸ்வரி ஆகியோரின் அருமைச்சகோதரரும் சிவபாதம், சிவமலர், நடனபாதம் காலஞ்சென்றவர்களான யோகமலர், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று .பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கறுப்பிட்டிப்பிள்ளையார்கோயிலடி,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி இராசம்மா ஆறுமுகம்

ஆனைக்கோட்டை உயரப்புலத்தினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா ஆறுமுகம் நேற்று (20.11.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா அன்னமா தம்பதியினரின் அன்பு மருமகளும் பரமேஸ்வரன்(கனடா),பரமேஸ்வரி,யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் மகேந்திரன்,தருமராசா,கேதாரகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் திலிபன்,லோகநாயகி,துஸ்யந்தன், துசாந், துசாணி, துர்சியா, கஜீபன், அபினயா,கபினயா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் லக்சியா,சுவஸ்தியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2017) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கை தீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 077 087 0857

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா குணரத்தினம்

போயிட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா குணரத்தினம் 19.11.2017 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் திரு .திருமதி வேலுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் ஸ்கந்தராஜா (குமார், கனடா) வின் தாயாரும் மிதிலா (கனடா) வின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான தில்லை நாதன், சபாநாதன், கனேகேஸ்வரன், கனம்மா மற்றும் இராசம்மா (கனடா), மனோன்மணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் வர்ச்சினி, நிலானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2017) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திரு. வே.ஸ்கந்தராஜா
(குமார் - கனடா)
001416751 1843

தகவல்:
மனோன்மணி (சகோதரி)
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை பரந்தாமன்



தோற்றம் 01.11.1945 மறைவு 19.11.2017

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், மூத்தவிநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை பரந்தாமன் 19.11.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - குஞ்சம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், சதீஸ்குமார் (லண்டன்), சைலஜா (ஆசிரியர் - யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்), ஷமித்திரா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பேரவைச் செயலகம், வடமாகாண சபை), சசிகுமார் (லண்டன்), சபீஸ்குமார் (உரிமையாளர் - SK Medical இருபாலை), சபேஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி (லண்டன்), இரவிச்சந்திரன் (முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி, கோப்பாய்), றமேஸ்நேசன் (முகாமையாளர் - மக்கள் வங்கி, காங்கேசன்துறை), கிறிஸ்ரின் சோபினா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சன், ஜெனனி, அபிநயா, கானதி, கர்ஷன், நிலக்சன், ரலிஷா, ரசல்லா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

141, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 178 9751

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர் **அருட்சகோதரி வ.சகாயநாயகி** அவர்களின் அன்புத் தாயார்.



திருமதி
**வஸ்தியாம்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை**

அவர்கள் 17.11.2017 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது அதிபருக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி முருகையா



யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி முருகையா 20.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வீரவாகு சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற வீரவாகு முருகையாவின் அன்பு மனைவியும் நி. கலாதேவி, வ.ராதாதேவி, மு. யசோதரன் (Bsc QS, ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ச.நிமலன் (பிரதி அதிபர், யாழ். இந்துக்கல்லூரி), க. வரத ராஜா (டுபாய்), ய. தர்சினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமியும் நி.ஜனலக்ஷன், (Bsc Eng SANKAN), நி.பிருந்தாபன் (யாழ் இந்துக்கல்லூரி க.பொ.த உயர்தரம் 2018), வ.ஷஜித்திரா (இராமநாதன் நுண்கலைப்பீடம் யாழ்.பல்கலைக்கழகம்), வ. கோபிலக்ஷன் (யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை), ய. றொஷாந் (ஆஸ்திரேலியா), ய. நிதுரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, பூரணம், குமாரசாமி மற்றும் பூமணி, செல்லத்துரை காலஞ்சென்ற ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2017 புதன்கிழமை பி.ப. 2 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## வெங்காயத்தின் மருத்துவ குணங்கள்

நாம் அன்றாடம் உணவில் பயன்படுத்தும் வெங்காயத்தில் ஆரோக்கியமான விடயங்கள் பல உள்ளன.

வெங்காயத்தின் இயல்பைப் பார்த்தால், அதன் காரத் தன்மைக்குக் காரணம், அதில் உள்ள 'அலைல் புரொப்பைல் டை சல்பைடு' என்ற வேதிப்பொருள். அதுவே வெங்காயத்தின் வாசனைக்கும், எமது கண்களில் கண்ணீர் வருவதற்கும் காரணமாக அமைகிறது.

வெங்காயத்தில் புரதச் சத்துக்கள், தாது உப்புக்கள், விற்ற மின்கள் ஆகியவை நிறைந்திருக்கின்றன.

தொடர்ந்து போதுமான அளவு வெங்காயம் எடுத்துக் கொள்வதன் மூலம், எமது நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

குருதி அழுத்தம், இருமல், ஆஸ்துமா, காய்ச்சல், காமாலை போன்றவற்றைக் குணமாக்கும் சக்தியும், கொழுப்பைக் குறைக்கும் ஆற்றலும் வெங்காயத்துக்கு உண்டு.

தயிர், மோர், நெய் போன்ற மற்ற உணவுப் பொருட்களோடு சேர்த்துச் சாப்பிடும் போது, உடல் குளிர்ச்சியை ஏற்படுத்தும் குணம்கொண்டதாக வெங்காயம் உள்ளது. இதில் கார்போ ஹைதரேட், புரதம், இரும்பு, கல்சியம், பொஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் நீர்ச்சத்துக்கள் அதிகமாக உள்ளன.

முதுமையில் வரும் மூட்டு அழற்சியை கட்டுப்படுத்தும் ஆற்றல் வெங்காயத்துக்கு உண்டு. வெங்காயத்தையும், கடுகு எண்ணெய்யையும் சேர்த்து மூட்டு வலி உள்ள இடத்தில் தடவினால் வலி குறையும்.

புற்றுநோயைத் தடுக்கும் மருந்துப்பொருள் வெங்காயத்தில் இருப்பதாக ஓர் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

தேவை
**பூக்கன்று பராமரிப்பதற்கு பெண்பிள்ளைகள் தேவை.**
ஆதரவு கைத்தொழில் நிலையம் - மீசாலை
077 735 1148

## விற்பனைக்கு

NPKD XXXX இலக்கமுடைய நிசான் சனி 15 (Ex saloon) கார் விற்பனைக்கு உண்டு. (121960 km ஓடியது)
தொடர்பு - 077 737 4925

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் மகேந்திரன்

அச்சுவேலி உலவிற்குளப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், விசுவமடுவை வசிப்பிடமாகவும், கோப்பாயை உறைவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகேந்திரன் 20.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

இவரது மரணச்சடங்கு கோப்பாயில் அவரது உறைவிடத்தில் நடத்தப்படுகிறது அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.11.2017) புதன்கிழமை கோப்பாய் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். தகனக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. ஜெயராசா

## பிணைமுறி...

நிதிக் கூற்று மற்றும் மத்திய வங்கி நிதி விவகாரங்களில் எனக்கு அனுபவம் இல்லாததாலேயே அந்தப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தேன்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக்குழுவிடம் நேற்றுச் சாட்சியமளித்தார். நேற்று முற்பகல் 9.50மணி அளவில் ரணில் விக்கிரமசிங்க ஆணைக்குழுவுக்குள் சென்றார். மூத்த சட்டத்தரணி கௌரிசங்கர் தவராசாவின் அனுசரணையுடன் அரச சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ ஆகியோருடன் ரணில் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம் வழங்கினார்.

ஆணைக்குழு 48 கேள்விகள் அடங்கிய கோவை ஒன்றை ஏற்கனவே ரணிலுக்கு அனுப்பிவைத்திருந்தது. அந்தக் கேள்விகளுக்கு ரணில் பதில்களை வழங்கினார். அந்தப் பதில்களில் திருப்தியடையாத ஆணைக்குழு, வாய்மொழிமூல சாட்சியப் பதிவுகளைப் பெறுவதற்காக ரணிலை நேற்று நேரடியாக அழைத்திருந்தது.

ஆணைக்குழுவால் 28 கேள்விகளும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் 20 கேள்விகளும் ரணிலிடம் கேட்கப்பட்டன.

அவற்றுக்கான பதில்களோடு இணைத்து மேலதிக தரவுகளையும் மத்திய வங்கி, நிதிக்கொள்கை ஆவணங்களையும் ஆணைக்குழுவிடம் ரணில் முன்வைத்தார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

கே: உ 365 (1 ,2) ஆகிய கோப்புகளில் பெர்பெர்ச்சுவல் டிரஸ் ரீஸ் நிறுவனம் பெர்பெர்ச்சுவல் டிரஸ் ரீஸ் ஹோல்டிங், பெர்பெர்ச்சுவல் கெபிடல் ஆகியன கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் என்பதை அறிவீர்களா?

ப: அறிவேன். ஆனால், பெர்பெர்ச்சுவல் டிரஸ் ரீஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தான் நான் அறிந்திருக்கவில்லை.

கே: அர்ஜுன் அலோசியஸை உங்களுக்குத் தெரியுமா?

ப: தெரியும்.

கே: இரண்டு கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள் மத்திய வங்கியின் முதன்மையான நிறுவனங்களாக இருந்தமை உங்களுக்குத் தெரியுமா?

ப: தெரியாது.

கே: தனியார் முதலீட்டு ஏல முறைமை நிறுத்தப்பட்டிருந்தது. ஏன் எனச் சொல்லமுடியுமா?

ப: இந்த முறைமை வெளிப்படைத்தன்மை குறைவாக இருந்தது. அதனால்தான் பிணைமுறி ஏல முறைமைக்கு நாம் மாற்றியமைத்தோம். மத்திய வங்கியின் அதிகாரங்கள் தன்னிச்சையாகக் காணப்பட்டமையாலும், நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறவேண்டிய நிறுவனமாக மத்திய வங்கியை மாற்றவேண்டியிருந்தது. அத்தோடு, சட்டமா அதிபரின் அதிகாரமும் பலப்படுத்தப்படவேண்டியிருந்தது.

கே: 2015 பெப்ரவரி 27 அன்று நடந்த ஏலத்தின் பின்னர் மதியம் 12.38 மணிக்கு அர்ஜுன மகேந்திரனிடமிருந்து உங்களுக்கு தொலைபேசி அழைப்பு வந்ததா?

ப: தெரியவில்லை, சிலநேரம் நான் காரியாலயத்தில் இருக்கும்போது தொலைபேசி அழைப்பு வந்தால் அது யார் எனப் பார்த்துவிட்டு என்னிடம் கொண்டுவந்து தருவார்கள்.

கே: அவ்வாறு அர்ஜுன மகேந்திரனின் அழைப்பு உங்களுக்கு அறிவிக்கப்படவில்லையா?

ப: இல்லை.

கே: அன்றைய தினமே பி.ப. வேளையில் அர்ஜுன மகேந்திரன் மூன்று தடவைகள் உங்களுக்குத் தொலைபேசி அழைப்பு மேற்கொண்டாரா?

ப: ஆம்.

கே: அப்போது அவர் என்ன சொன்னார்?

ப: பிணைமுறி ஏலத்தின் மூலம் 10 பில்லியன் ரூபா நிதியைப் பெற்றுகொள்ள முடியும் எனவும், அது தொடர்பில் கவலைகொள்ளத் தேவையில்லை எனவும் கூறினார்.

கே: 2015 முதற் காலாண்டில் அரசுக்கு நிதிப் பற்றாக்குறை அதிகமாகக் காணப்பட்டதா?

ப: ஆம். கடந்த அரசில் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தமையால் அதற்கான நிதியை ஏலத்தின் மூலம் பெறத் தீர்மானித்தோம். இது தொடர்பில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு ஆலோசனை வழங்கியிருந்தேன். நிதிக்கூற்று மற்றும் மத்திய வங்கி நிதி விவகாரங்களில் எனக்கு அனுபவம் இல்லாததால் அந்தப் பொறுப்பு அர்ஜுன மகேந்திரனிடமே வழங்கப்பட்டிருந்தது.

கே: பொதுக் கட்டுப்பாட்டு ஏல முறைமை தொடர்பில் வழிநடத்தல்களை யார் கொடுத்தது?

ப: நான்தான் கொடுத்தேன். அரச கொள்கை திட்டங்களின்படியும், சட்ட திட்டங்களின் படியும் செயற்படுவார் என்ற வகையில் ஆலோசனைகளை வழங்கியிருந்தேன். இது தொடர்பான அனைத்து ஆவணங்களும் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன - என்றார்.

சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவும் சில தெளிவுபடுத்தல்களுக்காக ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் சில வினாக்களை கேட்கவேண்டுமென ஆணைக்குழுவிடம் கோரியிருந்தார். அவர் தரப்புக் கேள்விகள் வருமாறு

கே: பதுமநாபன் 2015இலிருந்தே நிதி அமைச்சு மற்றும் பொருளாதார மாநாடுகளில் அரச உறுப்பினராகக் கலந்துகொள்கிறாரே, யார் அவர்?

ப: அவர் எனது பொருளாதார ஆலோசகர். பொருளாதாரக் கொள்கைத் திட்டமிடல் தொடர்பில் முக்கி விடயங்கள் நடக்கும்போது அதனை என்னிடம் அறிவிப்பார்.

கே: அவ்வாறெனில், அவர் சில அமைச்சர்களுடன் இடம்பெற்றுள்ள கலந்துரையாடல்கள் தொடர்பில் உங்களிடம் அறிவித்தாரா?

ப: சரியாகத் தெரியவில்லை.

பெர்பெச்சுவல் டிரஸ் ரீஸ் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து அலோசியஸை அகற்றுமாறு நான் ஏற்கனவே மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்குக் கூறியிருந்தேன். ஆனால், அதன் பின்னர் அவர் பதவியிலிருந்து அகற்றப்படாதது எனக்கு அறிவிக்கப்படவில்லை - என்றார்.

இதேவேளை, அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயால் அறிவிக்கப்பட்டிருந்த சொகுசு வீட்டுக் கொள்வனவு தொடர்பில் தான் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் கலந்துரையாடியிருந்தார் எனவும் ரணில் குறிப்பிட்டார். (உ-4)

## குடும்ப...

சேர்ந்த சிறுமியை அதே இடத்தைச் சேர்ந்த 47 வயதுடைய குடும்பத் தலைவர் 2012 ஆம் ஆண்டு 3 தடவைகள் வன்புணர்ந்தார். அவர் 6 பிள்ளைகளின் தந்தை. சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் மீதான வழக்கு சட்டமா அதிபரால் யாழ்ப்பாண மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணைகளின்போது சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார்.

சிறுமியை அவர் 3 தடவைகள் வன்புணர்ந்திருந்தார். ஒவ்வொரு தடவைக்கும் 15 வருடங்கள் என்ற ரீதியில் 45 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் தண்டனைகளை அவர் ஏக காலத்தில் அனுபவிக்கலாம் என்று நீதிமன்று கூறியதால் அவர் 15 வருடங்கள் கட்டாயம் கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவித்தால் போதுமானது.

தவிர ஒவ்வொரு வன்புணர்வுக்கும் இழப்பீடாக சிறுமிக்குத் தலா 2 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் மன்று பணித்தது. அதன்படி 3 குற்றங்களுக்காகவும் அவர் 6 லட்சம் ரூபாவைச் சிறுமிக்கு வழங்க வேண்டும்.

அவற்றை அவர் வழங்கத் தவறின் குற்றவாளி ஒவ்வொரு குற்றத்திற்கும் தலா ஒரு வருடம் வீதம் மேலும் 3 வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். நீதிமன்றத் தண்டமாக தலா 20 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின் அவர் மேலும் 18 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். என்று நீதிமன்று தீர்ப்பளித்தது. சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந் வழக்கை நெறிப்படுத்தினார். (உ-4)

## ரணிலும்...

அதன் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் சட்டத்தின் பிடியிலிருந்து ஒருபோதும் தப்பிக்கவே முடியாது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மத்திய வங்கியில் பிணைமுறி மோசடி இடம்பெற்றுள்ளது என்று ஜே.வி.பிதான் முதன்முதலில் உண்மையை வெளியுலகுக்குக் கொண்டுவந்தது. இதையடுத்து இந்த விவகாரத்தில் தலைமை அமைச்சருக்கும் தொடர்புள்ளது என்றும் நாம்தான் தகவல் வெளியிட்டிருந்தோம். இவ்வாறு, நாம் கூறியவைதான் தற்போது ஒன்றன்பின் ஒன்றாக நடந்துகொண்டிருக்கின்றன. இந்த விவகாரத்தைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவரும் சட்டத்தின் பிடியிலிருந்து ஒருபோதும் தப்பிக்கவே முடியாது. இது அவர்களுக்கான பெரிய ஒரு தோல்வியாகவே அமையப்போகின்றது"- என்றார். (உ-4)

## அரசியல்...

உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

"நாட்டில் இன ரீதியான பதற்றத்தை ஊக்குவிக்க முயற்சிப்போர் எந்த நேரமும் அச்சுறுத்திக்கொண்டிருக்க நாம் இடமளிக்கமுடியாது. சில சந்தர்ப்பங்களில் நாம் சரியானதைச் செய்யவேண்டும்" என்றும் சம்பந்தன் வலியுறுத்தினார்.

அத்துடன், அரச தலைவரைக் கொலைசெய்ய முயற்சித்த நபருக்குப் பொதுமன்னிப்பு வழங்கமுடியுமென்றால் பாரதூரத்தன்மையில் அதைவிடவும் குறைவான குற்றங்களை இழைத்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் பொதுமன்னிப்பு வழங்கமுடியாது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

"பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் சிலருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் சிலர்மீது இன்னும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாமலும் இன்னுமொரு பகுதியினர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவர்கள் தொடர்பான வழக்குகள் நிலுவையிலும் இருக்கின்றன. இந்த விடயம் தொடர்பில் அரச தலைவருடனும் தலைமை அமைச்சருடனும் பேசியிருக்கிறேன். அவர்களது நிலைப்பாடுகள் நியாயமாக இருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

தற்போது புதிய நீதி அமைச்சர் இருக்கிறார். அவருடன் இந்தப் பிரச்சினையை நியாயபூர்வமான வகையில் தீர்த்துக்கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். இதற்காக முன்னாள் நீதி அமைச்சரை நான் குறை கூறவில்லை. அவர் எம்முடன் முரண்பட்டிருக்கவில்லை. எனினும், அவரால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசியல் காரணங்களுக்காக செய்யப்பட்ட சில குற்றங்கள் பற்றியதாகவே இந்த விடயம் காணப்படுகிறது. அந்த வகையில், இது அரசியல் காரணங்களுக்காக செய்யப்பட்ட குற்றங்களே தவிர, சுயலாபத்துக்காக செய்யப்பட்டவை அல்ல. அரசியல் காரணங்களுக்கான குற்றங்களைப் பொறுத்தவரையில் அவ்வாறான நபர்களுக்கு பொதுமன்னிப்பளிக்க முடியும். அவர்களை விடுதலைசெய்ய முடியும். அரசியல் ரீதியான தீர்மானங்கள் இதற்கு முன்னர் இந்த நாட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதை நான் இந்தச் சபையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

1971, 1987, 1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கிளர்ச்சிகளின்போது அரசியல் காரணங்களுக்காக குற்றமிழைத்த பெரும் எண்ணிக்கையிலானோர் பின்னர் பொதுமன்னிப்பளிக்கப்பட்டு விடுதலைசெய்யப்பட்டனர். ஆகவே, அதை ஏன் தற்போது மீண்டும் செய்யமுடியாது என்ற கேள்வியை நான் ஏற்கனவே முன்வைத்திருந்ததுடன், மீண்டும் அதே கேள்வியை இங்கு முன்வைக்கிறேன்.

யாரேனும் அரசியல் காரணங்களுக்காகவன்றி தனிப்பட்ட அல்லது வேறு காரணங்களுக்காக குற்றமிழைத்திருந்தால் இதை நான் கேட்கமாட்டேன். இந்த நபர்கள் அரசியல் காரணங்களுக்கான குற்றங்களை இழைத்தனர் என்பதில் உங்களுக்கு உடன்பாடு இருப்பின், கடந்த காலங்களில் இவ்வாறான விடயங்கள் கையாளப்பட்ட விதத்திலேயே இவர்களும் நடத்தப்படவேண்டும்.

அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சட்டத்தை நீக்குவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உங்களது அரசு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உறுதியளித்திருக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டுவரப்படுவதற்கான சட்டமொன்றையும் தயாரித்து வருகிறீர்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை நீங்கள் இல்லாதொழிக்கச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், அதே சட்டத்தின்கீழ் நபர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதை நீங்கள் எப்படி நியாயப்படுத்துவீர்கள்?

தம்மைப் படுகொலைசெய்ய முயற்சித்திருந்த நபருக்கு அரச தலைவர் பொதுமன்னிப்பு வழங்கினார். ஏனெனில், தனிப்பட்ட காரணங்களுக்காகவன்றி அரசியல் காரணங்களுக்காகவே அவர் கொலை முயற்சியை மேற்கொண்டிருந்தார் என்று அரச தலைவர் நம்பச்செய்யப்பட்டிருந்தார். அரச தலைவரைக் கொலை செய்ய முயற்சித்த நபருக்கு பொதுமன்னிப்பு வழங்கமுடியுமென்றால் பாரதூரத்தன்மையில் அதைவிடவும் குறைவான குற்றங்களை இழைத்த நபர்களுக்கு ஏன் பொதுமன்னிப்பு வழங்கமுடியாது?

இதுதான் நாம் சிந்திக்கவேண்டிய விடயங்கள். துரதிர்ஷ்டவசமாக முன்னைய நீதி அமைச்சர் இது தொடர்பில் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. ஆகவே, அரச தலைவருடனான கொரிய பயணத்தை முடித்து நாடு திரும்பியதும் சட்டமா அதிபர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அழைக்கப்படவேண்டிய ஏனைய நபர்களை அழைத்து கூட்டமொன்றைக் கூட்டுங்கள். நாம் இந்த விடயம் பற்றி கலந்துரையாடுவோம். நாம் இதற்கான சில ஏற்பாடுகளைச் செய்துகொள்வோம். ஏனெனில், இந்தக் கைதிகள் தொடர்பில் வடக்கிலும் அதேபோல் கிழக்கிலும் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் உணவு ஒறுப்புப் போராட்டங்களும் இடம்பெறுகின்றன.

**பல்கலைக் கடிதம்**

இதேநேரம், இந்த விடயம் பற்றி கலந்துரையாட யாழ்ப்பாணம் வருமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து எனக்கு கடிதமொன்று கிடைத்துள்ளது. கொழும்பில் மிக முக்கியமான ஏனைய பொறுப்புகள் இருப்பதால் எனக்கு யாழ்ப்பாணம் செல்லமுடியாமலுள்ளது. எவ்வாறிருப்பினும், மாணவர்களின் உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன்.

எமது கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இங்கு உரையாற்றும்போது வவுனியா மேல் நீதிமன்றத்திலிருந்து அநுராதபுரம் மேல்நீதிமன்றத்துக்கு மூன்று பேரின் வழக்குகள் மாற்றப்பட்டமை தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த விடயம் சம்பந்தமாக நானும் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையொன்றைக் கொண்டு வந்திருந்தேன். அந்தநேரம் புதிய நீதியமைச்சர் நாட்டில் இருக்கவில்லை. தற்போது வரையில் இந்த விடயம் இன்னமும் தீர்க்கப்படாத நிலைமையிலேயே உள்ளது.

வழக்குகள் இடமாற்றப்படுகின்றபோதும், விடுதலை செய்யப்படுகின்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றபோதும் இனரீதியான பிரச்சினையை எழுப்புவதற்கு ஒரு குழுவினர் முனைகின்றார்கள். கைதிகளை விடுதலை செய்தால் நாடு பிளவடைந்து விடும் என்று பரப்புரை செய்ய முயல்கின்றார்கள். இவ்வாறானவர்களின் கூற்றுகளுக்குச் செவிமடுத்து நீதி அமைச்சரும் அரசும் அச்சமடையமுடியாது.

அரசு பதவியேற்று மூன்று வருடங்களாகின்றபோதும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாதுள்ளது. இந்த நாட்டில் நல்லிணக்கம், ஐக்கியம், என்பன ஏற்படுத்தப்படவேண்டும். அவற்றை கைதிகள் விடயம் பாதிக்கக்கூடாது. இளைஞர்கள் தாங்கள் வேறுவிதமாக நடத்தப்படுகின்றோம் என்ற மனநிலையை அடையக்கூடாது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரானபோர் நிறைவடைந்து விட்டது. பிரிக்கமுடியாத, பிளவுபடுத்த முடியாத ஐக்கிய நாட்டுக்குள்ளேயே அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றோம். ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான விடயங்களை விடுத்து செயற்படுத்த முடியாது. ஆகவே அரசியல் கைதிகளின் விடயத்தை உடனடியாகத் தீர்க்க வேண்டும். நீதி அமைச்சர் தனது கொரிய பயணம் நிறைவடைந்தவுடன் இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (உ-4,31)

## மாவீரர்...

மற்றும் திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய கிழக்கிலுள்ள 3 மாவட்டங்களிலும் மாவீரர் நினைவேந்தல் வாரம் இம்முறை உணர்வெழுச்சியுடன் இன்று ஆரம்பமாகின்றது. இதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் பொதுமக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

அதேவேளை, வடக்கு, கிழக்கின் பொதுவான இடங்களிலும் மாவீரர் நினைவேந்தல் வார நிகழ்வுகள் இன்று பகிரங்கமாக ஆரம்பமாகவுள்ளன.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தால் 1989ஆம் ஆண்டிலிருந்து மாவீரர் நாள் நினைவுகூரப்பட்டு வருகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தமிழர்களின் உரிமைக்காக தமிழீழ இலட்சியத்துக்காகப் போர்க்களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூருவதற்காக நவம்பர் மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதிவரை மாவீரர் நினைவேந்தல் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசமெங்கும் இன்று ஆரம்பமாகும் மாவீரர் நினைவேந்தல் வாரம் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் முதன்மை நிகழ்வுடன் முடிவடையும். (உ-4)

# எக்ஸ்புளோரா நிறுவன மாணவனுக்குத் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், நவ. 21
இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசியமட்ட கராத்தே தொடரில் மானிப்பாய் எக்ஸ்புளோரா நிறுவன மாணவனுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
கொழும்பு சுகததாச உள்ளரங்கில் அண்மையில் இடம்பெற்ற 10 வயதுக்கும் 13 வயதுக்கும் இடைப்பட்ட வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில், ஜெ.தமிழ்ச்செல்வன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். இதே வயதுப்பிரிவில் குமித்தே போட்டியில உ.நவீன் மற்றும் ச.சங்கீர்த்தன் ஆகியோர் சிறந்த வீரர்களாகத் தெரிவாகினர்.
(ம-23)





# மகாதேவா சுவாமிகள் இல்லம் தங்கப்பதக்கத்தை தனதாக்கல்

யாழ்ப்பாணம், நவ. 21
இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசிய கராத்தே தொடரில் மகாதேவா சுவாமிகள் இல்ல மாணவன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.
கொழும்பு சுகததாச உள்ளரங்கில் அண்மையில் இடம்பெற்ற 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் மகாதேவா சுவாமிகள் இல்லத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜே.கிருபாகரன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினர். (ம-23)



# வசந்தசிறி சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 21
தவாடி காளிஅம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் தாச்சித் தொடரில், வசந்தசிறி அணி கிண்ணம் வென்றது.
காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி 8:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துபுதுமடம்வைகறை விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி 6:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது . (ம-23)

# செட்டிகுளம் ம.வி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 21
கணபதிப்பிள்ளை நடராசா, நடராசா செல்வதி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.
வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
முன்னதாக இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து முஸ்லிம் மகா வித்தியா லய 'பி' அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## சமி, கோக்லி, டிக்வெல்ல கடும் வார்த்தை மோதல்

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று, இலங்கை வீரர் டிக்வெல்லவுக்கும் இந்திய வீரர் சமிக்கும் இடையில் வார்த்தை மோதல் இடம் பெற்றது. கோக்லியும் இந்த விவகாரத்தில் தலையிட்டதை அடுத்து நிலமை சற்று தீவிரமடைந்தது.

இலங்கை அணி தோல்வியை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தபோது, சமி வீசிய பந்துப்பரிமாற்றத்தை எதிர்த்தாடினார் டிக்வெல்ல. வேகப்பந்து வீச்சாளரான சமி பந்துவீசுவதற்காக விரைந்து வந்துகொண்டிருந்தபோது அவரை இடைமறித்து, தான் பந்தை எதிர்கொள்ளத் தயாராக இல்லை என்பதுபோல் சைகை செய்து சமியை திருப்பி அனுப்பினார் டிக்வெல்ல. அடுத்த பந்தை சமி திடீர் மேலெழும்பல் தன்மையுள்ளதாக (எக்ஸ்ரா பவுன்சர்) வீசினார். இருவருக்கும் இடையிலான வாக்குவாதம் முற்றியது. அதே பந்துப்பரிமாற்றத்தின் பிறிதொரு பந்தை சமி வீச ஓடிவரும்போது, முன்னர் செய்தது போலவே தான் பந்தை எதிர்கொள்ளத் தயாராக இல்லை என்பதுபோல் சைகை செய்து சமியை திருப்பி அனுப் பினார் டிக்வெல்ல. இதையடுத்து கோக்லி இந்த விவகாரத்தில் தலையிட்டார். சில நொடிகளில் மைதானத்தில் பரபரப்புத் தொற்றிக்கொண்டது. நடுவர்களின் தலை யீட்டை அடுத்து வீரர்கள் சமாதானப்படுத்தப்பட்டனர். எனினும் இந்த விவகாரத்தில் கடும் அதிருப்தியடைந்தவரைப் போல் கோக்லி தொடர்ந்தும் நடந்துகொண்டார். (ம)





# தப்பித்தது இலங்கை

## தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனகதை

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதல் நாளில் வெற்றிபெறக் கூடிய நிலையில் இருந்த இலங்கை அணி, இறுதி நாளான நேற்று தோல்வியைத் தவிர்க்கப் போராடி மந்தமான வெளிச்சம் காரணமாக ஆட்டத்தை சமநிலையில் முடித்துக்கொண்டது.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம்மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இலங்கை வேகப்பந்து வீச்சாளர்களின் சிறந்த பந்துவீச்சால் 172 ஓட்டங்களில் சுருண்டது இந்திய அணி. அதிகபட்சமாக புஜாரா 52 ஓட்டங்களையும், சகா 29 ஓட்டங்களையும், சமி 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லக்மல் 4 இலக்குகளையும், கமகே, சானக, பெரேரா மூவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 294 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கேரத் 67 ஓட்டங்களையும், மத்தியூஸ் 52 ஓட்டங்களையும், திரிமன்னே 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார், சமி இருவரும் தலா 4 இலக்குகளையும், யாதவ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

122 ஓட்டங்கள் பின்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி ஒரு இலக்கை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் முடிவுக்கு வந்தது. லோகேஸ் ராகுல் 73 ஓட்டங்களுடனும், புஜாரா 2 ஓட்டங்களுடனும் ஐந்தாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராகுல். 22 ஓட்டங்களுடன் புஜாரா வீழ்ந்தார். கோக்லி தொடர்ந்தும் நிலைத்து நின்று அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஒருநாள் ஆட்டங்களில் பாணியில் கோக்லியின் ரண்வேட்டை தொடர்ந்தது. 119 பந்துகளில் சதம் கடந்தார் கோக்லி. இந்திய அணி 8 இலக்குகளை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார் கோக்லி.

பந்துவீச்சில் லக்மல், சானக இருவரும் தலா 3 இலக்குகளையும், கமகே, பெரேரா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

231 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கியது இலங்கை அணி. முதலாவது பந்துப்பரிமாற்றத்திலேயே ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் சமரவிக்கிரம. ஓர் ஓட்டத்துடன் பவிலியனுக்குத் திருப்பப்பட்டார் கருணாரத்ன. 7 ஓட்டங்களுடன் திரிமன்னே ஆட்டமிழந்தார். சந்திமல், டிக்வெல்ல முறையே 20, 27 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டனர். இந்தியாவில் வைத்து இந்தியாவை வீழ்த்திவிடலாம் என்ற எண்ணத்தில் இருந்த இலங்கை அணி தோல்வியைத் தடுக்க கடுமையாகப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டது. இலங்கை அணி 7 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மந்தமான வெளிச்சம் காரணமாக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

(ம)

## மலிங்க 'அவுட்'

அடுத்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியில் இருந்து வேகப் பந்து வீச்சாளரான மலிங்க வெளியேற்றப்பட அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் நடத்தப்படும் ஐ.பி.எல். தொடர் மிகவும் பிரபலமானது. கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரின் போது முறைகேடுகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகளுக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை இந்த வருடத்துடன் முடிவடைந்தது. அடுத்த வருடம் இந்த இரண்டு அணிகளும் மீண்டும் களமிறங்குகின்றன. இதையடுத்து ஒவ்வொரு அணிகளும் தலா மூன்று வீரர்களை மட்டுமே தக்க வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் மும்பை அணி தக்கவைக்கத் திட்டமிட்டுள்ள மூன்று வீரர்களின் விவரங்களும் சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ளன. ரோகித், பும்ரா, மக் கெலிநகன் ஆகியோரையே மும்பை அணி தக்கவைக்கத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 21

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிமாட் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## நட்பு ரீதியிலான ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 21

சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் கால்பந்தாட்ட அணிக்கும் யாழ்ப்பாண மாவட்ட கால்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான ஆட்டமொன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-23)

## மைக்கல் சூமாக்கரின் கார் 120 கோடி ரூபாவுக்கு ஏலம்

பிரபல கார் பந்தய வீரரான மைக்கேல் சூமாக்கர் பயன்படுத்திய கார் இலங்கை மதிப்பில் சுமார் 120 கோடி ரூபாவுக்கு, ஏலத்தில் விற்கப்பட்டது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள சோத்பிஸ் ஏல விற்பனை நிலயத்தால் இந்த ஏலம் நடத்தப்பட்டுள்ளது. இலங்கை மதிப்பில் சுமார் 120 கோடி ரூபாவுக்கு கார் ஏலத்தில் விற்கப்பட்டது. இந்த ஏலத்தின் ஒரு தொகைப் பணம் சூமாக்கரின் தொண்டு நிறுவனத்துக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது

(ம)



# வென்றது பாரிஸ் செயின்ட் ஜேர்மன்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது. பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியை எதிர்த்து நன்டீஸ் மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றி பெற்றது.

(ம)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
இன்றுடன் பதிவுகள் நிறைவடைகின்றன.
0768226243
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240
சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

அமெரிக்க லொத்தர் விசா
இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)
18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம்
இன்னும் 1 தினம் மட்டுமே உள்ளது
இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு
யாழ்ப்பாணம் /வேலணை/கிளிநொச்சி/முல்லை/வவுனியா
அண்ணா பொதிகள் சேவை
வெளிநாடு / உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
976 - கே கே எஸ் வீதி , நாச்சிமார்கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

O/L 2017 கல்விக் கருத்தரங்கு
(க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கானது)

| சனி (25.11.2017) | ஞாயிறு (26.11.2017) |
|---|---|
| விஞ்ஞானம் A.சியாமளரூபன் - 8.30 -11.30 | வரலாறு R.S.சந்திரன் 8.30 -12.00 |
| ஆங்கிலம் M.துசீபன் - 12.00 - 2.00 | கணிதம் K.உமாகரன் 2.30 -6.00 |
| தமிழ் N.நித்தி - 2.30 - 6.00 | |

இடம் : TECHNO WORLD
கட்டணம் .100 /= ஒருபாடம்
077 017 5346
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்.

# SLT PEO TV - தொலைகாட்சி காண்பியல் கலையின் நவீன திருப்புமுனை

எமது நாட்டின் முன்னணி Internet Protocol தொலைகாட்சி சேவை வழங்குநரான "SLT PEO TV" தொலைகாட்சித் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதென்றால் அது மிகையாகாது. சில ஆண்டுகளுக்கு முன்னர் வரைக்கும் நீங்கள் விரும்பிய நிகழ்ச்சியை நீங்கள் விரும்பிய நேரத்தில் பார்க்க முடியாத நிலையே காணப்பட்டது. காரணம், அது உங்களுடைய கட்டுபாட்டை மீறிய ஒன்றாக இருந்தமை ஆகும். புதிய தகவல்களை அறிந்துக் கொள்வதற்கு இரவு 8.00 மணி செய்தி அறிக்கை வரை காத்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. அதை தவற விடும் பட்சத்தில் உங்களால் மீளவும் அச் செய்தி ஒளிபரப்பை பார்வையிட முடியாத நிலையே காணப்பட்டது. ஆனால், இப்பொழுது PEO TV இருப்பதால் நீங்கள் விரும்பும் நிகழ்ச்சிகளை நீங்கள் விரும்பும் நேரங்களில் கண்டு மகிழும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

பல்வேறு சிறப்பம்சங்களுடன் கூடிய இலங்கையின் முதலாவது Pay TV சேவையான "SLT PEO TV" இலங்கை மக்களின் மனங்களை வென்று வெற்றிநடை போடக் காரணம், அனைவராலும் விரும்பப்படுகின்ற Rewind TV என்ற சிறப்பம்சத்தை அறிமுகப்படுத்தி பார்வையாளருக்கு தான் தவறவிட்ட தொலைகாட்சி நிகழ்ச்சிகளை மீண்டும் கண்டுகளிப்பதற்கு வாயப்பளிக்கின்ற வசதியினை அது கொண்டிருப்பதால் ஆகும்.

PEO TV முதல் தடவையாக அறிமுகப்படுத்திய இன்னுமொரு சிறப்பம்சமான Video on Demand மூலம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளில் வெளிவந்த க்ளசிக், நகைச்சுவை உள்ளிட்ட பல்வேறு வகை சார்ந்த ஏராளமான திரைப்படங்களை கண்டு களிக் கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தமது வாடிக்கையாளர்களுக்கு தான் விரும்பிய திரைப்படங்களை அவர்களின் அமர் வறையிலிருந்தவாறு ஒரு பொத்தானை அழுத்திய மட்டில் கண்டு களிக்கும் மகத்தான வசதியினை Video on Demand வழங்குகிறது.

Picture in Picture மூலம் இரு வேறு தொலைகாட்சி அலைவரிசைகளை ஒரே நேரத்தில் ஒரே திரையில் காணும் அரிய வாயப்பினையும் அது வழங்குகிறது. கிரிக்கட் போட்டியின் இறுதி பந்து ஓவர்களை தவற விடாமல் நீங்கள் விரும்பிய தொலைகாட்சி நாடகத்தையும் ஒரே நேரத்தில் கண்டு களிக்க முடியும்.

Music on Demand என்பது ஜனரஞ்சகமான பாடகர்களின் பல்வேறு பாடல்களை உங்களுக்கு அளிக்கும் இன்னுமொரு மனங்கவர் அங்கமாகும். அதன் மூலம் உங்களுக்கு பிடித்தமான இசையால் நீங்கள் வாழும் சூழலை இனிமையான ஓர் இடமாக மாற்றி விடலாம்.

Subscription Video on Demand மூலம் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் திரைப்படங்களோடு சிறுவர்களின் ரசனை அறிந்து தயாரிக்கப் பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளையும் கண்டு மகிழலாம்.

இப்படி பல சிறப்பம்சங்களுக்கு மேலதிகமாக பெற்றோர்களின் கட்டுப்பாடு எனப்படும் Parental Control மூலம் சிறுவர்களுக்கு உகந்த நிகழச்சிகளை மாத்திரம் கண்டு களிக்கும் வசதியினை ஏற்படுத்த முடியும். அத்தோடு, கல்வி கற்கின்ற பருவத்தினருக்கு மாத்திரமின்றி வயது வந்தோர்களுக்கும் தொலைகாட்சியை பார்வையிடுவதன் மூலம் பயன்பெறக்கூடிய வகையில் பல்வேறு கல்வி சார் அலைவரிசைகளையும் "SLT PEO TV" சேவை தன்வசம் கொண்டுள்ளது.

முழு உலகத்தையே உங்கள் கண் முன் கொண்டு வர வல்ல உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற சர்வதேச அலைவரிசைகளையும் அதிக கவனம் ஈர்த்த உள்நாட்டு அலைவரிசைகளையும் SLT PEO TV தொலைகாட்சி சேவை கொண்டுள்ளது. மிகவும் ஜனரஞ்சகமான HD தொலைகாட்சி அலைவரிசையின் வருகையோடு இன்று அது மேலும் வளர்ச்சி அடைந்து காணப்படுகிறது.

இன்றளவில் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் அலைவரிசைகளுக்கு அப்பால் சென்று பட்டமளிப்பு விழாக்கள், விருது வழங்கும் நிகழ்வுகள், கண்காட்சிகள், விளையாட்டு விழாக்கள் மற்றும் சாகச நிகழ்ச்சிகள், படைப்பியல் வெளியீடுகள் மற்றும் மக்கள் ஆர்வங் கொண்டுள்ள மற்றும் பிரச்சாரம் தேவைப்படுகின்ற எந்தவொரு நிகழ்வினதும் நேரடி ஒளிபரப்பு சேவைகளையும் EVENT TV ஊடாக வழங்குவதற்கு PEO TV நடவடிக்கை எடுத்துள்ளது

மேலும், நாடெங்கிலும் உள்ள உங்கள் நேயர்களை இணைத்துக் கொண்டு நேரடி பயிற்சி நிகழ்ச்சிகளை SLT PEO TV வலையமைப்பு ஊடாக ஒளிபரப்புவதற்கு PEO TV தயாராக உள்ளது. மூடிய அலைவரிசை (Closed Channel) ஒன்றின் மூலம் உங்களின் பயிற்சித் தேவைகள் மற்றும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடமொன்றுக்கு நேரடி பயிற்சி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மற்றும் செயலமர்வுகளை ஒளிரப்பவும் இதன் மூலம் வாய்ப்பு கிடைப்பதோடு அதன் மூலம் யாதேனுமொரு நிறுவனத் துக்கோ அல்லது அமைப்புக்கோ குறித்த ஒரு நேரத்தில் தமது பிராந்திய அலுவலகங்கள், கிளைகள் மாத்திரமின்றி எந்தவொரு தரப்புடனும் இணைவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

அத்தோடு நிகரற்றதும் ஒவ்வொரு நிறுவனத்துக்கே உரிய நிறுவனம் சார் தீர்வுகளை வழங்கி விருந்தோம்பல் துறையின் சேவைகளை குறிப்பிடத்தக்க மாற்றத்துக்குள்ளாக்கி அவற்றுக்கு அதிக பெறுமதியை சேர்ப்பதற்கு SLT PEO TV சேவையினால் முடிந்துள்ளது.

PEO TV இன் வருகையோடு தொலைகாட்சி பார்க்கும் மரபில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவும் நாளுக்கு நாள் அதனுடன் இணைகின்ற இலங்கையர்களுக்கு புதியதொரு தொலைகாட்சி அனுபவத்தை வழங்குவதற்கும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் முடிந்துள்ளது.

★★★




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.